விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 வைகாசி 01 ஞாயிற்றுக்கிழமை (15.05.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 147

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## 'வெள்ளைக் கொடியுடன் மெதுவாகச் செல்லுங்கள்'

# இராணுவத்தினரிடம் சரணடையுமாறு

# புலித்தேவனுக்கு ஹேரகன அறிவித்தார்



### அவுஸ்திரேலிய ஊடகத்தில் அம்பலம்

(மெல்பேர்ன்)

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்களை அறிவுறுத்தல்களுக்கு அமைய வெள்ளைக்கொடிகளை ஏந்தியவாறு சென்று படைத்தரப்பினரிடம் சரணடையுமாறு விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தின் பணிப்பாளர் புலித்தேவனுக்கு பாலித ஹோகன அறிவித்ததாக அவுஸ்திரேலிய ஊடகமான தி ஏஜ் செய்தி வெளியிட்டுள்ளது.

(02ஆம் பக்கம் பார்க்க)



## புலிகள் தப்பிச்செல்ல உதவி

## நோர்வே அரசாங்கத்திடம் விளக்கம் கோருகிறது இலங்கை

(கொழும்பு)

பன்னிரண்டுக்கும் மேற்பட்ட விடுதலைப் புலி உறுப்பினர்கள் இலங்கையிலிருந்து தப்பிச்செல்ல உதவிய சம்பவம் தொடர்பில் நோர்வே அரசாங்கத்திடம் இலங்கை விளக்கம் கோரியுள்ளது.

கொழும்பிலுள்ள நோர்வே தூதரக அதிகாரிகள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் இலங்கையை விட்டு வெளியேறுவதற்கு உதவி இருந்ததாக நோர்வேயின் முன்னணி நாளிதழ் ஒன்று வெளியிட்டுள்ள தகவல் குறித்து விளக்கமளிக்குமாறு இலங்கை அரசாங்கம் நோர்வேயிடம் இராஜதந்திர ரீதியில் வேண்டுகோள்

(02ஆம் பக்கம் பார்க்க)

## பணத்தை நோக்காகக் கொண்டே மன்னிப்புச்சபை செயற்படுகின்றது

### அமைச்சர் சுசில் பிரேமஜயந்த குற்றச்சாட்டு

(கொழும்பு)

சர்வதேச மன்னிப்புச்சபை முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்களை குப்பைத் தொட்டியில்தான் போடவேண்டும் என்று அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

சர்வதேச மன்னிப்புச்சபையானது பணத்தை நோக்காகக் கொண்டு இயங்குகின்ற ஒரு நிறுவனம். அவர்களுடைய செயற்திட்டங்களுக்கு நிதி வழங்குவர்களின் தேவைக் கேற்பவே மன்னிப்புச் சபையின் அதிகாரிகள் செயற்படுவார்கள் என்றும் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை தொடர்பாக சர்வதேச மன்னிப்புச்சபை

(02ஆம் பக்கம் பார்க்க)

# ராகு-கேது பெயர்ச்சி நேரத்தில் நாளை பதவியேற்கிறார் ஜெயா



(சென்னை)

அ.தி.மு.க. பொதுச்செயலர் ஜெயலலிதா முதல்வராக நாளை பதவியேற்கிறார். ராகு-கேது பெயர்ச்சி நேரத்தில் அவர் பதவியேற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டம், சென்னையில் உள்ள கட்சி தலைமை அலுவலகத்தில் இன்று காலை நடக்கிறது. இதில் சட்டசபை கட்சித்தலைவராக ஜெயலலிதா ஒருமனதாக தேர்வு செய்யப்படுகிறார்.

இதையடுத்து ஜெயலலிதா தலைமையில் புதிய அமைச்சரவை நாளை பதவி ஏற்கிறது. இதற்கான விழா சென்னை பல்கலைக் கழக நூற்றாண்டு விழா அரங்கில் நடக்கிறது.

தமிழக சட்டசபை தேர்தல் முடிவுகள் நேற்று வெளியானது. அ.தி.மு.க. கூட்டணி அமோக வெற்றி பெற்றுள்ளது. போட்டியிட்ட 160 இடங்களில் அ.தி.மு.க. 150 தொகுதிகளில் வெற்றி பெற்று தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கிறது. அதன் கூட்டணி கட்சியான தே.மு.தி.க. எதிர்க்கட்சி அந்தஸ்தை பெற்றுள்ளது. அ.தி.மு.க. ஆட்சியைப் பிடித்துள்ளதால் அக்கட்சியினர் உற்சாகம் அடைந்துள்ளனர்.

தேர்தலில்

(02ஆம் பக்கம் பார்க்க)

## விடுதியிலிருந்து இளைஞனின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

விடுதியிலிருந்து மர்மமான முறையில் இறந்த இளைஞன் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. நேற்றுக் காலை 8.30 மணியளவில் சடலம் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கச்சேரிக்கு அருகாமையில் உள்ள சோமசுந்தரம் வீதியில் அமைக்கப்பட்டுள்ள விடுதியிலிருந்தே குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் கொழும்புத்துறையைச் சேர்ந்த துரைராசா சுரேஸ் என அடையாளம் காணப்பட்டுள்ளது. இவர் யாழ். மாநகரசபையின் பிரதிமேயர் துரைராசா இளங்கோவின் (றீகன்) சகோதரன் என்பது குறிப்பிடத்தக்கது.

(02ஆம் பக்கம் பார்க்க)

## கொலைச் சம்பவங்களுக்கு கூட்டமைப்பு கண்டனம்

(கொழும்பு)

பூரண சமாதானம் நிலவுகின்ற பிரதேசமாக அரசாங்கத்தால் தெரிவிக்கப்படுகின்ற பிரதேசத்தில் நடைபெற்றுள்ள கொலையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிக்கிறது என கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் ஆனைப்பந்திப்பிள்ளையார் ஆலய அறங்காவல் சபைச் செயலாளர் இராசமாணிக்கம் மதியழகன் அவரது வீட்டில் வைத்து

(02ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புதிய மகசின் சிறைக்கு விஜயம்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நேற்று புதிய மகசின் சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகளைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இதன் போது அரசியல் கைதிகளின் நிலைமை குறித்தும் எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்பட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், மகசின் சிறைச்

(02ஆம் பக்கம் பார்க்க)

**Study & Work in UK and Canada**

*Intake Get Register Now*
*Collecting the application until March 31st 2011*
*start the academic on August 2011*
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
*Administration & Documentation*



என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீஸா பெறுவதற்கான *Sponsorship* பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
*சகல தொடர்புகளுக்கும்: 0729994777*
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)

# கணனி கோளாறு; கிறீன்காட் விஸா மீள்பரிசீலனை

கணனி கோளாறு காரணமாக 22 ஆயிரத்திற்கும் அதிக எண்ணிக்கையானோருக்கு அமெரிக்க கிறீன் காட் விஸா லொத்தரில் வெற்றி கிடைத்திருப்பதாக தவறாக அறிவிக்கப்பட்டதாகவும் இதற்கான குலுக்கல் மீண்டும் நடத்தப்படும் எனவும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது. கணனி நிகழ்ச்சி நிரலாக்கத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக இந்த கிறீன் காட் லொத்தர் விஸாவுக்கான குலுக்கலில் 30 நாட்கள் கொண்ட விண்ணப்ப காலம் முழுவதிலுமிருந்து விண்ணப்பதாரிகளை தெரிவு செய்வதற்கு பதிலாக முதல் இரு நாட்களிலிருந்து மாத்திரம் 90 சத வீதமானோர் தெரிவு செய்யப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

50ஆயிரம் விஸா லொத்தருக்காக 19.6 மில்லியன் பேர் விண்ணப்பித்தனர்.

தற்போது இந்தகணனிகோளாறு சீர்செய்யப்பட்டுள்ளதாகவும் விண்ணப்பதாரிகளுக்கு ஜூலை 15ஆம் திகதியளவில் சரியான பெறுபேறுகள் அறிவிக்கப்படும் எனஅறிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

**வர்த்தகப் பெருமக்களே...**

*பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.*
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290

## தமிழ்த் தேசியக் கூட்...

சாலையிலுள்ள நூற்றுக்கு மேற்பட்ட அரசியற் கைதிகளைச் சந்தித்துள்ளோம். இவர்களில் பலர் வருடக் கணக்காக உண்ணாவிரதம் மேற்கொண்டு வந்துள்ளனர். இவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கல் தொடர்பாக இலங்கை அரசாங்கத்திடம் கோரியுள்ளோம்.

தற்பொழுது ஒரு அரசியற் கைதி உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டுள்ளார். சிலர் எவ்வித குற்றச்சாட்டுகளுமின்றி வருடக்கணக்காக சிறையில்வாடுகின்றனர். பலருக்கு வருடக் கணக்காக வழக்கு நடந்து கொண்டிருக்கிறது. அரசுடனான அடுத்த சந்திப்பில் இது தொடர்பாக கலந்துரையாடவுள்ளோம். (ஸ்ரீ-2)

## பணத்தை நோக்...

வெளியிட்டுள்ள அறிக்கை குறித்து கருத்துத் தெரிவிக்கும் போதே ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலாளரும்பெற்றோலியவளங்கள் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தொடர்ந்தும் மனித உரிமைமீறல்கள் இடம்பெற்று வருவதாக சர்வதேச மன்னிப்புச்சபை குற்றம் சாட்டியுள்ளது. கருத்துச் சுதந்திரம் மற்றும் ஒன்றுகூடலுக்கான சுதந்திரம் என்பன மறுக்கப்பட்டுள்ளன.

தமிழ்க் கைதிகள் பலர் குற்றச்சாட்டுகளின்றி நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் சர்வதேச மன்னிப்புச் சபையின் இவ்வருடத்திற்கான ஆண்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாப அறிக்கை தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சர் அதனைக் குப்பைத் தொட்டியில் போட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## கொலைச் சம்பவ...

புதன்கிழமை பிற்பகல் சுட்டுக்கொல்லப்பட்டமை தொடர்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் விடுத்துள்ள கண்டன அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அவரது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடக்கு கிழக்கு மாகாணத்தில் பூரண சமாதானம் சுதந்திரம் நிலவுகிறது என அமைச்சர்களும் அரசும் கூறிக் கொண்டிருக்கிற நிலையில், மட்டக்களப்பில் கொலைநடைபெற்றிருக்கிறது. இதனைத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிக்கிறது. இக்கொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும்.

அவ்வாறு செய்யாமல் விட்டால் கடந்த காலங்களில் நடைபெற்றது போன்று காரணம் காணப்படாமல் இருந்தது போன்றதொரு சூழல் உருவாகும். கடந்த இரண்டு வருடங்களில் இது போன்ற கொலைகள் நடைபெறவில்லை. இப்போது நடைபெற்றிருக்கின்ற கொலையானது மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மக்கள் மத்தியில் கடும் பீதியை ஏற்படுத்தியிருக்கிறது.

நகர்ப்பகுதி என்பது பூரணமான பாதுகாப்பு நிறைந்த இடமாகும். இங்கு பட்டப்பகலில் இக்கொலை நடைபெற்றுள்ளது. நகரப்பகுதியில் ஒரு கொலையைச் செய்துவிட்டு செல்வதென்பது சுலபமான காரியமல்ல. அவர் எந்த அரசியல் பின்னணியைக் கொண்டவராக இருந்தாலும் கொலைமூலம் தண்டிக்கப்படுவது ஏற்றுக் கொள்ள முடியாததாகும். ஒருவரைக் கொலை செய்வதற்கு யாருக்கும் அதிகாரமில்லை.

2009ஆம் ஆண்டுக்கு முன்னர் கொலைகள் நடைபெற்றால் அதற்கு புலிகளைக் காரணம் காட்டுவதும் அதன் மூலம் மூடி மறைப்பதும் வரலாறாகும். விடுதலைப்புலிகள் இல்லாத சந்தர்ப்பத்தில் இவ்வாறான கொலை நடந்தால் அதற்குக் காரணமானவர்களை சட்டத்தின் முன் நிறுத்தித் தண்டிக்க வேண்டியது அரசாங்கத்தின் முழுப் பொறுப்பாகும். (ச-5)

# இராணுவத்திடம் சரணடையுமாறு...

தற்போது படைத்தரப்பினரை நோக்கி வெள்ளைக் கொடியை ஏந்தியவாறு மெதுவாகச் செல்லுங்கள். அறிவுறுத்தல்களை கவனமாகப் பின்பற்றுங்கள். தற்கொலைக் குண்டுதாரிகள் குறித்து படைத்தரப்பினர் அச்சம் கொண்டுள்ளர் என அரசாங்கத்தின் தரப்பில் பாலித ஹோகனவால் புலித்தேவனுக்கு தகவல் அனுப்பப்பட்டதாக இவ்வூடகம் குறிப்பிட்டுள்ளது.

இவ் விடயம் குறித்து இவ்வூடகம் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தமிழீழ விடுதலைப்புலிகளின் பெரும்பாலான போராளிகள் தமது ஆயுதங்களை கீழே போடுவதை விட சாகும் வரை போராடவே விரும்பினார்கள். ஆனால் தமது கட்டுப்பாட்டுக்குள் இருந்த பல ஆயிரக் கணக்கான பொதுமக்களின் உயிர்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக விடுதலைப்புலிகளின் தலைவர்கள் சிலர் வேறுவழியின்றி சரணடைய முன்வந்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தின் பணிப்பாளர் புலித்தேவன் நிபந்தனையின்றி சரணடைய முன்வருவதாக ஐரோப்பிய அனுசரணையாளர்கள் ஊடாக பாலித ஹோகனவுக்கு அறிவித்திருந்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் நடேசன், கேணல் ரமேஸ் ஆகியோருடன் தானும் மற்றும் பொதுமக்கள் சிலரும் நிபந்தனையின்றி சரணடைய முன்வருவதாக இந்த அறிவிப்பில் புலித்தேவன் குறிப்பிட்டிருந்தார்.

இதையடுத்தே 2009ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் திகதி காலை 8.46 மணியளவில் மூன்றாவது தரப்பின் ஊடாக பாலித ஹோகன, புலித்தேவனுக்கு மேற்குறிப்பிட்ட தகவலை அனுப்பியிருந் தார்.

இத்தகவல் அனுப்பப்பட்ட மறுநாள் காலை 6.30 மணியளவில் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியற்றுறைப் பொறுப்பாளர் நடேசன் மற்றும் புலித்தேவன் உட்பட சுமார் 15 பேர் படைத்தரப்பின் 58 ஆவது படைப்பிரிவை நோக்கி வெள்ளைக்கொடிகளை ஏந்தியவாறு சென்றனர்.

இவர்களை படைத்தரப்பினர் தமது வாகனங்களுக்குப் பின்னால் அழைத்துச் சென்ற சில நிமிடங்களில் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் அபயக் குரல்களும் கேட்டன. இச்சம்பவத்தை நேரில் பார்த்த தமிழர் ஒருவர் இதனை உறுதிப் படுத்தியுள்ளார்.

இச்சம்பவம் இடம்பெற்று அரை மணித்தியாலத்திற்குள் நடேசன் மற்றும் புலித்தேவன் ஆகியோரின் மரணங்கள் குறித்து அறிவிக்கப்பட்டது. இச்சம்பவம் இடம்பெற்ற இடத்தில் புலித்தேவனின் மனைவியின் உடலமும் கண்டுபிடிக்கப்பட்டது என இவ்வூடகம் தெரிவித்துள்ளது.

அத்துடன் நிபந்தனையின்றிச் சரணடைவது தொடர்பில் புலித்தேவனுக்கு பாலித ஹோகன தகவல் அனுப்பியதை இவ்வூடகம் மூன்று சுதந்திரமான தரப்புகள் ஊடாக உறுதிப்படுத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர்களின் இந்த நிபந்தனையற்ற சரணடைவு குறித்த விவகாரம் அரசாங்கம் மற்றும் படைத்தரப்பினரின் உயர் பீடங்களுக்கும் தெரிந்திருந்தது.

இந்த விவகாரத்தில் அவுஸ்திரேலிய மற்றும் இலங்கை பிரஜாவுரிமையைப் பெற்றிருந்த பாலித ஹோகன முக்கிய பங்கை வகித்திருந்தார் எனவும் இவ்வூடகம் சுட்டிக்காட்டியுள்ளது.

அதேவேளை விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர்களின் சரணடைவுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் படைத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் உத்தரவாதம் வழங்கப்பட்டிருக்கும் என ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழு வெளியிட்டிருந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாக இவ்வூடகம் குறிப்பிட்டுள்ளது. (எ-5)

# ராகு-கேது பெயர்ச்சி நேரத்தில்...

வெற்றிபெற்றதையடுத்து நேற்று பிற்பகல் கட்சி அலுவலகத்துக்கு ஜெயலலிதா சென்றுள்ளார். அங்குள்ள எம்.ஜி.ஆர். சிலைக்கும் மாலை அணிவித்தார். அதைத் தொடர்ந்து அண்ணாசாலையில் உள்ள அண்ணா சிலைக்கு மாலை அணிவித்தார். மெரினா கடற்கரையில் உள்ள அண்ணா மற்றும் எம்.ஜி.ஆர். நினைவிடங்களிலும் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார். பின்னர் அண்ணாசாலையில் உள்ள பெரியார் சிலைக்கும் மாலை அணிவித்தார்.

வெற்றிபெற்ற அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் சென்னைக்கு வரவேண்டும் என கட்சித்தலைமை அழைப்பு விடுத்துள்ளது. அதன்படி எல்லோரும் சென்னை சென்றுள்ளனர்.

புதிய சட்டமன்ற உறுப்பினர்களின் கூட்டம் சென்னை ராயப்பேட்டையில் உள்ள கட்சி தலைமை அலுவலகத்தில் இன்று காலை 9.00 மணிக்கு நடக்கிறது.

இதில் சட்டசபை கட்சித்தலைவராக ஜெயலலிதா ஒருமனதாக தேர்வு செய்யப்படுகிறார். அதைத் தொடர்ந்து காலை 11.00 மணிக்கு ராஜ்பவனில் ஆளுநர் பர்னாலாவை ஜெயலலிதா சந்திக்கிறார்.

அப்போது அ.தி.மு.க. சட்டசபை கட்சித் தலைவராக தான் தேர்தெடுக்கப்பட்டதற்கான கடிதத்தை ஆளுநரிடம் கொடுக்கிறார். அதையடுத்து ஆட்சி அமைக்க வருமாறு ஜெயலலிதாவுக்கு பர்னாலா அழைப்பு விடுப்பார்.

அதை ஏற்று ஜெயலலிதா தலைமையில் புதிய அமைச்சரவை நாளை பதவியேற்கிறது. புதிய அமைச்சரவை பதவியேற்பு விழா நாளை திங்கட்கிழமை பகல் 12.00 மணிக்கு நடக்கிறது. மூன்றாவது முறையாக ஜெயலலிதா முதல்வராகப் பதவியேற்கிறார்.

அவருடன் அமைச்சர்களும் பதவி ஏற் கின்றனர். விழாவிற்கான ஏற்பாடு தீவிரமாக நடந்துவருகிறது.

பதவியேற்பு விழா குறித்து அதிகாரிகள் மற்றும் கட்சி நிர்வாகிகளுடன் ஜெயலலிதா ஆலோசனை நடத்திவருகிறார். அமைச்சர்கள் பட்டியல் தயாரிக்கும் பணியும் தீவிரமாக நடந்து வருகிறது.

புதிய அமைச்சர்கள் யார் என்பதை அறிய அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் அதிக ஆர்வம் காட்டிவருகின்றனர். (ச-5)

## நோர்வே...

விடுத்துள்ளது.

வெளிவிவகார அமைச்சு நோர்வேயின் ஒஸ்லோ நகரில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் ஊடாக பிரஸ்தாப வேண்டுகோளை நோர்வே அரசாங்கத்திடம் கையளித்துள்ளது.

நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக்சொல்ஹெய்ம் இந்த தகவலை ஆதரித்துள்ளதாகவும் அவர் கூறிய கருத்தை மேற்கோள்காட்டி நோர்வே நாளிதழ் வெளியிட்டுள்ள செய்தி தொடர்பில் நோர்வே அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக நோர்வேயில் உள்ள இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

விடுதலைப்புலிகளின் 12 பேருக்கு கடவுச்சீட்டுக்களை வழங்கி அவர்களுக்கு தேவையான விமானச் சீட்டுக்களை தூதரகமே பெற்றுக் கொடுத்திருப்பது மாத்திரமின்றி தமது வாகனத்திலே அவர்களை விமான நிலையம் வரை அழைத்து சென்று நோர்வேக்கு அனுப்ப நோர்வே தூதரக அதிகாரிகள் ஏற்பாடு செய்து கொடுத்துள்ளனர் என்று நோர்வே நாளிதழ் செய்தி வெளியிட்டிருந்தது. பிரஸ்தாப தகவல் தொடர்பாகவே இலங்கை அரசாங்கம் நோர்வேயிடம் விளக்கம் கேட்டுள்ளது. (ச-5)

## விடுதி...

இவரின் இறப்பு தொடர்பாக சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக உறவினர்கள் தெரிவிக்கின்றனர். இதேவேளை வாயில் இரத்த கசிவுடன், நுரையும் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-6)

**மலேசியா**

தமிழ் பேசும் பெண்களுக்கு
ஓர் அரிய வாய்ப்பு
மலேசியாவில் உள்ள
தமிழ் VIP வீடுகளுக்கு
தமிழ் பேசும் பணிப் பெண்கள் தேவை

மாதாந்த சம்பளம் RM 850
இலங்கைப் பெறுமதிக்கு ரூபா. 28,000

* கடவுச்சீட்டு (Passport) - இலவசம்
* மெடிக்கல் (Medical) - இலவசம்
* இன்சுரன்ஸ் (Insurance) - இலவசம்
* விமான டிக்கட் (Air Ticket) - இலவசம்
* தங்குமிடவசதி (Accomodation) - இலவசம்
* உணவு (Food) - இலவசம்
* 2 வருட கால ஒப்பந்தம் (2 Years Contract)

பாஸ்போட் இல்லாதவர்கள் உரிய ஆவணங்கள் கொடுத்தால் இலவசமாக பாஸ்போட் செய்து தரலாம் — முற்றும் இலவசம்

Labour Licence No. 2516
GOODLINE MANPOWER SERVICES
38/3, (3rd Floor), Symonds Road, Maradana, Colombo-10.
Tel : 011 3091521 Hotline : 077 3179592
(ச-3204)

**உடனடியே... STUDY IN UK**
(work permit)

* IELTS அவசியமற்ற இறுதி UK பயணம்
* முன் கட்டணம் எதுவும் இல்லாத ஒரு புதிய நடவடிக்கை
After Visa Payment
* Course Fees மிக குறைந்த விலையில்
* Sponsor வசதி மிக குறைந்த விலையிலும் நம்பத் தகுந்த வங்கி ஊடாக எடுக்கப்பட்ட ஆவணமும்.
* சட்ட வல்லுநர்களால் ஆவணங்கள் சரி பார்த்து கொடுத்தல்.
* UK இல் 15 கல்லூரிகளிலும் அதற்கு மேற்பட்ட கல்லூரிகளுடனான சட்டரீதியான தொடர்பு.



இறுதிச் சந்தர்ப்பத்திற்கு உரிய கோட்டாவை நழுவவிட்டு விடாதீர்கள்.

Tel-No: 0778337379 0750698404
(4941)

# யாழ்.மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் மனைப்பொருளாதார அபிவிருத்தித் திட்டம்

## நேற்று முன்தினம் ஆரம்பித்து வைப்பு

(யாழ்ப்பாணம்)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு, வடக்கு மாகாணசபை ஆகியன இணை ந்து நடத்தும் யாழ். மாவட்டத்தில் முதற் கட்டமாக மனைப் பொருளாதாரத்தின் மூலம் 4000-5000 வரையிலான குடும்ப அலகுகளைக் கட்டியெழுப்பும் அபிவிருத்தித் திட்டம் நேற்று முன்தினம் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் ஆரம்பமானது.

இதன்மூலம் தெரிவு செய் யப்பட்ட குடும்பங்கள் தமது பொருளா தாரத்தை விருத்தி செய்வதோடு தமது தேவைகளை தாமே பூர்த்தி செய்து கொள்ள முடியும்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவிக்கையில்,

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் அதிகமாக இருப்பதனால்தான் இத்திட்டத்தை இங்கு முதலில் ஆரம்பித்தோம்.

பொருளாதாரத்தை உயர்த்தும் வகையில் முன்னெடுக்கப்படும் இந்த வேலைத் திட்டங்கள் மூலம் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை பெருக்கிக் கொள்ள முடியும்.

இத்திட்டத்தை ஒழுங்கு படுத்தவும் மக்களுக்கு உதவி வழங்கவும் குழுவொன்று அமைக்கப்படவுள்ளது.

மனைப் பொருளாதாரத்திற்கு 5 ஆயிரம் பேர் தெரிவுசெய்யப்பட்டதைப் போன்று கைத்தொழில், கடற்தொழில் போன்ற துறைகளை முன்னேற்ற அத்துறை சார்ந்த ஆயிரம் பேர் மேலும் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இவ்வாறு முன்னெடுக்கப்படும் திட்டங்களுக்கு பிரதேச செயலர்களின் பங்களிப்பு மிக அவசியம். அவர்களின் மூலமே பயனாளிகள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இத்திட்டம் யாழ்.மாவட்டத்தில் மட்டுமல்லாது வட மாகாணத்திலுள்ள கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களிலும் முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, அமைச்சின் செயலாளர் என்.சிவஞானம் , யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், வடமாகாண பிரதம செயலாளர் எம்.சிவசுவாமி, வடமாகாண ஆளுநரின் பிரதமசெயலாளர் எஸ்.ரங்கராஜன், யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் , யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி.யோகேஸ்வரி பற்குணராசா உதவி அரசாங்க அதிபர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (ஸ்ரீ-6)

# நிரந்தர பொதுச்சந்தைக் கட்டடம் இன்மையால் மக்கள் பெரும் சிரமம்

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில் நிரந்தர பொதுச்சந்தைக் கட்டடம் இல்லாததினால் உற்பத்தி பொருட்களை விற்பனை செய்வோரும் நுகர்வோரும் பெரும் சிரமங்களை எதிர் கொள்வதாக தெரிவிக்கின்றனர்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இப்பகுதியில் மக்கள் மீளக் குடியேறிய போதிலும் இது வரை சந்தைக் கட்டம் அமைக்கப்படவில்லை.

இதனால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர். (ஸ்ரீ-3-10)

# செஞ்சிலுவை தொண்டர்களுக்கு முதலுதவிப் பயிற்சி

(நல்லூர்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க வலி கிழக்கு பிரிவு கோப்பாய் பிரிவுத் தொண்டர்களுக்கான முதலுதவி பயிற்சி எதிர்வரும் 18 ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் 21 ஆம் திகதி சனிக்கிழமை வரை இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க வலி கிழக்கு கோப்பாய் பிரிவு அலுவலகத்தில் நடைபெறவுள்ளது என இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க வலி.கிழக்குப் பிரிவின் தலைவர் இ.மயில்வாகனம் தெரிவித்துள்ளார்.

முதலுதவிப் பயிற்சி பெறும் பிரிவின் தொண்டர்கள் தங்கள் பெயர்களை பிரிவு அலுவலகத்தில் எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முன் அலுவலக நேரங்களில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

முதலுதவிப் பயிற்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-3-134)

# வாரம் ஒரு தகவல்

## ஓட்டமும் நடையும்

"உங்களுக்கு என்னுடைய வாழ்த்துக்கள்"

"எதற்கு"

"ஒவ்வொருவருடமும் ஓட்டப்பந்தயத்தில் நீங்கள் தான் முதலாவதாக வர்றீங்க...பரிசும் வாங்குறீங்க"

"நன்றி"

"அதெப்படி?உங்களால் மட்டும் அது முடிகிறது?"

"பயிற்சி தான் காரணம். அது தான் எனக்குப் பரிசு வாங்கவும் உதவுகிறது.உடம்பை நன்றாக வைத்திருக்கவும் உதவுகிறது."

"எனக்குப் பரிசு வாங்க வேண்டுமென்ற ஆசை இல்லை. ஆனால் உடம்பை நன்றாக வைத்திருக்க வேண்டும் என்ற ஆசை உண்டு"

"அப்படியானால் அதற்கு சுலபமான வழி உண்டு. சொல்கிறேன்,கேட்டுக் கொள்ளுங்கள். நடந்து போகக் கூடிய இடங்களுக்கெல்லாம் நடந்தே போய்விடுங்கள்.வாகனங்களைத் தேடாதீர்கள். உங்களால் முடிந்த வேலைகள் எதுவாக இருந்தாலும் அதை நீங்களே செய்யுங்கள்".

"மற்றவர்களை தேடிக் கொண்டிருக்காதீர்கள். ஸ்டேன் போர்ட் பல்கலைக்கழகமும் ஹவார்ட் பல்கலைக்கழகமும் இணைந்து ஒரு ஆய்வு நடத்தினார்களாம். அதில் அவர்கள் கண்டுபிடித்தது என்ன தெரியுமா? உட்கார்ந்து வேலை செய்பவர்களை விட ஓடியாடி வேலை செய்பவர்கள் அதிக நாட்கள் வாழ்கிறார்களாம்."

" அப்படியானால் இனிமேல் நானும் உங்கள் அளவுக்கில்லையென்றாலும் ஓரளவாவது உடம்பை நன்றாக வைத்திருப்பதற்கு ஏதாவது செய்ய வேண்டியது தான்"

"என்னைப் போன்றே நீங்களும் ஆகலாம் அது ஒன்றும் கஷ்டமில்லை"

"அதற்கு என்ன செய்ய வேண்டும்?"

"தினமும் நடக்க வேண்டும், ஓடவேண்டும், உடற்பயிற்சி செய்ய வேண்டும்."

"உங்களைப் போலவே நடக்கலாம். உடற்பயிற்சி செய்யலாம். ஆனால் உங்களைப் போல் அவ்வளவு ஓட முடியாது சேர்"

"ஏன் முடியாது? என்னைவிட வேகமாக உங்களால் ஓடமுடியும்"

"அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்"

"என்னைப் போன்று பலரிடம் கடன் வாங்க வேண்டும்."

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# இராசி பலன்

15.05.2011
வைகாசி 01,ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு
திரயோதசி முற்பகல் 9.47 மணிவரை
சித்திரை முன்னிரவு 10.06 மணிவரை
இராகுகாலம் 4.23-5.53 மணிவரை
சுபநேரம் 8.53-10.23 மணிவரை
பிரதோச விரதம்

**மேடம்** வாழ்க்கை துணை வழியே மகிழ்ச்சிக்குரிய செய்தியொன்று வந்து சேரும், குடும்பத்தினருடன் குதூகலப் பயணமொன்றை மேற்கொள்வீர்கள், வெளியூர் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**இடபம்** தொழில் சம்பந்தமாக முக்கிய முடிவெடுப்பீர்கள், சிறு சிறு வருமானங்கள் வந்து சேரும், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், தொலைபேசித் தகவலால் மகிழ்ச்சியடைவீர்கள்.

**மிதுனம்** நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும் நாள்,பிள்ளைகளுக்காக சில செலவுகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்,உறவினர் வழியில் இனிய செய்தி ஒன்று வந்து சேரலாம்.

**கடகம்** பெற்றோரின் அரவணைப்பால் திளைப்பீர்கள்,பெரிய மனிதரின் உதவியை நாடும் சூழ்நிலை அமையலாம்,மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும்.

**சிங்கம்** சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், குடும்பத்தில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், உறவுகள், நண்பர்கள் வலிய வந்து உதவிபுரியலாம்.

**கன்னி** இனிய செய்திகள் இல்லம் தேடி வரலாம்,திறமைமிக்கவர்களின் சந்திப்பால் தொழில் முன்னேற்றம் காண்பீர்கள், இல்லத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும்.

**துலாம்** பயணத்தால் பலன் கிடைக்கும், பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள்,கொள்கைப் பிடிப்பை உறவினர்களுக்காக கொஞ்சம் தளர்த்த வேண்டியேற்படலாம்.

**விருச்சிகம்** பணவரவு திருப்தி தரும்,தொழில் ரீதியாக எடுத்த முயற்சி வெற்றி பெறும், ஆடம்பரப்பொருட்களில் நாட்டம் கூடும், திருமணத் தடை அகலும்.

**தனுசு** கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும், விலை உயர்ந்த பொருட்கள் வீடு வந்து சேரலாம்,கௌரவம், அந்தஸ்து உயரும் நாள்.

**மகரம்** தொட்ட காரியம் வெற்றி பெறும் நாள்,நண்பர்களின் சந்திப்பால் மகிழ்ச்சி கூடும், எதிர்பாராத நேரத்தில் பெரியோரின் உதவி கிடைக்கும்.

**கும்பம்** விருந்தினரை வரவேற்று வியப்படையும் நாள்,தொலைபேசி வழித் தகவல் மனக்குழப்பத்தை அகற்றும், அரைகுறையாக இருந்த பணியை மீண்டும் தொடர்வீர்கள்.

**மீனம்** ஆதவன் வழிபாட்டால் சுகம் காண வேண்டிய நாள்,விருந்தினர் வருகையால் திடீர் செலவுகள் ஏற்படலாம், பிறரது பணியை நீங்கள் செய்யும் சூழ்நிலை அமையலாம்.

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 90 | 120 | 70 |
| உருளைக்கிழங்கு | 65 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 70 | 100 | 90 |
| தக்காளி | 60 | 90 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 70 |
| கோவா | 60 | 90 | 60 |
| கரட் | 70 | 100 | 30 |
| பூசணி | 20 | 40 | 40 |
| புடோல் | 30 | 50 | 30 |
| வாழைக்காய் | 25 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 30 | 150 | 110 |
| பெரிய வெங்காயம் | 25 | 50 | 60 |
| பாகற்காய் | 150 | 120 | 90 |
| வெண்டிக்காய் | 45 | 40 | 40 |
| கரணைக்கிழங்கு | -- | 80 | 90 |
| பயற்றங்காய் | 60 | 60 | 50 |
| லீக்ஸ் | 70 | 80 | 80 |
| பீற்றூட் | -- | 60 | 60 |
| கறிமிளகாய் | -- | 100 | 90 |
| முருங்கைக்காய் | 350 | 350 | 350 |
| போஞ்சி | -- | 120 | 120 |
| கத்தரி தம்புள்ள | -- | 60 | 60 |
| கீரை - 1 பிடி | 15 | 40 | 25 |
| தேசிக்காய் | 120 | 130 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 30-55 | 50 | 60 |

# சர்வதேச விசாரணை வேண்டாம் உள்நாட்டிலாவது விசாரியுங்கள்

## மனோ கணேசன் தெரிவிப்பு

இலங்கை போர்க்குற்றச்சாட்டு தொடர்பில் ஐரோப்பிய நாடாளுமன்றம் சர்வதேச விசாரணையை நிராகரித்துள்ளது. இதன் அர்த்தம் சர்வதேச விசாரணை வேண்டாம் என்றால் உள்நாட்டில் விசாரியுங்கள் என்பதாகும்.

இந்தியாவிலும் ஐரோப்பாவிலும் இருக்கின்ற அரசாங்கங்களை சாராத மனித உரிமை அமைப்புகள் இலங்கை பிரச்சினையைத் தமது கரங்களில் எடுத்துள்ளன. எனவே இனிமேல் இந்தியாவின் மத்திய அரசாங்கம் விரும்பினாலும் கூட கடந்த காலங்களைப் போல இலங்கை அரசாங்கத்தை கண்ணை மூடிக் கொண்டு ஆதரித்து காப்பாற்ற முடியாது என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இறுதிக்கட்டப் போரின் போது பல்லாயிரக் கணக்கான மக்கள் மரணித்தார்கள் என்ற உண்மை இன்று உலகளாவிய ரீதியில் உணரப்பட்டுள்ளது. எதுவுமே நடக்கவில்லை என்று சொன்னால் அது கண்ணை மூடிக் கொண்டு பால் குடிக்கும் திருட்டுப் பூனை, உலகமே இருண்டு விட்டது என்று நினைப்பதற்கு ஒப்பாகும்.

எனவே இறுதிக்கட்ட இழப்புகள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் பதில் சொல்ல வேண்டிய நிலைமை உருவாகி வருகின்றது. புலிகள்தான் அனைத்து கொலைகளையும் செய்தார்கள் என்று அரசாங்கம் சொல்லுமானால் அது தொடர்பிலும் உள்நாட்டில் விசாரணை நடத்தவேண்டிய கடப்பாடு அரசாங்கத்திற்கு உள்ளது.

கடந்த காலங்களில் காணாமல்போனோர் தொடர்பிலும் படுகொலை செய்யப்பட்டோர் தொடர்பிலும் நாங்கள் விசாரணைகளைக் கோரிய பொழுது அரசாங்கம் பல ஆணைக் குழுக்களையும், அரசாங்கத்தின் அமைச்சர்கள் அடங்கிய குழுக்களையும் நியமித்தது. ஆனால் அவை எதுவும் சர்வதேச விதிமுறைகள் ஏற்றுக்கொள்ளக்கூடிய மட்டத்தில் விசாரணைகளை முன்னெடுக்கவில்லை. அதனால்தான் அத்தகைய அனைத்து குழுக்களும் இன்று காணாமல் போய்விட்டன. எனவே தற்போதைய குற்றச்சாட்டுகள் தொடர்பில் அரசாங்கம் சர்வதேச நியமங்களுக்கு ஏற்ப விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும்.

உள்நாட்டிலேயே விசாரணைகளை ஆரம்பியுங்கள் என அரசாங்கத்தை சர்வதேசம் வலியுறுத்துகின்றது. அதாவது, நீங்கள் ஆரம்பிக்காவிட்டால் நாங்கள் ஆரம்பிக்க வேண்டி வரும் என்ற செய்தி சொல்லாமல் சொல்லப்படுகின்றது.

போர்க்குற்ற அறிக்கையின் அதிகாரபூர்வ தன்மைப்பற்றி தொடர்ந்து பேசி கொண்டிருப்பதில் பயனில்லை. இந்த அறிக்கையின் விபரங்கள் முழு உலகத்தையும் சென்றடைந்து விட்டது. அத்துடன் சீனா, ரஷ்யா, இந்தியா போன்ற நாடுகள் எம்மைக் காப்பாற்றும் என்று கனவு காண்பதிலும் பிரயோசனமில்லை. பலம்வாய்ந்த நாடுகள் மனித உரிமை குற்றச்சாட்டுகளை தங்களது சொந்த தேசிய நலன்களுக்காக பயன்படுத்திய காலம் இன்று மலையேறிக் கொண்டிருக்கின்றது.

அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளில் வாழும் சாதாரண மக்கள் இலங்கையைத் திரும்பி பார்க்க வைக்கும் அளவிற்கு அந்தந்த நாடுகளில் ஊடகங்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதேபோல இந்தியாவிலும் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் இருக்கின்றன அரசாங்கங்களைச் சாராத மனித உரிமை அமைப்புகள் இலங்கை பிரச்சினையை தமது கரங்களில் எடுத்துள்ளன. எனவே இனிமேல் இந்தியாவின் மத்திய அரசாங்கம் விரும்பினாலும்கூட கடந்த காலங்களைப் போல இலங்கை அரசாங்கத்தை கண்ணை மூடிக்கொண்டு ஆதரித்து காப்பாற்ற முடியாது.

இலங்கை அரசாங்கத்திற்கு இருக்கக் கூடிய ஒரேவழி குற்றங்கள் தொடர்பில் சர்வதேச ஆதரவுடன் உள்நாட்டு விசாரணையை ஆரம்பிப்பதும், தமிழ் தேசிய கூட்டமைப்புடன் நேர்மையான பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதும்தான் என்றார். (எ)

## பயணிகள் பேருந்துகளில் கப்பம் பெற்று வந்த குழு கைது

வவுனியா நகரில் பயணிகள் பேருந்துகளிடம் கப்பம் பெற்று வந்த குழுவொன்றை புலனாய்வுப் பிரிவுப் பொலிஸார் கைது செய்துள்ளனர். 5 பேர் கொண்ட இந்தக் குழுவினர் வவுனியா – கொழும்பு, அநுராதபுரம் – வவுனியா இடையில் போக்குவரத்தில் ஈடுபடும் தனியார் பேருந்துகளிடம் இருந்து தினமும் 500 ரூபாவைக் கப்பமாகப் பெற்று வந்துள்ளதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவல் ஒன்றையடுத்து கொழும்பில் இருந்து சென்ற விசேட பொலிஸ் குழுவினர் இந்த சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்காக அவர்கள் வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் குறித்து புலனாய்வுப் பிரிவினர் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## "கம்பராமாயணம்" இலக்கிய நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

க.பொ.த. உயர்தர மாணவரின் பாடப் பகுதியாக அமையும் கம்பராமாயணத்தில் கைகேயி சூழ்வினைப் படலத்தை மையப்படுத்தி சுழலும் சொல்லாடு களம் என்ற இலக்கிய நிகழ்வு இன்று பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் கல்லூரி அதிபர் எல்.ஓங்காரமூர்த்தி தொடக்கவுரையையும் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் கம்பராமாயணத்தில் கைகேயி சூழ்வினைப் படலம் என்ற பொருளில் விளக்கவுரையையும் வழங்குவார். தொடர்ந்து பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் மந்தரை சூழ்ச்சியால் பெரிதும் பாதிக்கப்பட்ட பாத்திரம் குறித்துச் சொற்போர் இடம்பெறும்.

இந்நிகழ்வில் இலக்கிய ஆர்வமுள்ள யாவரும் கலந்து பயன்பெறலாமென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் ஆய்வுகூடத் தொழில்நுட்பவியலில் சான்றிதழ் மற்றும் உயர்தரச் சான்றிதழ் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. க.பொ.த. உயர்தரத்தில் கணித அல்லது விஞ்ஞான பாடங்களில் ஆகக் குறைந்தது 3 சித்திகளைக் கொண்டுள்ளவர்களும் இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தின் விஞ்ஞான அத்திபாரக் கற்கை நெறிகள் மட்டம் 1, 2 ஐப் பூர்த்தி செய்துள்ளோரும் இக்கற்கைநெறிக்காக விண்ணப்பிக்க முடியும். இக்கற்கைநெறி கொழும்பு பிராந்திய நிலையத்திலேயே நடத்தப்படும். இதற்கான விண்ணப்பங்களை யாழ்.பிராந்திய நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம் என யாழ்.பிராந்திய நிலைய இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (ச)

# மரண அறிவித்தல்

## திருமதி மங்கையற்கரசி நமசிவாயம்

### (புங்குடுதீவு-05 - கொக்குவில் கிழக்கு)



புங்குடுதீவு 5ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்காலிகமாக 43/1, சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கில் வசித்து வந்தவருமான திருமதி மங்கயற்கரசி நமசிவாயம் நேற்று (14.05.2011) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் (ஸ்தாபகர் புங்குடுதீவு சித்திவிநாயகர் மகா வித்தியாலயம், ஸ்தாபகர் புங்குடுதீவு இறுப்பிட்டி பெரியபுலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம், இயக்குநர் புளியடித்துறை-நயினாதீவு மோட்டார் படகு போக்குவரத்துச் சேவை, புங்குடுதீவு இறுப்பிட்டி உப தபாலகத்தையும் திறந்து வைத்தவர்) வேலாசிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான புங்குடுதீவு 1ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஆறுமுகம் (மலேசியா) அன்னப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற நா.ஆ.நமசிவாயம் (புங்குடுதீவு திடீர் மரண விசாரணை அதிகாரியும் சமாதான நீதிபதியும் மக்கள் குழுத் தலைவரும் தீவுத்தொகுதி ப.நோ.கூ. சங்கங்களின் உத்தியோகப் பற்றற்ற மேற்பார்வை அதிகாரியும் ஓய்வுபெற்ற பிரதம எழுதுவினைஞர் - பரீட்சைத் திணைக்களம், கொழும்பு) அன்பு மனைவியும் பிரேமகுமார் (ஓய்வுபெற்ற பிரதம எழுதுவினைஞரும் புங்குடுதீவு திடீர் மரண விசாரணை அதிகாரியும்) சத்தியகுமார் (பிரான்ஸ்), மோகனகுமார் (பிரான்ஸ்), சுரேஷ்குமார் (முகாமைத்துவ உதவியாளர் - குடிவரவு குடியகல்வுத் திணைக்களம், கொழும்பு), தேவிகா (திருமண, பிறப்பு, இறப்பு பதிவாளர் - புங்குடுதீவு) ஆகியோரின் அன்புத் தாயாரும் தேவமலர் (ஆசிரியை, கோண்டாவில் இந்து ம.வி.), சிவகௌரி (பிரான்ஸ்), கலாரஞ்சி (பிரான்ஸ்), கலாராணி (ஆசிரியை, பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி - கொழும்பு), ஸ்ரீகாந்தன் (நகர அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியும் மீனாட்சி (இளைப்பாறிய ஆசிரியை, புங்குடுதீவு சித்திவிநாயகர் ம.வி.), கனகரத்தினம் (இளைப்பாறிய வைத்திய அதிகாரி, வத்தேகம), பார்வதபத்தினி (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான இலட்சுமிப்பிள்ளை, கார்த்திகேசு (வடபிராந்திய முகாமையாளர், இலங்கை பால் சபை, யாழ்ப்பாணம்), சிவகாமிப்பிள்ளை (மலேசியா), சோமாஸ்கந்தன் (உப தபாலதிபர், இறுப்பிட்டி, புங்குடுதீவு) சிவயோகம்மா, நடராசா (தலைமைப் பரிசோதகர், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், யாழ். மாவட்டம்), சிவக்கொழுந்து ஆகியோரின் அன்புச் சகோதரியும் தடாதகைபிராட்டி (இளைப்பாறிய ஆசிரியை, வத்தேகம), காலஞ்சென்றவர்களான சிவகௌரி, பொன்னம்பலம் (மலேசியா), முருகேசு (உடையார், கிராமத் தலைவர், திடீர் மரண விசாரணை அதிகாரியும் சமாதான நீதிபதியும் - புங்குடுதீவு), சிங்கராசா (Foremen, கட்டடத் திணைக்களம் - அநுராதபுரம்), சிந்துராசா (பிரபல வர்த்தகர், கொழும்பு), செல்லம்மா (கனடா), முத்துக்குமாரு (பன்னாட்டு அரச மொழிபெயர்ப்பாளர், சரவணை) ஆகியோரின் அன்பு மைத்துனியும் சுபராஜாவின் (மாவட்ட மேலதிக பதிவாளர் - கச்சேரி, யாழ்ப்பாணம்) பெரியம்மாவும் லோகபிரசாத் (மருத்துவ பீடம் - கொழும்பு பல்கலைக்கழகம்), பிரவீணா, யதுர்சன், அர்சினி, நிர்சினி, அனுசன், தனுசா, விஜித்தா, கிசாயினி, துஷாயினி, சாயுகன், துஷாந், நிதுஷாந் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (16.05.2011) திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மயில்வாகனம் ஸ்ரீகாந்தன் (மருமகன்)
தாவடி தெற்கு.

43/1, சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு.

(4939)

# ஈராக்கில் பணிபுரியும் இலங்கை பணியாளர்கள் உண்ணாவிரதம்

(கொழும்பு)

கடந்த 18 மாதங்களாக எவ்வித கொடுப்பனவுமின்றி ஈராக்கில் தங்கியுள்ள இலங்கை பணியாளர்கள் 15 பேர் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நிலுவை சம்பளத்தை உடனடியாக பெற்றுக் கொடுப்பதுடன் இலங்கை திரும்புவதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்குமாறு உண்ணாவிரதத்தில் ஈடுபட்ட இலங்கையர்கள் ஈராக் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளனர்.

ஈராக்கின் ஆளுநர் ஒருவர் தலையிட்டு தங்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுப்பதாக உறுதியளித்ததை அடுத்து உண்ணாவிரதத்தை கைவிட்டதாக அதில் ஈடுபட்ட இலங்கையர் ஒருவர் கூறினார்.

18 மாதங்களாக எவ்வித கொடுப்பனவும் இன்றி ஈராக் நாட்டில் 41 இலங்கையர்கள் தங்கியுள்ளனர். இவர்கள் இலங்கையின் பாதுகாப்பு பிரிவுகளில் சேவையாற்றி பின்னர் சட்டரீதியாக விலகிக் கொண்டவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ-2)

# அரசாங்கத்தின் உயர்மட்டத்தினருக்கு எதிராக 30 நாடுகளில் வழக்குத் தாக்கல்

## புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் முயற்சி

அரசாங்கத்தின் உயர்மட்டத்தினருக்கெதிராக 30 நாடுகளில் வழக்குகளைத் தொடர்வதற்கு புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் முயற்சிகளை முன்னெடுத்து வருவதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பில் ஐ.நா.நிபுணர் குழுவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையின் அடிப்படையிலேயே அவர்கள் அரசாங்கத்தின் உயர்மட்டத்தினருக்கெதிரான வழக்குகளைத் தாக்கல் செய்யவுள்ளதாக அறியமுடிகின்றது.

தற்போதைக்கு மேற்கு ஐரோப்பா, கிழக்கு ஐரோப்பா மட்டுமன்றி ஆசியாக் கண்டத்தின் சில நாடுகளிலும் அவ்வாறான வழக்குகளைத் தாக்கல் செய்வதற்கான முயற்சிகள் பிரஸ்தாப அமைப்புக்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

உலகின் மிகப்பெரும் செல்வந்தர்கள் சிலரும் நிதி நிறுவனங்கள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் பலவும் அவர்களுக்கான ஆதரவை வழங்க முன்வந்துள்ள அதேவேளை ஆரம்பக் கட்டமாக இலங்கையின் முக்கியஸ்தர்களுக்கு எதிராக ஒரு சில நாடுகளில் தற்போதைக்கு வழக்குகள் தொடரப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (ஸ்ரீ-2)

# கனிமொழியின் பிணைமனு மீதான விசாரணை ஒத்திவைப்பு

(சென்னை)

2 ஜி ஸ்பெக்ரம் விவகாரத்தில் சிக்கியுள்ள கனிமொழியை பிணையில் விடுவிப்பதா அல்லது நீதிமன்றக் காவலில் வைப்பதா என்பது குறித்து நேற்று தீர்ப்பு வழங்கப்படும் என எதிர்பார்த்திருந்த நிலையில் அவரது மனு மீதான விசாரணை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ)


உடனடி வெளிநாட்டு வேலை வாய்ப்பு

அபுதாபி - டுபாய்

**ABU DHABI - DUBAI**

(ஐக்கிய அரபு இராச்சியம்)

எமது வெளிநாட்டு கம்பனி முகவருடன் நேர்முகப் பரீட்சை 23.05.2011 (திங்கட்கிழமை) கொழும்பில் உள்ள எமது காரியாலயத்தில் நடைபெறும். நேரில் சமூகமளிக்கவும்.

டுபாயில் உள்ள ஒரு பிரபல்யமான கிளீனிங் கம்பனிக்கு கீழ் குறிப்பிடும் ஆட்கள் உடனடியாக தேவைப்படுகிறது.

**HOUSE KEEPERS - 50** ஆண்கள்

சம்பளம் **DHS 800** (S.L.Rs.24,000/-)

(வேலை செய்யும் இடங்கள் - சுப்பர் மார்கட்டிலும், சொப்பிங் மோல்ஸ்)

Working Place - Supper Markets & Shopping Malls.

Candidates should have passed G.C.E (O/L) Examination with good English knowledge.

Should be smart and with pleasing personality

(ஆங்கிலத்தில் ஓரளவு பேசத்தக்கவராகவும், திடகாத்திரமானவராகவும் இருத்தல் வேண்டும்.)

வயது: 22 - 35 Age: 22 - 35 Yrs

Training in House Keeping will be given to the selected candidates in Dubai by our Foreign Principal.

தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு சம்பளத்துடன் கூடிய ஒரு மாத தொழிற் பயிற்சி டுபாயில் வழங்கப்படும்.

**Terms & Conditions**

Free Accommodation, Food & Medicals. Free Uniform & Air Passage after completion of contract period. Period of Contract two years (Renewable). Working hours - 8 Hours. Other terms & conditions will be as per U.A.E Government Labour Laws.

Please come to our Colombo office on **23rd May, 2011, (Monday)** with your Passports, Educational Certificates and with other supporting documents with 6 PPT size coulour photos with white background for the interview with our Foreign Principal.

**TRANSSTAR**

INTERNATIONAL TRAVELS & TOURS (PVT) LTD.,
375, Second Floor, Dam Street, Colombo 12.
(375, 2ம் மாடி, டாம் வீதி, கொழும்பு-12)
Tel: 011 - 471 8936 / 238 6824
E-mail: transstar@sltnet.lk

S.L.Bureau Labour Licence : 1311. (Near Hulftsdorp Courts - Colombo)
S.L.Bureau Approval AL/1311/Advt/02/11. (ஹல்ஸ்டொர்ப் நீதிமன்றங்களுக்கு அருகாமையில்)
Govt. Approved Charges - Rs.41,664/- (டாம் வீதியில் உள்ள ஹல்ஸ்டொர்ப் தபால் நிலையத்திற்கு அடுத்த கட்டிடம்)

இலவச **IELTS** வகுப்புகள்

ஆரம்பம்

**Study in UK**



**UK** அரசாங்கத்தால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் புதிய **UK Student Visa** நடைமுறையை கண்டு கவலைப்படுகிறீர்களா????

புதிய **UK Student Visa** நடைமுறைகளுக்கு ஏற்ப **Exponet Overseas Consultants** வழங்கும் இலவச **IELTS** பாட நெறிகளை ஒரு மாதத்தில் பூர்த்தி செய்வதன் மூலம் **UK Student Visa**க்களை பெற்றுக்கொள்ளுங்கள்.

பதிவுகளுக்கு **COLOMBO - 0117 555511 JAFFNA - 021 7538395 HOTLINE - 0117 555514 FAX - 0117 555517**

தலைநகரில் அதி கூடுதலான விசாக்களை பெற்றுக்கொடுத்துவரும் எமது நிறுவனத்துடன் நீங்களும் இணையுங்கள்.

உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்

காலம் 19 May 2011 முதல் ஆரம்பம்

இடம் Exponet Head Office - Colombo

விசா நடை முறைகளுக்கு முன்னரும் பின்னரும் எவ்விதகட்டணங்களும் அறவிடப்படமாட்டாது.*

எமது சேவை முற்றிலும் இலவசமானது

*Condition Apply

EXPONET Overseas Consultants

Head office - 379-1/2, Galle Road, Colombo 6, Sri Lanka Tel:0714150995

Jaffna Branch - 102 2/2, Navalar Road, Jaffna

London Branch - No:56,The Gardens Harrow Middlessex HA1 4EY,UK

www.expogroup.lk Email:nimal@expogroup.lk

# வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு இலவச மின் விநியோகம்

(நல்லூர்)

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் அரியாலைப் பகுதியில் மீள்குடியமர்ந்த விவசாயிகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்கப்படவுள்ளதாக பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நல்லூர் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் அண்மையில் செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அரியாலைப் பகுதியில் மீள்குடியேறிய மக்கள் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் அவர்களுக்கு அரசாங்கத்தால் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றது.

இதன் ஒரு கட்டமாகவே இந்த விவசாய நடவடிக்கைகளுக்கான இலவச மின்சார விநியோக திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

அது மட்டுமின்றி வீட்டுத் திட்டங்கள், கைத் தொழில் பேட்டைகள் அமைத்தல் போன்ற நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மேலும் வீதி விளக்குகளை பொருத்தல் போன்ற செயற்பாடுகளும் இடம்பெற்று வருகிறது என்றார்.

இதேவேளை சட்டவிரோதமாக மின்சாரம் பெறுபவர்கள் பிடிக்கப்பட்டு நீதிமன்றத்தால் அபராதம் விதிக்கப்பட்டாலும் அந்த நடவடிக்கையை கட்டுப்படுத்த முடியவில்லை என மின்சார சபை ஊழியர்கள் இதன்போது தெரிவித்தனர். சட்டவிரோதமாக மின்சாரத்தைப் பெறுவதால் மின்சார சபைக்கு பல கோடி ரூபா நஷ்டம் ஏற்படுவதோடு உயிரிழப்புக்களும் ஏற்படுகின்றது என அவர்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

இதற்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர்,

இவ்வாறான சட்டவிரோத மின்சார பாவனையாளர்களை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்ததோடு மக்களும் இவ்விடயத்தில் விழிப்பாக இருக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

(ஸ்ரீ-6)

## நிர்வாக சபைத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யா/வட்டு இந்துக்கல்லூரியில் அபிவிருத்திச் சங்க வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகசபைத் தெரிவும் அண்மையில் வள்ளியம்மை மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் தலைவராக அதிபர் சி.சிவ கணேச சுந்தரன், செயலாளராக வே.சிவலிங்கம், பொருளாளராக க.திருக்குமார் ஆகியோர் தெரிவாகினர்.

நிர்வாக உறுப்பினர்களாக ஆசிரியை திருமதி க.பாலசுந்தரம், ச.இராசதுரை, இ.கு.சிவஞானம், பொ.சூர சங்காரம், க.பிறேமகாந்தன், திருமதி ம.கனகாம்பிகை, தி.விக்கினஜெயம், திருமதி ப.கலாயினி ஆகியோர் தெரிவாகியுள்ளனர். (ஸ்ரீ-2-17)

\+ + + + + +

(யாழ்ப்பாணம்)

யா/ வட்டு இந்துக் கல்லூரி (நவோதயா) பழைய மாணவர் சங்க இவ்வாண்டுக்கான அங்குரார்ப்பணக் கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் அண்மையில் வள்ளியம்மை மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் தலைவராக ச.இராசதுரை, உப தலைவராக கல்லூரி அதிபர் சி.சிவகணேச சுந்தரன் மற்றும் பொ.காங்கேயநாதன், செயலாளராக இ.கு.சிவஞானம், உபசெயலாளராகந.ஆனந்தராசா, பொருளாளராகமு.சிதம்பரபிள்ளை ஆகியோர் தெரிவாகினர்.

நிர்வாக உறுப்பினர்களாக சு.சுந்தரராசா, க.விஜயகாந்தன், திருமதி.சி.செல்வரதி, திருமதி நா.பிரபாகரி, வே. இராமகிருஸ்ணன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

(ஸ்ரீ-2-17)

\+ + + + + +

யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்ற மாவட்ட சம்மேளனத்தின் புதிய நிர்வாக தெரிவு அண்மையில் மாவட்ட காரியாலயத்தில் நடைபெற்றது.

இதில் தலைவராக இ.இரவீந்திரன், பொருளாளராக க.மார்க்கஸ்மில், செயலாளராக வி.ஸ்ரீமேனன், அமைப்பாளராக அ.ஜெபநேசன், உப தலைவராக கு.சசிகலா, உபசெயலாளராக சி.அனுசன், உப அமைப்பாளராக க.சயந்தன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

(ஸ்ரீ-3-34)

# சிவபூமி முதியோர் இல்லத்தின் 4ஆவது ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

சிவபூமி முதியோர் இல்லத்தின் 4 ஆவது ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு சிவபூமி முதியோர் இல்லத்தில் செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் தலைமையில் நடை பெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக பேராசிரியர் அ.சண்முகதாஸ், திருமதி கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் தம்பதிகள் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், வழக் கம்பரை அம்மன் கோவில் சிவஸ்ரீ சு.சுந்தரராஜ குருக்கள் ஆகியோர் வழங்கவுள்ளனர். (ஸ்ரீ)

## கருத்துரை நிகழ்வு


(யாழ்ப்பாணம்)

ஆறுதல் நிறுவன ஏற்பாட்டில் மே மாத கருத்துரை நிகழ்வு எதிர்வரும் 17 ஆம் திகதி மாலை 3.00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் ஜீவரட்ணம் ஜெயதீஸ் அருங்காட்சியகங்கள் முற்கற்பிதங்களும் யதார்த்தங்களும் என்னும் கருப்பொருளில் உரையாற்றவுள்ளார். (ஸ்ரீ)

## மரண அறிவித்தல்

## செல்லர் சரவணன்



சுழிபுரம் மத்தியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு மட்டக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லர் சரவணன் அவர்கள் 11.05.2011 (புதன்கிழமை) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லர்-தெய் வானை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற அரியம் மற்றும் பூபதி, கர் ணன் (கண்ணன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், அமரர் கிருஷ்ணரின் அன்பு மைத்துனரும், செல்லக்குமார், ஆனந்தகுமார் (துங்கப்பழம்), கணேசகுமார், சிவகுமார் (ஜேர்மனி), கமலகுமாரி (சுவிஸ்), வசந்தகுமாரி (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 15.05.2011 (ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் சுழிபுரம் திருவடிநிலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
சகோதரர்கள்.
தொ.பே. 0776176951

சுழிபுரம் மத்தி,
சுழிபுரம்.

(4936)

## 2 ஆம் ஆண்டு நினைவு



அன்னை மடியில்
29
05
1975

ஆண்டவன் அடியில்
15
05
2009

## அமரர் முருகுப்பிள்ளை கிருபாகரன்

காலன் உம்மைக் கவர்ந்து
ஈராண்டுகள் ஆனபோதும்
காசினியில் உம் வாழ்க்கை
காவியமாய் ஆன போதும்
சுற்றமெல்லாம் சூழ்ந்து-உம்

சுதந்திர மேனி சுடரிழந்த துயர்-பகிர்ந்தபோதும்
பாவி மனம் மறுக்கிறதே-உம்
பாசமொழி மௌனித்து விட்டதென்பதை...
உம் ஆத்ம சாந்திக்காய்ப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மாங்குளம் வீதி,
ஒட்டுசுட்டான்.

மு.சிறிதரன் (அண்ணா)

(4934)

# முல்லைத்தீவு வலயமட்ட தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்

நேற்றைய தொடர்ச்சி...

**பிரிவு-5**

**இசை தனி**

ம.கீர்த்தனா (மு/வற்றாப்பளை ம.வி), சி.லக்ஷனா (மு/ வித்தியானந்தாக்கல்லூரி), ஸ்ரீ.டன்சியா (மு/ புதுக்குடியிருப்பு ம.க)

**திறனாய்வு**

சி.ஆன்அர்ச்சனா (மு/ புதுக் குடியிருப்பு ம.க), பா.பாமகள் (மு/ வித்தியானந்தாக் கல்லூரி), ஆ.விஜிதா ( மு/முல்லைத்தீவு ம.வி)

**கட்டுரை/இலக்கியம்**

**நயத்தல்**

அ.டீனுஜான்சி (மு/ புதுக் குடியிருப்பு ம.க), தே.நிதர்சினி (மு/ பாரதி வித்தியாலயம் ), அ.ஜின்சிகா ( மு/முல்லைத்தீவு ம.வி)

**நடனம் தனி**

ர.எழில்மதி ( மு/ வித்தியானந்தாக் கல்லூரி), ம.பிந்துஜா (மு/ வற்றாப்பளை ம.வி), சு.சுமணா (மு/குமுழமுனை ம.வி)

**கவிதையாக்கம்**

அ.லிபின்சியா ( மு/முல்லைத்தீவு ம.வி), ப.மரிஸ்ரலா ( மு/ வித்தியானந்தாக் கல்லூரி), சி.மயூரா (மு/செம்மலை ம.வி)

**பேச்சு**

சி.சுபாங்கி (மு/குமுழமுனை ம.வி), சி.லோகேஸ்வரன் ( மு/ வித்தியானந்தாக் கல்லூரி), சி.தனுஸ்ரா ( மு/புதுக்குடியிருப்பு ம.வி)

**பாவோதல்**

ந.நேருஜா (மு/ வித்தியானந்தாக் கல்லூரி), கே.சுபர்ணா (மு/ புதுக்குடியிருப்பு ம.வி), ம.சுஜா (மு/செம்மலை ம.வி)

**இலக்கணப்போட்டி**

த.யதுர்மிலா (மு/முல்லைத்தீவு ம.வி), ம.கம்சிகா (மு/வித்தியானந்தாக் கல்லூரி), ச.மோகனேஸ்வரி (மு/ பாரதி வித்தியாலயம்)

**சிறுகதையாக்கம்**

க.அபிரா(மு/விசுவமடு ம.வி), த.டிட்ரியம்மா (ஆனந்தகுமாரசுவாமிந.பு.நி ), பா.பிரசாந் ( மு/ புதுக்குடியிருப்பு ம.வி)

**குறுநாடக ஆக்கம்**

ஜெ.அஜிந்தன் ( மு/ வித்தியானந்தாக் கல்லூரி), இ.தர்சன் (மு/குமுழமுனைம.வி), வி.வினோதா (மு/வற்றாப்பளை ம.வி)

**திறந்த போட்டி**

**நாட்டிய நாடகம்**

**(நடனம் குழு 2)**

மு/வற்றாப்பளை ம.வி, மு/ வித்தியானந்தாக் கல்லூரி, மு/ கலைமகள் வித்தி

**நடனம் குழு 1**

மு/செம்மலை ம.வி, மு/ வித்தியானந்தாக் கல்லூரி, மு/புதுக் குடியிருப்பு ம.வி

**நாட்டார் இசை**

மு/கள்ளப்பாடு அ.த.க.பா, மு/ குமுழமுனை ம.வி, மு/தேராவில் த.வி

**இசை குழு 1**

மு/கலைமகள் வித்தி, மு/விசுவமடு ம.வி, மு/குமுழமுனை ம.வி

**விவாதம்**

மு/ வித்தியானந்தாக் கல்லூரி, மு/ குமுழமுனை ம.வி

**தமிழறிவு வினாடி வினா**

மு/குமுழமுனை ம.வி,மு/ முல்லைத்தீவு ம.வி, மு/புதுக் குடியிருப்பு ம.வி

**வில்லுப்பாட்டு**

மு/கலைமகள் வித்தி

**இலக்கிய நாடகம்**

மு/முல்லைத் தீவு ம.வி

**முஸ்லிம் கலாசார நிகழ்ச்சி**

மு/ வித்தியானந்தாக் கல்லூரி.

**இசை குழு 2**

மு/முல்லைத் தீவு ம.வி, மு/ புதுக்குடியிருப்பு ம.வி, மு/விசுவமடு ம.வி. (முற்றும்)

# 2600ஆவது சம்புத்தத்வ ஜயந்தியை முன்னிட்டு ம.வங்கியால் நாணயக் குத்திகள் வெளியீடு

சம்புத்தத்வ ஜயந்தி நாளை மறுதினம் இடம்பெறுகின்றது. இச் சம்பவத்தைக் குறிக்கும் விதத்தில் இலங்கை மத்திய வங்கி ரூ.1,000 மற்றும் ரூ.10 இனங்களைக் கொண்ட இரண்டு நாணயக் குத்திகளை வெளியிட இருக்கிறது.

இதில் மாசற்ற, கறைபடியாத ரூ.1,000 வெள்ளி நாணயக்குத்தி ஞாபகார்த்த நாணயக்குத்தியாகவும் ரூ.10 வழமையான சுற்றோட்டத்திற்கு விடும் நாணயக்குத்தியாகவும் இருக்கும்.

இலங்கை மத்திய வங்கி 1957 ஆம் ஆண்டிலிருந்து முக்கியமான நிகழ்வுகளையும் ஆட்களையும் குறிக்கும் விதத்தில் ஞாபகார்த்த நாணயக்குத்திகளை வெளியிட்டு வருவதுடன், அந்த வகையில் 2600 ஆவது சம்புத்தத்வ ஜயந்தியைக் குறிக்கும் விதத்தில் மத்திய வங்கி வெளியிடவுள்ள நாணயக் குத்திகள் 52 மற்றும் 53ஆவது ஞாபகார்த்த நாணயக் குத்திகளாகவும் இருக்கும்.




டயலொக் நிறுவனம், கொழும்பு நகரில் 4 -வது பரம்பரை (4G) வலையமைப்பினை அமைத்துள்ளது. இந்த பரீட்சார்த்த வலையமைப்பு கொழும்பின் முக்கிய சில இடங்களை உள்ளடக்கியுள்ளதுடன் தெற்காசியப் பிராந்தியத்திலேயே இதனை முதன்முதலில் அமுல்படுத்தும் நிறுவனம் என்ற பெருமையையும் டயலொக் பெற்றுக் கொள்கிறது எனவும்,

இந்த பரீட்சார்த்த வலையமைப்பின் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு இலங்கையின் அனைத்துப் பாகங்களில் உள்ளோருக்கும் 4 ஆவது பரம்பரை புரோட்பாண்ட் சேவைகளை பெற்றுக்கொடுக்க டயலொக் முனைப்புடன் செயற்படுகின்றது என டயலொக் குழும பிரதம நிறைவேற்று அதிகாரி கலாநிதி ஹன்ஸ் விஜசூரிய தெரிவித்தார்.

# 2011இன் முதல் காலாண்டில் செலான் வங்கி இலாபம் ரூ.256.3 மில்.



2011ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் ரூ.256.3 மில்லியனை இலாபமாக செலான் வங்கி பதிவு செய்துள்ளது. இது முந்தைய வருடத்தின் காலப் பகுதியின் ரூ.185.9 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 38 சதவீத அதிகரிப்பாகும்.

வங்கியின் வரிக்கு முந்திய இலாபம் ரூ.395 மில்லியனாக பதியப்பட்டுள்ளதுடன், முந்தைய வருடத்தின் இதே காலப் பகுதியில் ரூ.291.7 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 36 சதவீத அதிகரிப்பாகும்.

இது குறித்து கருத்துத் தெரிவித்த செலான் வங்கியின் தலைவர் ஈஸ்ட்மன் நாரங்கொட,

இச் சாதனை இலங்கை மக்கள் செலான் வங்கி மேல் வைத்துள்ள நம்பிக்கை மற்றும் விசுவாசத்தின் அடையாளம் எனத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; இன்று நாம் உறுதித் தன்மையையும் இலாபத் தன்மையையும் அனுபவிக்கிறோம். தந்திரோபாய திட்டமிடல் மற்றும் ஊழியர்களின் அர்ப்பணிப்பைக் கொண்ட எமது பரந்த தந்திரோபாயத் திட்டங்களுடனான பல பகுதிகளை உள்ளடக்கிய எமது மீள்-மேம்படுத்தல் செயல் திட்டமானது முதலீட்டாளர் நம்பிக்கையை கட்டியெழுப்ப பிரதான காரணியாக இருந்தது. அத்துடன் 2010ஆம் ஆண்டு எமது சகல எதிர்பார்ப்புக்களையும் விஞ்சும் ஓர் ஆண்டாக இருக்கும் எனத் தெரிவித்தார்

# ஹச் ஊடாக இணைய சேவை

ஹச் நிறுவனம் தமது வாடிக்கையாளர்கள் சகலருக்கும் கையடக்கத் தொலைபேசி மூலம் இணையத் தளங்களைப் பயன்படுத்தும் வசதியை வழங்கியுள்ளது.

வாடிக்கையாளர்களின் வசதிக்கேற்ப தினசரி, வாராந்த மற்றும் மாத அடிப்படையில் ரூ.11, ரூ.21 மற்றும் ரூ.51 செலுத்தி முறையே **50 MB, 100 MB, 300 MB** தரவுப் பொதிகளைப் பெற்று இந்த இணைய வசதிகளைப் பயன்படுத்தலாம்.

இவ் வசதியைப் பயன்படுத்தி பேஸ்புக், டுவிட்டர் போன்ற சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்த முடியும்.

அத்துடன் யூரியூப் மூலமோ அல்லது வேறு இணையத் தளங்கள் மூலமோ திரைப்படங்களை பார்வையிட முடிவதுடன் அவற்றை பரிமாறிக் கொள்ளவும் முடியும்.

இது குறுத்து கருத்து தெரிவித்த ஹச் அதிகாரி அருள் வாஸ்,

இவ் வசதியைப் பயன்படுத்தி பாடல்களையும் வீடியோக்களையும் தரவிறக்கும் போது குறைந்த கட்டணமே அறவிடப்படுகிறது. உதாரணமாக **MP 3** முறையில் ஒரு பாடலுக்கான தரவு 3 முதல் 4 **MB** மட்டுமே.

வாடிக்கையாளர்கள் தாம் விரும்பும் பக்கேஜ்களைப் பெற்றுக் கொள்ள *131 # இலக்கத்திற்கு டயல் செய்து இந்த வசதியைப் பயன்படுத்தலாம் என ஹச் நிறுவனம் அறிவித்துள்ளது.

# கொக்கா கோலாவுக்கு வயது 125

கொக்கா கோலா நிறுவனம் உலகளவில் மென்பான வர்த்தகத்தை ஆரம்பித்து 125 வருட பூர்த்தியை அண்மையில் கொண்டாடியது.

இது குறித்து நிறுவனத்தின் தலைவரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான எம்.கெனட் தெரிவித்ததாவது, எங்களுடைய உற்பத்திகளை விரும்பும் இந்த மக்கள் இல்லாவிடில் நாம் இந்த மைல்கல்லை எட்டியிருக்க முடியாது. ஏனெனில் கடந்த 125 வருடங்களில் கொக்கா கோலாவை பருகி மகிழ்ந்த அனைவரும் உலகம் புத்துணர்ச்சி பெறுவதற்கு உதவி புரிந்தவர்களாக உள்ளனர் என்றார்.

இந்த நாமம் இன்று இந்த நிலையை அடைவதற்கு காரணமாயிருந்த உலகெங்கிலும் உள்ள மக்களுக்கு நன்றி தெரிவித்து இந்த வருடம் முழுவதும் இதனைக் கொண்டாட விரும்புகிறோம் என்றார்.

கொக்கா கோலா 1886 மே 8ஆம் திகதி அமெரிக்காவின் அட்லாண்டாவில் உருவாக்கப்பட்டது.

இன்று உலகில் மிகப் பாரிய குளிர்பான உற்பத்தி நிறுவனமாக கொக்கா கோலா நிறுவனம் உள்ளது. 500 இற்கும் மேற்பட்ட உற்பத்தி நாமங்களின் ஊடாக உலகளவில் கொக்கா கோலா தமது உற்பத்திகளை சந்தைப்படுத்தி வருகிறது.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 108.97 | 110.65 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 176.45 | 180.60 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 153.86 | 158.11 |
| சுவிஸ் பிராங் | 121.74 | 126.05 |
| கனேடிய டொலர் | 112.07 | 115.76 |
| அவுஸ்திரேலிய டொலர் | 114.96 | 118.77 |
| சிங்கப்பூர் டொலர் | 87.14 | 89.69 |
| ஜப்பான் யென் | 1.33 | 1.37 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.45 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 29.87 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி




# புதிய லோகோவிற்கு பெயர் சூட்டியது ஏர்டெல்

முன்னணி தொலைத்தொடர்பு நிறுவனமான பார்தி ஏர்டெல் நிறுவனம் தங்கள் நிறுவனத்தின் புதிய லோகோவிற்கு வேவ் என்று பெயர் சூட்டியுள்ளது.

இதுதொடர்பில் பார்தி ஏர்டெல் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இணைய வழிப் போட்டியின் மூலமாக இப் பெயர் தேர்ந்தெடுக்கப்பட்டது. இதற்கான பணியை கடந்த 6 மாதங்களுக்கு முன்பதாகவே, தங்கள் நிறுவனம் தொடங்கியது.

ஆசியா மற்றும் ஆபிரிக்கா கண்டங்களில் 19 நாடுகளில் 200 மில்லியனுக்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களைக் கொண்ட தங்கள் நிறுவனம், வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவையை அளிக்கும் பொருட்டு புதிய இலட்சினைக்கு வேவ் எனப் பெயரிட்டுள்ளதாக நிறுவனம் அறிவித்துள்ளது.

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)


| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 7319.15 | 7319.94 ⇧ |
| மிலங்கா விலைச்சுட்டி | 6736.88 | 6769.36 ⇧ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 8,551.24 |

***உயர்வடைந்த பங்குகள்(ரூ.):*** நேஷன் லங்கா (21.60), ஈஸ்டன் மேர்ஷன்ட் (1589.00), ஒபிஸ் ஈக்கியூப்மன்ட் (120.40), நுவரெலிய (1663.10), மாரவில ரெஷோட்ஸ் (12.20).

***சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):*** செரண்டிப் லான்ட் (956.00), பாரஹன் (1201.10), அலுபாப் (113.40), ஹரிச்சந்திர (2000.00), பேருவள வோல்க்இன் (247.60).

**மேலதிக தகவல்கள்: www.cse.lk**

# ஸ்கைப்பை தன்வசப்படுத்துகிறது மைக்ரோ சாப்ட் நிறுவனம்




இணையத்தளத்தின் மூலம் தொலைபேசி மற்றும் வீடியோ உரையாடல்களை மேற்கொள்ள வழி செய்யும் சேவையான ஸ்கைப்பை, மைக்ரோசாப்ட் நிறுவனம் 8 .5 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு (ரூ.93 ஆயிரம் கோடி ரூபாய்) வாங்க ஒப்புக் கொண்டுள்ளது. இது தொடர்பாக அமெரிக்காவின் முன்னணி நாளிதழான தி வோல்ட் ஸ்ரீட் ஜேர்னலில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

ஸ்கைப்பின் மூலம் மாதமொன்றுக்கு 170 மில்லியன் மக்கள் இணையத்தளத்தின் வழியாக ஒலி மற்றும் ஒளி வடிவிலான உரையாடல்களை மேற்கொள்கின்றனர். இதன்மூலம் இந்த பெரும்தொகையானவர்கள் மைக்ரோசாப்ட் மென்பொருட்களை பயன்படுத்துவோரின் எண்ணிக்கையில் கூடுவார்கள்.

2003-ம் ஆண்டு நிக்லஸ் ஜென்ஸ்டிரோம் மற்றும் ஜான்ஸ் பிரிஸால் உருவாக்கப்பட்டது இந்த ஸ்கைப். தொடக்கத்தில் கோப்புகளை பரிமாறிக்கொள்ளும் சாதனமாகவும், பின் இசை தொடர்பான சிறந்த தொழில்நுட்பமாக உருப்பெற்று, பின்பல்வேறு தொழில்நுட்பக் கலைஞர்களால் மேம்படுத்தப்பட்டு, தற்போதைய அளவில், ஸ்கைப் மிகச்சிறந்த மற்றும் முன்னணி இணையத்தள தொலைபேசி சேவை வழங்கும் தொழில்நுட்பமாக உருவெடுத்துள்ளது.

ஆனால் தற்போது ஸ்கைப் நிறுவனம் கடனில் சிக்கி தத்தளித்து வருகிறது. இதையடுத்து ஸ்கைப்பை தன்னகத்தே கொண்டிருந்த நிறுவனங்கள் இதை விற்க முடிவெடுத்தன.

இணையத்தள ஜாம்பவானான கூகுள், பேஸ்புக் மற்றும் மைக்ரோசாப்ட் உள்ளிட்ட நிறுவனங்கள் வாங்க முன்வந்தன.

இதில் மைக்ரோ சாப்ட் அதிக விலைக்கு வாங்க முன்வந்துள்ளது.

# அவுஸ். செஞ்சிலுவைச் சங்க நிதியுதவியுடன்

# மருதங்கேணியில் 350 நிரந்தர வீடுகள்

## பிரதேச செயலர் திருலிங்கநாதன் தகவல்

(மருதங்கேணி)

மருதங்கேணியில் மீள்குடியேறிய மக்களுக்கு அவுஸ்திரேலிய செஞ்சிலுவைச் சங்கத்தின் நிதியுதவியுடன் 350 நிரந்தர வீடுகள் அமைக்கப்படவுள்ளதாக பிரதேச செயலர் என். திருலிங்கநாதன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மீள்குடியேறிவரும் மக்களுக்காக வெளிநாட்டு நிறுவனங்கள் பல உதவிகளை செய்து வருகின்றது. அதன்படி அவுஸ்திரேலிய செஞ்சிலுவைச் சங்க தலைமைக் காரியாலயத்தின் நிதியுதவியுடன் இலங்கைக் கிளையினால் 350 நிரந்தர வீடுகள் மிக விரைவில் அமைக்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை அந்த நிறுவனம் மேற்கொண்டு வருவதோடு பயனாளிகள் தெரிவு நடவடிக்கையும் இடம்பெற்று வருகிறது.

மீள்குடியேறிய மக்களுக்கு அத்தியாவசிய தேவையாக இந்த வீட்டுத்திட்டங்கள் காணப்படுகின்றன.

யுத்தம் காரணமாக தமது வாழ்விடங்களை விட்டு வெளியேறிய மக்களுக்கு இவ்வாறான உதவிகள் கட்டாயம் செய்து கொடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-6)

## நூலகவார நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையின் கோண்டாவில் பொது நூலகத்தில் நூலக வார நிகழ்வுகள் கடந்த 12 ஆம் திகதி ஆரம்பமாகி எதிர்வரும் 18 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வுகளில் கட்டுரைப்போட்டி, பொதுத் தேடல் போட்டி, சஞ்சிகை ஆக்கப்போட்டி என்பன இடம்பெறவுள்ளன.

இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்புபவர்கள் கோண்டாவில் பொதுநூலகத்துடன் தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம் என கோண்டாவில் பொது நூலக நூலகர் செல்வி கே. அனிதா கேட்டுக் கொண்டுள்ளார். (ஸ்ரீ-2)

# அடிப்படை வசதியின்றி வாழ்ந்து வரும் மாந்தை எள்ளுப்பிட்டி கிராம மக்கள்

(கொழும்பு)

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மாந்தை எள்ளுப்பிட்டி கிராம மக்கள் 20 வருடங்களுக்குப் பின்னர் கடந்த வருடம் நவம்பர் மாதம் மீண்டும் மீள் குடியேற்றம் செய்யப்பட்டு சுமார் 6 மாதங்களைக் கடந்து செல்கின்ற போதும் குறித்த கிராம மக்கள் எவ்வித அடிப்படை வசதியும் இன்றி வாழ்ந்து வருவதாக தெரிவிக்கின்றனர்.

இந்த கிராம மக்கள் இடம்பெயர்ந்த நிலையில் மன்னாரில் உள்ள அவர்களது உறவினர் மற்றும் நண்பர்களின் வீடுகளில் வாழ்ந்து வந்தனர்.

பின் இவர்கள் கடந்த வருடம் நவம்பர் மாதம் மீள்குடியமர்த்தப்பட்டனர். பின் தற்காலிக வீட்டுக்கான பொருட்கள் கட்டம் கட்டமாக வழங்கப்பட்டு வந்தது.

அதன் பின்னர் உதவி வழங்கும் செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட போதும் அடிப்படை வசதிகள் இல்லாத நிலையில் தற்போது சுமார் 45 குடும்பங்கள் மட்டுமே உள்ளன.

எனவே தாம் தொடர்ந்தும் பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதாகவும் தமது இயல்பு வாழ்க்கைக்கு திரும்ப உரிய அதிகாரிகள் கவனம் செலுத்துமாறும் அம்மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஸ்ரீ-2)

## வைகாசி விசாக பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை தென்மேற்கு விழிசிட்டி அருள்மிகு ஸ்ரீபத்திரகாளி சமேத வீரபத்திரர் ஆலய வைகாசி விசாகப் பொங்கல் விழா எதிர்வரும் 18 ஆம் திகதி புதன் கிழமை காலை 8மணிக்கு நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-2)

# இலங்கையர் உள்ளிட்ட அறுவர் இங்கிலாந்தில் கைது

இலங்கையர் ஒருவர் உள்ளிட்ட ஆறு சட்டவிரோத குடியேறிகளை இங்கிலாந்து எல்லை பொலிஸ் அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

இவர்களை துணி உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றில் இருந்து கைது செய்துள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையைச் சேர்ந்த 31 வயதான ஒருவரும் பாகிஸ்தானை சேர்ந்த 37 வயதுடைய யுவதி ஒருவரும் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதுதவிர மேலும் ஒரு யுவதி உள்ளிட்ட நான்கு இந்தியர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நாடு கடத்தப்படுவர் என இங்கிலாந்து எல்லை பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் மூவரின் அரசியல் அந்தஸ்து கோரும் விண்ணப்பம் இங்கிலாந்து அரசாங்கத்தால் ஏற்கனவே நிராகரிக்கப்பட்டமை ஆரம்ப விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. (ஸ்ரீ-2)

# பருத்தித்துறை கோட்டமட்ட ஆங்கிலதின போட்டி முடிவுகள்

(அல்வாய்)

பருத்தித்துறைக் கோட்ட மட்ட ஆரம்பப் பிரிவு ஆங்கில தினப் போட்டி முடிவுகள் வடமராட்சி வலய ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. சுந்தரமூர்த்தியால் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்றோர் விபரம் வருமாறு,

**வாசிப்பு**

**தரம் 3**

பு.மதுஷா (வட இந்து மகளிர் கல்லூரி), க. அம்சாயினி(வட இந்து மகளிர் கல்லூரி), தி. ஜெனகன்(புற்றளை ம.வி)

**தரம் 4**

சி.சாதனன்(தொண்டைமானாறு வீரகத்தி ம.வி), ந.பமிலா(தும்பளை சிவப்பிரகாச ம.வி), தி.பானுஜா(தும்பளை சிவப்பிரகாச ம.வி)

**தரம் 5**

க. ரஜிகரசர்மா (புற்றாளை ம.வி), ஆர். சுகந்தன் (தும்பளை சிவப்பிரகாச ம.வி), ஏ. நிலக்ஷன் (துன்னாலை மேற்கு மெ.மி.த.க)

**பேச்சு**

**தரம் 3**

ந.நிருபா (வட இந்து மகளிர் கல்லூரி), எஸ். மஞ்சரிதா(அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலை), ஜே. ஜதீசன் (தும்பளை சிவப்பிரகாச ம.வி)

**தரம் 4**

ரி. தனரூபா (தும்பளை சிவப்பிரகாச ம.வி), ஜெ. சர்மினி (வட இந்து மகளிர் கல்லூரி), க. விஷ்ணுயி (மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தி)

**தரம் 5**

வி. ஜவஸ்திகா (யா/வட இந்து மகளிர் கல்லூரி), எஸ். கம்சாயினி (யா/ வட இந்து மகளிர் கல்லூரி), ஐ. சகித்தியா (யா/ பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தி

**பார்த்தெழுதுதல்**

**தரம் 3**

த. தேவசுதன் (தும்பளை சிவப்பிரகாச ம.வி), பா. சசிகா (மேலைப் புலோலி சைவப் பிரகாச வித்தி), த. தாரணி (வல்வை மகளிர் ம.வி)

**தரம் 4**

கே. சானுஜன் (தும்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலை), ஆ. பாலமனுஷா (மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தி), சி. அபினஜா (வட இந்து மகளிர் கல்லூரி)

**தரம் 5**

ம.லலிதாம்பிகை (புலோலி மெ.மி.த.க.பா), செ. தேவகி (வட இந்து மகளிர் கல்லூரி), நா. சுஜந்தினி (வட இந்து மகளிர் கல்லூரி)

முதல் இரண்டு இடங்களைப் பெற்ற போட்டியாளர்கள் வலய மட்டத்தில் பங்குபற்றலாம் என வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

# மருதங்கேணியில் மீள்குடியேறியுள்ள மக்களுக்கு கூரைத்தகடுகள் விநியோகம்

(மருதங்கேணி)

மருதங்கேணிப் பகுதியில் மீள்குடியேறிய மக்களுக்கு இந்திய அரசினால் வழங்கப்பட்ட 2 ஆயிரத்து 400 கூரைத்தகடுகள் விநியோ கிக்கப்படவுள்ளதாக பிரதேச செயலர் என். திருலிங்கநாதன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் யுத்தத்தின் பின்பு தற்போது தான் மக்கள் மீள்குடியேற்றப்பட்டு வருகின்றனர்.

தமது வாழ்விடங்களை விட்டு வெளியேறி நீண்ட கால இடைவெளியின் பின் மீள்குடியேறும் மக்களுக்கான வாழ்வாதார உதவிகள் அதிகளவில் செய்து கொடுக்கப்பட வேண்டியுள்ளது.

இதில் பயனாளிகளை தெரிவு செய்யும் போது அனைவரையுமே தெரிவு செய்ய வேண்டிய நிலை ஏற்படுகிறது.

காரணம் யுத்தத்தால் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு விதத்தில் பாதிப்படைந்துள்ளனர்.

அந்த வகையில் இந்திய அரசாங்கத்தால் மீள்குடியேறிய மக்களுக்காக தற்காலிக கூடங்களை அமைப்பதற்கு கூரைத்தகடுகள் வழங்கப்பட்டுள்ளது.

இதில் 200 குடும்பங்களுக்கு 12 கூரைத் தகடுகள் வீதம் 2 ஆயிரத்து 400 கூரைத் தகடுகள் விநியோகிக்கப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-6)







பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு, வடக்கு மாகாண சபை ஆகியன இணைந்து நடத்தும் யாழ். மாவட்டத்தில் முதற்கட்டமாக மனைப் பொருளாதாரத்தின் மூலம் 4000-5000 வரையிலான குடும்ப அலகுகளைக் கட்டியெழுப்பும் அபிவிருத்தித் திட்டம் நேற்று முன்தினம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் ஆரம்பமானது. இதில் யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமார் உரையாற்றுவதையும் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். *(படங்கள்:- அலுவலக செய்தியாளர், என்.குமார்)*

# இலங்கையை உலுப்பிவரும் ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை

(37) 98. பயனற்ற தமது இராணுவ நிலையிலும் எல்.ரி.ரி.ஈ. சரணடைய மறுத்ததோடு பொதுமக்கள் அங்கிருந்து வெளியேறுவதைத் தொடர்ந்துதடுத்து மனிதக் கேடயங்களாக அவர்கள் அங்கிருப்பதை உறுதிசெய்து கொண்டனர். இராணுவக்கட்டுமானங்களையும் அரண்களையும் கட்டுவதற்காக அல்லது ஏனைய கட்டாயக் கடமைக்காக அவர்களைக் கட்டாயப்படுத்தினர். அருகிவரும் தம் அணிகளைத் தக்கவைப்பதற்காக சிறுவர்கள் உள்ளிட்ட கட்டாய அணிசேர்க்கும் பழக்கத்தை அவர்கள் மேலும் தீவிரமாகக் கடைப்பிடித்தனர். எல்.ரி.ரி.ஈ. இன் ஆட்சேர்ப்பு அதிகரித்த போது பெற்றோர் அதனை எதிர்த்துத் தம்குழந்தைகளை அணிசேர்ப்பதைத் தடுப்பதற்காக அவர்கள் எதை வேண்டுமானாலும் செய்யும் அளவுக்குத் துணிந்தனர். இரகசியமான இடங்களில் அவர்கள்குழந்தைகளை மறைத்து வைத்தனர் அல்லது அவர்களுக்குத் திருமணம் செய்து வைத்தனர். அவர்கள் அணி சேர்ப்பதை தடுக்க முயற்சிக்கும் போது எல்.ரி.ரி.ஈ. உறுப்பினர்கள் சொந்தங்களையோ அல்லது பெற்றோரையோ சில சமயம் மூர்க்கத்தனமாக தாக்கவும் முனைந்தனர். எல்.ரி.ரி.ஈ.இன் தலைமைத்துவத்தைப் பாதுகாப்பதற்கான பலவற்றை உள்ளிட்ட இவ்வாறான சகல அணுகுமுறைகளும் பொதுமக்களின் அவஸ்தை பற்றிய அலட்சியப் போக்கையும் அவர்களைப் பலியிடுவதற்கான விருப்பத்தையும் சித்தரித்துக் காட்டுவதாக இருந்தது.

99. ஆயினும், இரண்டாவது யுத்தசூன்ய வலயத்தில் நிலைமை மோசமடையத் தொடங்கியதும், அதிக எண்ணிக்கையிலான பொதுமக்கள் எல்.ரி.ரி.ஈ.யின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இருந்து தப்பியோட முனைந்தனர். அநேகமாக நடுநிசியில் மண்மேடுகளைக் கொண்ட ஏரிகளில் இறங்கிச் செல்லவும் அல்லது கண்ணி வெடிகள் நிறைந்த பிரதேசங்களினூடாகச் செல்லவும் மக்கள் ஆரம்பித்தனர்.

மீதமான சந்தர்ப்பங்களில் மக்கள் கண்ணிவெடிகள் மீது அடிவைத்து அவை வெடித்ததும் தம் உறுப்புக்களை இழந்தனர் அல்லது உயிரிழந்தனர். பெப்ரவரிமாத ஆரம்பத்திலிருந்து தப்பியோட முயற்சிப்பவர்களைச்சுடும் கொள்கையொன்றை எல்.ரி.ரி.ஈ. பின்பற்றியதோடு, தப்பியோடும் பொதுமக்களைக்கண்டு பிடிப்பதற்காக உறுப்பினர்கள் காத்திருந்தனர்.


### 6. இரண்டாவதாக யுத்தசூன்ய வலயத்தில் இலங்கை இராணுவத்தின் ஷெல்லடித் தாக்குதல்

100. 2009 பெப்ரவரி 6ஆம் திகதி தொடக்கம் சகலதிசைகளில் இருந்தும் தரை, ஆகாய மற்றும் கடல்மார்க்கமாக இரண்டாவது யுத்தசூன்ய வலயத்தை இலங்கை இராணுவம் தொடர்ச்சியாகச் ஷெல்லடித்தாக்குதலுக்கு உள்ளாக்கியது. அப்பிரதேசத்தில் சுமார் 3இலட்சத்துக்கும் 3இலட்சத்து30ஆயிரத்திற்கும் இடைப்பட்ட எண்ணிக்கையிலான பொதுமக்கள் இருப்பதாக மதிப்பீடு செய்யப்பட்டது. இலங்கை இராணுவம் அதன் தாக்குதல் நடவடிக்கைக்காக, வான் தாக்குதல், நீண்ட தூரம் தாக்கக்கூடிய பீரங்கிகள், ஹோவிட்டசர்ஸ், பல்குழல் எறிகணை செலுத்திகள் மற்றும் சிறிய ஆயுதங்களைப் பாவித்தது.

(38).101. அச்சமயம் பொதுமக்கள் காயமடைவதைத் தடுப்பதற்காக எம்மிடையே காயமேற்படுகிறது என பாதுகாப்பு செயலாளர் குறிப்பிட்டார். "இவ்விடயம் எமக்கு மிகவும் கவலையுளிப்பதாக இருக்கிறது. இல்லாவிடின் சரமாரியாகக் குண்டுவீசி எம்மால் அப்படியே முன்னேறிச் சென்றிருக்க முடியும். பெப்ரவரி 25 ஆம் திகதியும் அதன் பின்னர் ஏப்பிரல் 27 ஆம் திகதியும் இலங்கை இராணுவம் தொடர்ந்தும் இரண்டாம் மற்றும் மூன்றாம் யுத்தசூன்ய வலையங்கள் மீது கனரக ஆயுதங்களைப் பாவிக்கவில்லை என அரசாங்கம் அறிவித்தது. ஆனால் களத்தில் நடப்பது இதற்கு மாறானதாகவே இருந்தது. ஆரம்பத்திலிருந்தே தீவிரமாக பீரங்கிகளைப்பிரயோகிப்பது இலங்கை இராணுத்தின் இராணுவ நடவடிக்கையின் அடிப்படை அணுகுமுறையாகவிருந்தது. வெற்றிநெருங்கியதும் இப்பழக்கம் கைவிடப்படவில்லை மாறாக எல்.ரி.ரி.ஈ.யினை நகரவிடாது அது அதிக எண்ணிக்கையிலான பொதுமக்கள் உள்ள பிரதேசத்தில் சுற்றிவளைக்கப்பட்டுள்ள நிலையிலும் அது தொடர்ந்தது. தீவிர் ஷெல்வீச்சுக் காரணமாக அப்பிரதேசத்திலிருந்து தப்பியோட பல பொதுமக்கள் முயற்சித்தபோது பொதுமக்கள் அங்கிருந்து செல்வதற்கு மக்கள் மீது அழுத்தத்தைப் பிரயோகிக்கும் இன்னுமொரு அரசாங்கநோக்கம் நிறைவேறுவதாக அமைந்தது. தொடர்ந்து யுத்தசூன்ய வலயத்தை இலக்கு வைப்பதற்காக இலங்கை இராணுவத்தின் பீரங்கிக் குண்டுப் பிரிவுகள் தக்கவாறு அமைத்துக் கொள்ளப்படுவதை அரசாங்கத்தின் அறிவிப்புக்கள் செய்மதிப் படங்கள் எடுத்துக் காட்டுகின்றன.



ஒப்பீட்டளவில் எல்.ரி.ரி.ஈ.யினரிடம் குறைவான கனரக ஆயுதங்களே எஞ்சியிருந்ததோடு அவற்றைப் பாவிப்பதற்கான இடவசதியும் குறைவாகவே இருந்தது.



102. சிறிய கடலோரப்பகுதியில் நெரிசல் அதிகமாகி அங்கு வாழக்கூடிய இடவசதியும் மிகக்குறைவாக இருந்தது. இடம்பெயர்தோர் தம் கூடாரங்களை அமைத்திருந்த பெரும்பாலான பிரதேசம் நீர்கசியும் கடலோர மணல் தரையாக இருந்ததோடு அது குடியிருப்பிற்கு ஏற்றதாகவும் இருக்கவில்லை. அத்தோடு இடம்பெயர்ந்தோர் அங்கும் தம் பாதுகாப்பிற்காக தற்காலிகப் பதுங்குழிகளை அமைத்துக் கொள்வதும் கஷ்டமாகவே இருந்தது. அக்காலகட்டத்தில் இடம்பெயர்ந்தோர் அன்றாட வாழ்க்கை பதுங்கு குழிகளிலேயே கழிந்ததோடு சிலர் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காகத் தம் இருப்பிடங்களுக்கு மேலே வெள்ளைக் கொடிகளைப் பறக்கவிட்டிருந்தனர். நன்னீர் அரிதாக இருந்ததோடு உணவிற்கும் தட்டுப்பாடு நிலவியதால் சிலர் பசியினால் மரணித்தனர் பருவகால மழை ஆரம்பித்ததும் பலபதுங்கு குழிகளில் நீர் நிறைந்து மக்களின் வாழ்க்கை மேலும் மோசமடைந்தது.

### 7. புதுமாத்தளன் ஆஸ்பத்திரி மீதான ஷெல்லடித் தாக்குதல்

103. புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரி புதுமாத்தளனுக்கு இடம்பெயர்ந்த போது வன்னியின் மீட்கப்படாத பிரதேசங்களில் இப்போது எந்தவொரு ஆஸ்பத்திரியும் செயற்படவில்லை. என அரசு அறிவித்தது.

இருந்தபோதிலும், இரண்டாவது யுத்த சூன்யவலயத்தில், புதுமாத்தளனை உள்ளிட்ட மூன்று தற்காலிக ஆஸ்பத்திரிகளும், வலைஞன் மடத்தில் சிறிய வைத்தியசாலை ஒன்றும் முள்ளிவாய்காலில் ஒரு ஆஸ்பத்திரியும் இருந்தன. அவற்றின் அமைவிட எல்லைகள் அனைத்தும் அரசாங்கத்திற்குத் தெரிந்தே இருந்ததோடு அவற்றின் மீது சின்னங்கள் இடப்பட்டு அவை தெளிவாகவே குறிக்கப்பட்டிருந்தன. அங்கு அரசாங்க வைத்தியர்களே தொடர்ந்தும் சேவையாற்றி வந்தனர். புதிதாகக் காயமடைந்த நூற்றுக்கணக்கான பொதுமக்கள் புதுமாத்தளன் ஆஸ்பத்திரியில் நிரம்பி இருந்தனர். அடிப்படை மருத்துவப் பொருட்களை வன்னிக்குள் அரசாங்கம் அனுமதிக்காததால், புதுமாத்தளன் ஆஸ்பத்திரியின் நிலைமை மிகமோசமாக இருந்ததோடு, அங்கு காயமடைந்தோர் உறுப்புக்கள் கசாப்புக்கடைக் கத்திகளைக் கொண்டே மயக்க மருந்தின்றி சத்திரசிகிச்சை மூலம் அகற்றப்பட்டன. சுகாதாரத் துவாய்கள் மற்றும் பருத்தித்துணிகள் புண்கட்டுந்துணியாகப் பாவிக்கப்பட்டன. போத்தல்கள் மரங்களில் கட்டித் தொங்கவிடப்பட்டு பாரிய காயமடைந்தோர் மரங்களுக்கு கீழே படுக்கவைக்கப்பட்டனர். அங்கிருந்த சில வைத்தியர்களின் கடுமையான உழைப்புக்கு மத்தியிலும் போதிய மருத்துவ வசதிகள் இன்மையால் பல நோயாளிகள் மரணித்தனர். சடலங்கள் தினம் ஆஸ்பத்திரியில் குவித்து வைக்கப்பட்டன.

104. 2009 பெப்ரவரிமாதம் 9ஆம் திகதி புதுமாத்தளன் ஆஸ்பத்திரியில் செல்வெடிகள் வீழ்ந்ததால் குறைந்த பட்சம் 16 நோயாளிகள் அங்கு கொல்லப்பட்டனர். சாலையில் அமைந்திருந்த இலங்கை ராணுவத்தின் தளங்களில் இருந்தே செல்வெடிகள் வந்தன. ஆனால் அங்கிருந்த இலங்கை இராணுவத்தினருக்கு ஆஸ்பத்திரி தெளிவாக பார்வைக்கு தென்பட்டபோதிலும் செல்வெடிகள் செலுத்தப்பட்டன. சிலகாயம் அடைந்த எல்.ரி.ரி.ஈ. உறுப்பினர்கள் புதுமாத்தளன் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்தபோதிலும் அவர்களின் எண்ணிக்கை மிகக்குறைவாக இருந்ததோடு அவர்கள் தனியானதொரு பிரிவில் வைக்கப்பட்டிருந்தனர். பின்னர் பெப்ரவரியிலும் மார்ச்சிலும் புதுமாத்தளன் ஆஸ்பத்திரியில் பலர் செல் தாக்குதலுக்கு உள்ளாகினர். மார்ச் 27ஆம் திகதி அளவில் ஆர்.பி.ஜிகள் ஆஸ்பத்திரிமீது செலுத்தப்பட்டபோது பல பொதுமக்கள் கொல்லப்பட்டனர். பொதுமக்களுக்கு விளைந்த சேதத்திற்குப் புறம்பாக சத்திரசிகிச்சைக்கூடம் தற்காலிக வார்ட்டுக்கள் மற்றும் கூரைகளும்சேதமடைந்தன.

தமிழாக்கம் தொடர் 14

(தொடரும்)

# போர்க்குற்ற விசாரணைகளை கண்காணிக்க சர்வதேச கண்காணிப்புக்குழு அவசியம்

## நவநீதம்பிள்ளை வலியுறுத்து

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் குறித்து இலங்கை அரசு மேற் கொள்ளும் விசாரணைகளை கண்காணிப் பதற்கு சர்வதேச கண்காணிப்பு குழு ஒன்று அமைக்கப்படுவதற்கு நாம் எமது பூரண ஆதரவை வழங்குவோம் என ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் நவநீதம்பிள்ளை மீண்டும் தெரிவித் துள்ளார்.

கடந்த 10 ஆம் திகதி நியூயோர்க்கில் உள்ள ஐ.நா.பாதுகாப்புச் சபை கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது,

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பில் ஐ.நா.செயலாளர் நாயகம் அமைத்த நிபுணர் குழு வெளியிட் டுள்ள அறிக்கையை நான் வரவேற்கிறேன்.

அங்கு நடைபெற்ற போரில் இரு தரப் பினரும் போர்க்குற்றங்களை மேற்கொண் டுள்ளதாக நிபுணர் குழுவின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே ஐ.நா நிபுணர் குழுவின் பரிந்து ரைகளை இலங்கை அரசு நிறைவேற்ற வேண்டும் என நான் கேட்டுக் கொள்கிறேன்.

போரில் பாதிக்கப்பட்ட மக்களின் அமை திக்கும் நீண்டகால நல்லிணக்கத்திற்கும் அது அவசியமானது.இலங்கை அரசு மேற் கொள்ளும் விசாரணைகளை கண்காணி



ப்பதற்கு சர்வதேச கண்காணிப்புக்குழு ஒன்று அமைக்கப்படுவதற்கு நாம் எமது பூரண ஆதரவை வழங்குவோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## விலங்கு விசர்நோய் தடுப்பு மருந்தேற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபை எல் லைக்குட்பட்ட குருநகர் பொதுச் சுகா தாரப் பரிசோதகர் பிரிவிற்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி வழங்கப்படவுள்ளது.

இதற்கமைய நாளை திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் மதியம் 12.30 மணிவரை கோவில் வீதியில் வைத்து ஏற்றப்படவுள்ளது.

எனவே இச்சந்தர்ப்பத்தை பயன் படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி ஊசியினை ஏற்றிக் கொள் ளுமாறு மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர். ம.மரியதாசன் அறி வித்துள்ளார்.

(ஸ்ரீ-2)

# பல்கலைக்கழக மாணவர்களுக்கு இராணுவப்பயிற்சி அளிக்கப்படவில்லை

## உயர் கல்வியமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவ மாணவியருக்கு இராணுவப் பயிற்சி வழங்கப்படவில்லை என உயர்கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

மாணவர்களின் தலைமைத்துவ ஆளு மைகளை விருத்தி செய்யும் நோக்கில் இந்த தலைமைத்துவ பயிற்சி அறிமுகப்படுத்தப் படவுள்ளதாக உயர்கல்வி அமைச்சின் செயலா ளர் சுனில் ஜயந்த நவரட்ன தெரிவித் துள்ளார்.

அதிகளவான மாணவர்களுக்கு பயிற்சி வழங்க முடியும் என்பதனால் இராணுவ முகாம்களில் பயிற்சி வழங்கத் தீர்மானிக் கப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒரே நேரத்தில் மிகவும் குறைந்த செலவில் மாணவ மாணவியருக்கு பயிற்சிகளை வழங்குவதற்கு இராணுவ முகாம்களே உசிதமானது என அவர் தெரிவித்துள்ளார்.

உயர்கல்வித் துறையின் முக்கிய மாற்றங் களில் ஒன்றாக தலைமைத்துவ பயிற்சி கருதப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அபிவிருத்தி அடைந்த நாடுகளின் பட்டதாரி களுக்கு நிகரான வகையில் இலங்கைப் பட்டதாரிகளை தரமுயர்த்தும் நோக்கில் பல் வேறு புதிய திட்டங்கள் அறிமுகப்படுத்தப் படவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பல்கலைக்கழக மாணவர் களுக்கு இராணுவ பயிற்சி அளிக்கப்படு வதனை அனுமதிக்க முடியாது என மாணவர் அமைப்புக்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றன.

(ஸ்ரீ-2)

# வெளிநாடுகளில் கடமையாற்றும் தாதியர்களுக்கு பட்டப்படிப்பு அவசியம்

## அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

வெளிநாடுகளில் மருத்துவக் கடமையாற் றும் எமது தாதியர்களுக்கு பட்டப்படிப்பின் அவசியம் நிலவுவதாக முன்னாள் சுகாதார அமைச்சரும் நீர்ப்பாசனத்துறை அமைச்சரு மான நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

சர்வதேச தாதியர் தினம் மற்றும் புளோ ரன்ஸ் நைட்டிங்கேள் நினைவு தினமும் நேற்று முன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷவின் தலைமையில் அலரி மாளிகையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் விசேட அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் மைத்திரிபால சிறிசேன உட்பட அமைச்சர்கள், முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்ட இந்நிகழ்வில் மேலும் உரையாற்றிய அமைச்சர்,

உலகில்தற்போது பேசப்படும் ஒருதொழிலாக தாதியர் தொழில் உள்ளது.

பல்வேறு சர்வதேச நாடுகளில் தாதியருக் குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. நம் நாட்டு தாதியர்களை அத் தொழிலுக்கு அனுப் புவதென்றால் அவர்கள் பெற்றுக் கொண்டுள்ள டிப்ளோமா அதற்கு போதுமானதல்ல. பட்டப் படிப்பு அவசியமாகிறது. அவர்கள் தமது பட்டப்ப டிப்பை முன்னெடுப்பதற்கான வசதிகள் ஏற் படுத்திக் கொடுக்கப்பட வேண்டும்.

தாதிமாருக்கான சட்டமூலம் பாராளுமன் றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதன்மூலம் பல சலுகைகள் பெற்றுக் கொள்ளப்பட்டுள் ளன. இதற்கிணங்க நாட்டின் சுகாதாரத் துறையை முன்னேற்றுவதில் சகலரும் ஒரே நோக்கில் செயற்படுவது அவசியம் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

(ஸ்ரீ-2)

# மின்கம்பத்திலிருந்து தவறிவிழுந்து மின்சார சபை ஊழியர் உயிரிழப்பு

(கொழும்பு)

அம்பாறை கல்முனை பிரதேசத்தில் மின்கம்பத்தில் திருத்த வேலைகளை மேற் கொண்டிருந்த இலங்கை மின்சார சபை ஊழியர் ஒருவர் மின்கம்பத்திலிருந்து தவறி விழுந்ததன் காரணமாக உயிரிழந்துள்ளார்.

கல்முனை மாதவன் வீதியிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மின்கம்பத்தில் திருத்த வேலைகளை மேற்கொண்டிருந்த சேனைக்குடியிருப்பைச் சேர்ந்த கே.கோணேசன் என்பவரே இவ் வாறு உயிரிழந்தவராவார்.

தற்போது இவரின் சடலம் கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை கல்முனைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஸ்ரீ-2)

# அரசு-ஈ.பி.டி.பி 2ஆம் கட்ட பேச்சுவார்த்தை


அரச பிரதிநிதிகளுடன் ஈ.பி.டி.பி கட்சி முக்கியஸ்தர்கள் தமிழ் மக்களது அரசியல் மற்றும் அவர்களது நாளாந்த பிரச்சினைகள் சம் பந்தமாக நேற்று முன்தினம் 2 ஆவது சுற்றுப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டனர்.


முதலாவது சுற்றில் எடுத்துக் கொள்ளப் பட்ட விடயங்கள் சம்பந்தமாக ஒருங்கி ணைந்து முடிவுகளை எட்டுவதற்காக சகல அரசியல் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்துவதாகவும் மற்றும் முக்கியமாக இரண் டாவது சபையை உருவாக்குவதற்கான அடிப் படை திட்ட வரைபை சகல கட்சிகளுக்கும் அனுப்பி அவர்களது கருத்துக்களை அறிய வுள்ளதாகவும் அரச தரப்பினால் கூறப்பட் டுள்ளதுடன் இந்த திட்ட வரைபு குறித்து பேச்சு வார்த்தையில் விரிவாக ஆராயப்பட்டது.

அதேநேரம் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் மீளக்குடி யேறியவர்களின் பிரச்சினைகள் தொடர் பிலும் முக்கியமாக இங்கு ஆராயப்பட்டது.

குறிப்பாக நில உரிமைகளை உறுதிப் படுத்தும் ஆவணங்கள் இல்லாத குடும் பங்கள் வீட்டுத் திட்டங்கள் கிடைக்காத நிலை மைக்கு தள்ளப்படுவதாகவும் இவர்களுக்கு மாற்று வழிமுறை ஆராயப்பட வேண்டுமென ஈ.பி.டி.பி தரப்பால் வலியுறுத்தப்பட்டது.


இக்குடும்பங்களின் விபரங்கள் அரச தரப்பால் பெறப்பட்டு இதற்கான முடிவு எட்டப் படும் என்று தீர்மானிக்கப்பட்டமை குறிப் பிடத்தக்கது. (ச)





வேலணை மேற்கு அருள்மிகு மகா கணபதிப் பிள்ளையார் (முடிப்பிள்ளையார்) ஆலய மஹோற்சவம் அண்மையில் ஆரம்பமானது. இதில் கொடியேற்றத்திற்காக அந்தணர்கள் ஆலய கிரியைகளில் ஈடுபடுவதையும் விநாயகப் பெருமான் உள்வீதி உலா வருவதையும் படங்களில் காணலாம்.





சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரால் உலக மகளிர் தினத்தினை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் தென்மராட்சி பிரதேச செயலாளர் திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன் பரிசில் வழங்கி கௌரவிப்பதனையும் கலைநிகழ்வினையும் விருந்தினர்களுடன் மாதர் சங்க அங்கத்தினர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்-சாவகச்சேரி செய்தியாளர்)

# சட்டவிரோத நிதிக் கொடுக்கல் வாங்கல்களை கட்டுப்படுத்த வேண்டும்

## முன்னாள் பிரதம நீதியரசர் தெரிவிப்பு



சட்டவிரோத நிதிக் கொடுக்கல்-வாங்கல் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட வேண்டுமென முன்னாள் பிரதம நீதியரசர் அசோக டி சில்வா தெரிவித்துள்ளார்.

சட்டவிரோத நிதிக் கொடுக்கல்-வாங்கல்களினால் பாரியளவில் தீவிரவாத நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகவும் பிராந்தியத்திலிருந்து இதனை இல்லாதொழிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

பயங்கரவாத நிதிக் கொடுக்கல்-வாங்கல்களினால் இலங்கை பாரிய பாதக விளைவுகளை எதிர்நோக்கியதாகத் தெரிவித்துள்ளார். தெற்காசிய நீதிவான்கள் பேரவை அமர்வுகளில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

சட்டவிரோதமான முறையில் நிதிக் கொடுக்கல் -வாங்கல்களில் ஈடுபடுவோருக்கு எதிராக சட்டங்கள் மேலும் வலுப்படுத்தப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.(ஸ்ரீ-2)

# சோதிட வாசகம் நூல்வெளியீட்டு விழா

சோதிட ஆய்வு மன்ற அனுசரணையுடன் கலா ஆரணி வெளியீட்டகம் நடாத்தும் இ.கந்தையா நினைவு மலர் வரிசை -2 சோதிட வாசகம் முதலாம் புத்தகம் வெளியீ ட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லை ஆதீனத்தில் இந்து நாகரிகத்துறை பேராசிரியர் கலாநிதி மா.வேதநாதன் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வின் நூல் வெளியீட்டுரையை ஓய்வு பெற்ற அதிபர் ஆ.சபாரத்தினம் ஆற்ற முதற்பிரதியை திருமதி மங்கையர்க்கரசி கெங்காதரம் வழங்க நூலினை வைத்திய கலாநிதி க. சிவநேசன் பெறுவார். (ஸ்ரீ-2)

# அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இந்திய பிரதமரை சந்திக்கவுள்ளார்

இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கை சந்திக்கவுள்ளார். நாளை திங்கட்கிழமை அமைச்சர் இந்தியாவிற்கு விஜயம் செய்யவுள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஸ்ணாவை அமைச்சர் பீரிஸ் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். ஐக்கிய நாடுகள் நிபுணர் குழு அறிக்கை வெளியிட்டதன் பின்னரான நிலைமைகள் குறித்து தெளிவுபடுத்தும் நோக்கில் அமைச்சர் இந்த விஜயத்தை மேற்கொள்கின்றார். இந்திய இராஜதந்திரிகளுக்கு நிபுணர் குழு அறிக்கை தொடர்பான விளக்கமளித்ததன் பின்னர் எதிர்வரும் 23ஆம் திகதி அமைச்சர் பீரீஸ் சீனாவிற்கு விஜயம் செய்யவுள்ளார். (ஸ்ரீ-2)

# தற்கொலைப்படையை தயார் செய்வதாக கூறியது மேர்வினின் தனிப்பட்ட கருத்து

## அமைச்சர் சி.பி.ரட்ணாயக்க தெரிவிப்பு

ஐ.நா. நிபுணர்குழு அறிக்கைக்கு எதிராக ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாக தற்கொலை செய்து கொள்வதாக மேர்வின் சில்வா கூறிய கருத்தை அரசாங்கம் கருத்தில் எடுக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக தனியார் போக்குவரத்துச் சேவை அமைச்சர் சி.பி. ரட்ணாயக்க தெரிவிக்கையில்,

ஜனாதிபதிக்காக தற்கொலைப் படையை தயார் செய்துவைத்துள்ளதாக மேர்வின் சில்வா கூறிய கருத்து அவரது தனிப்பட்ட கருத்தாகும். இந்தக் கருத்துக்கும் அரசாங்கத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமுமில்லை என்றார்.

நிபுணர்குழுவின் அறிக்கைக்கு எதிராக ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் 18 பேரை தற்கொலைப்படையாக தயார் செய்து வைத்துள்ளதாக பொதுமக்கள் தொடர்பாடல் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்திருந்தார்.

மேர்வின் சில்வாவின் இந்த கருத்தை அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறதா என அமைச்சர் சி.பி.ரட்ணாயக்கவிடம் கேட்டபோது அவர் இல்லை என மறுத்தார். ஒருசிலர் ஏற்றுக் கொள்ளக் கூடிய விதத்தில் நடந்து கொள்வார்கள். மற்றும் ஒரு சிலர் அதற்கு எதிராக நடந்து கொள்வார்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

ஐ.நா. அறிக்கைக்கு எதிராக அமைச்சர் சி.பி.ரட்ணாயக்க கையெடுத்து வேட்டை நடத்தி வருகிறார்.

பொதுமக்களிடம் இருந்து சேகரிக்கப்பட்ட கையெழுத்துக்களை வெசாக் முடிவுற்ற பின்னர் ஐ.நா. சபைக்கு சமர்ப்பிக்கவுள்ளதாக அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# 2011.05 15 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- ★ 1618- ஜொஹான்னெஸ் கெப்லர் முன்னர் மார்ச் 8 இல் நிராகரிக்கப்பட்ட தனது மூன்றாவது கோள் இயக்க விதியை மீண்டும் நிறுவினார்.
- ★ 1718- உலகின் முதலாவது இயந்திரத் துப்பாக்கிக்கான காப்புரிமத்தை லண்டனைச் சேர்ந்த வழக்கறிஞர் ஜேம்ஸ் பக்கிள் பெற்றார்.
- ★ 1756- இங்கிலாந்து பிரான்சின் மீது போரை அறிவித்ததில் ஏழாண்டுப் போர் ஆரம்பமாயிற்று.
- ★ 1792- பிரான்ஸ் சார்டீனியப் பேரரசு மீது போரை அறிவித்தது.
- ★ 1796-நெப்போலியனின் படைகள் இத்தாலியின் மிலான் நகரைக் கைப்பற்றினர்.
- ★ 1851- நான்காவது ராமா தாய்லாந்தின் மன்னராக முடி சூடினான்.
- ★ 1897- கிரேக்க துருக்கியப் போரில் கிரேக்கப் படையினர் பெரும் சேதத்துடன் பின்வாங்கினர்.
- ★ 1915- இந்திய பாதுகாப்புச் சட்டத்தை முன்னிறுத்தி இந்திய விடுதலைப் போராட்ட வீரர்கள் ஷவ்கத் அலியும் முகம்மது அலியும் கைது செய்யப்பட்டு சிந்துவாரா சிறையில் அடைக்கப்பட்டனர்.
- ★ 1918- பின்லாந்து உள்நாட்டுப் போர் முடிவுற்றது.
- ★ 1919- துருக்கியின் இஸ்மீர் நகரை கிரேக்கப் படைகள் முற்றுகை யிட்டனர். 350 துருக்கியர்கள் கிரேக்க இராணுவத்தினரால் கொல்லப்பட்டனர்.
- ★ 1929- ஒகைய்யோ மாநிலத்தில் கிளீவ்லன்ட் நகரில் மருத்துவமனை ஒன்றில் இடம்பெற்ற தீ விபத்தில் 123 பேர் கொல்லப்பட்டனர்.
- ★ 1932- ஜப்பானின் பிரதமர் இனுக்காய்த்சுயோஷி அரசுக் கவிழ்ப்பு முயற்சியில் கொல்லப்பட்டார்.
- ★ 1940- இரண்டாம் உலகப் போர்: பெரும் போருக்குப் பின்னர் டச்சுப் படைகள் நாசி ஜேர்மன் படைகளிடம் சரணடைந்தனர்.
- ★ 1948- இஸ்ரேல் மீது அரபு நாடுகளான எகிப்து, ஜோர்தான், லெபனான், சிரியா, ஈராக் மற்றும் சவுதி அரேபியா ஆகியன இணைந்து தாக்குதலை ஆரம்பித்தன.
- ★ 1958- சோவியத்தின் ஸ்புட்னிக் 3 விண்கலம் ஏவப்பட்டது.
- ★ 1960- சோவியத்தின் ஸ்புட்னிக் 4 விண்கலம் ஏவப்பட்டது.
- ★ 1963- நாசாவின் மேர்க்குரி- அட்லஸ் 9 விண்கலம் ஏவப்பட்டது. கோர்டன் கூப்பர் இவ்விண்கலத்தில் பயணித்து விண்வெளியில் ஒரு நாளுக்கு மேல் தங்கிய முதலாவது அமெரிக்கர் ஆனார்.
- ★ 1972- ஐக்கிய அமெரிக்காவின் இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த ஓக்கினாவா தீவு மீண்டும் ஜப்பானிடம் ஒப்படைக்கப்பட்டது.
- ★ 1978- டோக்கியோ பங்குச் சந்தை அமைக்கப்பட்டது.
- ★ 1985- குமுதினிப் படகுப் படுகொலைகள் நடைபெற்றது.
- ★ 1988- எட்டு ஆண்டுகள் போருக்குப் பின்னர் சோவியத் இராணுவத்தினர் ஆப்கானிஸ்தானில் இருந்து பின்வாங்கத் தொடங்கினர்.
- ★ 1991- ஈடித் கிரெசன் பிரான்சின் முதற் பெண் பிரதமரானார்.
- ★ 2005- திருகோணமலை நகர் மத்தியில் இரவோடிரவாக புத்தர் சிலை எழுப்பப்பட்டதில் அங்கு கலவரம் வெடித்தது.
- ★ 2006- வவுனியாவில் நோர்வே அகதிகள் சபைப் பணியாளர் ஜெயரூபன் ஞானபிரகாசம் சுட்டுக் கொல்லப்பட்டார்.

### பிறப்பு

- ★ பியேர் கியூரி, பிரெஞ்சு இயற்பியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (இ.1906)

### இறப்பு

- ★ 1978- ரொபேர்ட் மென்சீஸ், அவுஸ்திரேலியாவின் 12 ஆவது பிரதமர் (பி. 1894)

### சிறப்பு நாட்கள்

- ★ உலகக் குடும்ப தினம்
- ★ பராகுவே சுதந்திர தினம் (1811)

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### திருந்திவிடு எனக்காக

எத்தனை இலக்குகள் உன்னிடம்
அத்தனையும் விட்டிட
எத்தணிக்கின்றாய் ஏனோ
பத்திரமாய் உன்னை
படிக்க அனுப்பியவள்
புத்தி சொல்ல
பக்கத்தில் இல்லாததால்
தத்தளிக்கின்றாய்
தடக்கியும் விழுகின்றாய்
கெட்ட புத்திக்காரன் என
மற்றவர்கள்–உன்னை
மட்டந்தட்ட நடக்கின்றாய்
உன்னை நம்பி
பட்ட துன்பத்தை மறந்து
பட்டினியோடு இருப்பவர்க்கு
என்ன பதில்...
பல்கலையும் படிப்பதற்குத் தான் நீ
அல்லல் உறுவதற்கு
ஏற்ற இடமல்ல இது
செல்லமாக சொல்லுகின்றேன்
திருந்திவிடு

சி. ரமணி

### ரசனை

உலக அதிசயமாய் போய்விட்ட
நம் நாட்டின் விலைவாசி
மக்கள் விழிகளில்
விடை தெரியாத
வினாத்தாளாய்
உலகம் இதை ரசிக்கின்றது
கிரிக்கெற் சுற்றுப்போட்டியாய்

### நூலகம்

அமைதியாயிருக்கிறது
அழகாயிருக்கிறது
வாழ்க்கைப் பாடம் தருகிறது
வாசகனானேன்
உனை யாசிக்கும்
வாசகன் போல்

இணுவில் வாசீசன்

### அன்னையே!

அண்டமெல்லாம் –தன்
அன்பாலே!
அடக்கியாளும்–ஓர்
அற்புத பிறவி!
அன்னையே!!

க.தங்கலீலா
கரவெட்டி

### அவரவர் பார்வையில்

**பெற்றோர்**
மண்ணுலகில் நடமாடும்
அன்புத் தெய்வங்கள்

**மழலை**
கவலைகளை தீர்க்கும்
அமுத சுரபி
இறைவன் தந்த
அன்புப் பரிசு

**விதவை**
வெள்ளைச் சேலைக்கு
சொந்தக்காரி
ஊராரின் பார்வைக்கு
ஒதுக்கப்பட்டவள்

க.மலர், சிறுவர் இல்லம், திருநெல்வேலி

**தவம்**
நிலவே நீ கரம் நீட்டு–என்
நீண்ட நாள் தவம்
பேறடையட்டும்!

**மதிமுகம்**
மதி பறிக்கும் மதிமுகமே!
மறப்பேனோ உன்னை?

நாதப்பிரியை

### சங்குநாதம்

எங்கள் வாழ்விலே
தங்கமாகவே
வந்து ஒலித்திடும்
சங்குநாதமே-நீ
சிங்கமாகவே
பங்கமின்றியே
ஒலித்து நம் தமிழ்
மொழியை வளர்த்திடு

க.சி.சதாசிவம்
மட்டுவில்

### இலட்சியம்

இரக்கமே இல்லாத
இதயம் கொண்ட
ஓர் உறவுக்காக
உன் இலட்சிய
பாதையை
இழந்துவிடதே
நீ கொண்ட
இலட்சியப் பாதையின்
வெற்றியே
கல்மனம் படைத்த
இதயத்தை
கண்ணாடிபோல
சிதறடிக்கும்

பி.இளவரசன்
உரும்பிராய் கிழக்கு

### இமயம் தொட...

மனமெனும்
தொழிற்சாலையினை
எப்போதும்
சுத்தமாய் வைத்துக்கொள்
இறைவனை நம்பு
உன்னை அவனிடம்
ஒப்புக்கொடு
உள்ளம் தூய்மையானால்
உலகம் தூய்மையாகும்.

மாவை. நா.கஜேந்திரா

### கலியுகம்

தாயே சிறந்த கோயில் என்று
தமிழர் வணங்கி நின்ற பூமி
சேயை புதைக்கும் தாயை பற்றியே
சேதி கேட்டு வாடி நிற்குது

காலம் முழுதும் காப்பேன் என்று
கல்யாணத்தில் சொன்ன பூமி
கடத்திச் சென்று கொலைகள் செய்யும்
காட்சி கண்டு கலங்கி நிற்குது

உண்டவீட்டுக்கு இரண்டகம் செய்யாதே என
உரைக்க முழங்கி சொன்ன பூமி
குத்திவிட்டு திருடிச் செல்லும்
குள்ளநரிகளால் நிறைஞ்சு நிற்குது

மானம் இப்போ ஊனம் ஆக
மனிதாபிமானம் மரணப்படுக்கையில்
கலாசாரம் காலன் கையில்
கண்ணீர் விடுகுது கலியுகபூமி

நயினை நகீதன்

## மௌனத்தின் தேடல் – 70



### காலமே!

உழுதுண்டு பிழைத்தோரை
உடைமைகளைப் பறித்து
உறவுகளைப் பிரித்து
பிச்சை பாத்திரம்
ஏந்த வைத்ததில்
என்ன சந்தோசம்?

வி.றூபி
நவாலி

### பரிதாபம்

கைகொடுப்பார் யாருமில்லை
கையேந்தும் நிலைமை
தமிழ் அன்னைக்கு

சொ.லிங்கேஸ்வரன்
யாழ்ப்பாணம்

### உறவுக்காய்

தெருவில் வீழ்ந்து
வெளியேறத் துடிக்கும்
தாயின் உயிர் காக்க
மனத் துடிப்போடு
ஓடோடி வாருங்கள்
இளைஞர்களே!

அ.தயானி
யா/சாவக்சேரி இந்துக் கல்லூரி

### தமிழ் அன்னையே!

தாயே கொடூரம்
செய்த கோலத்தால்
கொட்டும் வெயிலில்
கொடும் பசி தீர்க்க
பிச்சை கேட்பதா

பா.இளங்கோவன்
அல்வாய் வடக்கு.

### யாருளரோ?

யாவற்றையும் இழந்து
வீதியில் வீழ்ந்து இருக்கும்
தாயே உமக்கு
உதவிக் கடனுக்கு
யாருமே இல்லையா!

நி.சாரங்கா
யா/சாவக்சேரி இந்துக் கல்லூரி

### வாழ்க்கை

ஆறுகள் போல் ஓடினோம்
அகதிகளாய்
சமுத்திரத்துடன்
சங்கமிப்பதற்காக
அல்ல எம் வாழ்க்கையை
தொடர்வதற்காக...

வ.புனிதமலர்
பொலிகண்டி

### வசந்தத்தைத் தேடி

வாழ்வாதாரம் இழந்து
உள்ளம் உருகியும்
அன்புக் கரம் நீட்டியும்
பிச்சைத்தட்டுடன்
நிற்கின்றது
இன்று தமிழினம்

ச.யசோ
யாழ்ப்பாணம்

### தாய்

அன்று வீரத்தாய்
இன்று காலக் கொடுமையால்
எம் மண்ணில் பிச்சை எடுக்கும்
எம் தாயகத்து ஏழைத்தாய்!

அ.புவனவதி
வடவரணி

### மாற்றம்

வந்தோரை எல்லாம் வாழ
வைத்த இனம் இன்று
ஒருவேளை உணவுக்காக
பிறரிடம் கையேந்துகின்றது.

புலோலியூர்
இனியன்

### நாணயம்

இரங்கி நீட்டும் கைகளுக்குள்
இதயமுள்ளோர் திணிப்பது
நாணயத்தை
கலங்கி நிற்போர்
காரியம் பெற்றிடவே
காற்றால் வீசிடுவர்
நாணயத்தை பிச்சையாய்!

பி.சனற்சஞ்சீவி
யாழ்ப்பாணம்

### ஒருசாண் வயிற்றுக்காய்

ஐம்புலனும் வலு
விழந்துபோச்சு
நடுத்தெருவில்
நாதியாய்நிற்கிறேன்
நல்லவர்களே
நாலு காசு போடுங்கள்

நா.சசிகலா, கைதடி

### இது நாடகமல்ல

கருணை இல்லாத இந்த நாட்டில்
காலனவன் என் கணவனைப்
பறித்ததால் கண்ணீர் வடித்து
தனிமையில் தவிக்கின்றேன்
பிச்சை போடுங்கோ எனக்கும்

எஸ்.சுஜிதா
கொக்குவில்


### இழப்பு

உறவு உடைமை
யாவற்றையும் இழந்து
உணவாவது கிடையாதா
என மனம் நிம்மதியை
இழந்ததேனோ?

பு.ஜீவனா, கரவெட்டி

## சங்குநாதம் மௌனத்தின் தேடல் – 71

**அன்பு வாசகர்களே!**



உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு 20.05.2011 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளிற்கே
முன்னுரிமை வழங்கப்படும்.


-ஆசிரியர் -

# கருணாநிதியின் படுதோல்விக்கு ஈழத்து சோகமும் காரணம்

ஈழத்து சோகம்தான் காவு வாங்கிவிட்டது! ஸ்பெக்ட்ரம் ஊழல்தான் தலை குப்புறக் கவிழ்த்துவிட்டது. கூட்டணிக் குளறுபடிதான் ஏமாற்றிவிட்டது! தி.மு.க.வின் தோல்விக்கு இப்படி எத்தனையோ காரணங்கள் அடுக்கடுக்காக சொல்லப்பட்டாலும் அதில் மிக முக்கியமானது குடும்பப் பூசல்!

தேர்தல் களத்தில் ஜாம்பவானாக நின்று சாதித்து இருக்கவேண்டிய கருணாநிதி, கோபாலபுரத்துக்கும் சி.ஐ.டி காலனிக்குமாக அலைந்து அலைந்தே அல்லாடிப்போனார்.

தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டும் கூட்டணிப் பூசல்களைச் சரிசெய்ய முடியாமல் கருணாநிதி போராடியதை யாரும் மறந்திருக்க முடியாது. ஆனால் கூட்டணிக் குடைச்சலைக் காட்டிலும் அவர் அப்போது அதிகமாக குமைந்துபோனது குடும்பக் குடைச்சலால்தான். கனிமொழி என்னைக்கு கட்சிக்கு வந்த ஆள்? குலாம் நபி ஆசாத்துடன் பேச்சுவார்த்தை நடத்த கனிமொழி எல்லாம் ஒரு ஆளா? என அழகிரி ஆவேசப்பட... தயாநிதி மாறன் தகிக்க... இதி




# குடும்பத்தில் குத்துவெட்டு கருணாநிதியை சரித்தது

லேயே நிலை குலைந்து போனார் கருணாநிதி. காங்கிரஸைக் கை கழுவி விடலாம்! என சீனியர் மந்திரிகள் அட்வைஸ் பண்ண, அப்படிப் பண்ணினால் ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் எப்படியும் கனிமொழியை உள்ளே தள்ளிடுவாங்களேப்பா எனத் தழுதழுத்தார் கருணாநிதி.

குடும்பக் கவலையிலேயே காங்கிரஸுக்கு 63 தொகுதிகளை ஒதுக்கிக் கொடுத்து ஆசுவாசமானார். ஜெயிப்போமா... தோற்போமோ எனத் திணறிய ஜெயலலிதாவுக்கு முதல் நம்பிக்கை காங்கிரஸுக்கு இத்தனைத் தொகுதிகள் ஒதுக்கப்பட்டதுதான்!

சரி, கூட்டணிதான் அமைந்துவிட்டது. இனியாவது களத்தில் கனகச்சிதமாகச் செயற்படலாம் என கருணாநிதி நினைக்க... அதற்கும் செக் வைத்தார் ராஜாத்தி அம்மாள்.

செல்வி துர்கா, கயல்விழி எல்லாம் பிரசாரத்துக்குப் போகும் போது, கனிமொழி மட்டும் போகக் கூடாதா? எனக் கேள்வி எழுப்பினார். கனிமொழி பிரசாரத்துக்கு வந்தால், ஸ்பெக்டரம் விடயத்தை மக்களுக்கு நினைவூட்டுவதுபோல் ஆகிவிடும்! என அழகிரி தொடங்கி கட்சியின் முக்கிய நிர்வாகிகள் பலரும் அபாயம் பாடினார்கள். ஆனாலும் கனிமொழியின் திடீர் பிரசாரப் பயணத் திட்டம் அறிவாலயத்தால் அறிவிக்கப்பட்டது.

கனிமொழி எங்கே வேண்டுமானாலும் பிரசாரம் செய்யட்டும். ஆனால் மதுரைப் பக்கம் கால் வைக்கக் கூடாது. இதையும் மீறி வந்தால், தென் மாவட்டத் தோல்விக்கு நான் பொறுப்பேற்க முடியாது!என முழங்கினார் அழகிரி. அந்த வார்த்தைகளுக்கு ஒரு வாரம் மட்டுமே மதிப்பு இருந்தது. கருணாநிதியின் மதுரைப் பிரசாரத்தில் கனிமொழி நடுநாயகமாக நிறுத்தப்பட்டார். அழகிரிக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது. வடிவேலுவை பிரசாரத்துக்கு இழுத்து வந்து ஸ்பெக்ட்ரம் விவகாரத்தை மறக்கடிக்க நான் போராடிக்கிட்டு இருக்கேன்.

இவரோ தன் மகளை முன்னிறுத்தாது நினைச்சு ஊரெல்லாம் ஸ்பெக்ட்ரத்தை ஞாபகப்படுத்துறார். கட்சிக்காரங்க யாரும் இனி என் பேச்சைக் கேட்க வேண்டாம். தலைமையோட வழியிலேயே நீங்களும் இஷ்டத்துக்கு செயற்படுங்க! என ஆவேசம் காட்டிய அழகிரி அத்தோடு அமைதியானார். திருமங்கலம் பாணியில் தென் மாவட்டங்களில் தி.மு.க.வை வெற்றி பெற வைத்துவிடலாம் என நினைத்த அழகிரி கனிமொழிக்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவத்தில் கடுப்பாகி வீட்டோடு முடங்கிப்போனார்.



"சென்னையில் ஜெயிப்பது சுலபம் அல்ல" என எண்ணி சொந்த ஊரான திருவாரூர் பக்கம் ஒதுங்கிய கருணாநிதி அங்கேயும் குடும்ப அல்லாட்டத்துக்கு ஆளாகிப்போனார். தந்தையின் வெற்றிக்காக தலைமகள் செல்வி திருவாரூரில் வீடு வீடாகப்பிரசாரம் செய்ய... அங்கேயும் போட்டிக்குப் போனார் கனிமொழி. அக்கா ஒரு புறம்... தங்கை ஒரு புறம்... எனப் பிரசாரம் செய்யப் பிடிக்காமல் செல்வி கோபித்தபடி திருவாரூரில் இருந்த சண்முகத்தம்மாள் வீட்டுக்குத் திரும்பினார். அங்கேயும் கனி ஆஜரானதுதான் ஹைலைட்! ஒப்புக்குச்சப்பாக கனியோடு சில வார்த்தைகள் செல்வி பேசினாலும், உள்ளுக்குள் மட்டும் கோபம் ஆறவில்லை. இதற்கிடையில் சென்னையில் பல தொகுதிகள் வீக் என உளவுத்துறை நோட் போட, தயாநிதி மாறனை தீவிரப் பிரசாரத்தில் இறக்கலாம் என முடிபு எடுத்தார் கருணாநிதி. அதற்கு எங்கே இருந்து தடை வந்ததோ... கடைசி வரை கட்சியின் உத்தரவுக்குக் காத்திருந்த தயாநிதி ஒரு சில தொகுதிகளில் மட்டும் சுற்றிச் சுழன்று ஒதுங்கிவிட்டார்!

பல மாவட்ட நிர்வாகிகள் சுறுசுறுப்பு இழந்து போனதற்கும் கருணாநிதியின் குடும்பப் பூசல்தான் காரணம். ஸ்டாலினை பிரசாரத்துக்கு அழைத்தால் அழகிரி கோபம் ஆவார். அழகிரியை அழைத்தால் ஸ்டாலின் கோபப்படுவார் கனிமொழியை அழைத்தால் இருவரையும் பகைத்த மாதிரி ஆகிவிடும் என அனுமான பயத்திலேயே கட்சி நிர்வாகிகள் அல்லாடிப் போனார்கள். கட்சிக்காரர்களின் உள்ளடி வேலைகளை யாரிடம் சொல்வது என்று வேட்பாளர்களுக்குப் புரியவில்லை. ஸ்டாலின் போட்டியிட்ட கொளத்தூர் தொகுதிக்கு நிச்சயம் பிரசாரத்துக்கு அழைப்பார்கள்! எனக் காத்திருந்தார் அழகிரி. ஆனால் கடைசி வரை அதற்கும் அழைப்பு இல்லை.

இதற்கிடையில் திருவாரூரில் பிரசாரத்தை முடித்த கருணாநிதி, மொத்தக் குடும்ப உறவுகளையும் அங்கே வைத்துக்கொண்டு கனிமொழிதான் இந்தத் தேர்தலில் தீவிரமாகப் பிரசாரம் செய்தது என சர்ட்டிபிகேட் கொடுக்க... செல்வி சினத்தோடு சென்னைக்கு வந்துவிட்டார்.

மொத்தத்தில் கருணாநிதியின் குடும்ப மோதல் பெரிதாக சந்தி சிரித்தது இந்தத் தேர்தலில்தான். ஸ்டாலின், அழகிரி ஆதரவாளர்கள் பகிரங்கமாக உள்ளடி வேலைகளை நிகழ்த்தியதும், அதைக் கண்டிக்க முடியாமல் கருணாநிதி அல்லாடியதும் கண்கூடான சாட்சி.

தேர்தல் முடிந்து ஸ்பெக்ட்ரம் விவகாரங்களில் இருந்து கனிமொழியைக் காப்பாற்ற டில்லிக்குப் போன ராஜாத்தி என் மகளை உள்ளே வெச்சிட்டு, யார் யாரோ ஆளப் பாக்குறாங்க. நான் இருக்கும் வரை அது நடக்காது! என ஆவேசமாகக் கொந்தளித்தார். கருணாநிதியின் குடும்பப் குடுமிப்பிடி டில்லியிலும் சிரிப்பாய் சிரித்தது... சிரிக்கிறது.!

எகிப்தில் மிகப்பெரிய புரட்சி வெடிக்க முக்கியக் காரணமாக இருந்தது அங்கே நிலவிய குடும்ப ஆதிக்கம் தான். அதில் கொஞ்சமும் குறைவு இல்லாத அளவுக்கு கும்மாளமும் குடுமிப் பிடியுமாக நடந்த குடும்ப ஆதிக்கம்தான் தி.மு.க என்னும் யானையை இந்தத் தேர்தலில் தோல்விச் சேற்றுக்குள் தள்ளியது!

இரா.சரவணன்

ஜூனியர் விகடன்

# ராகு - கேது பெயர்ச்சி பலன்கள்

## 16.05.2011 முதல் 01.12.2012 வரை




புனர் பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயில்யம் முடிய

*வருகிற மாற்றம்வளம்சேர்க்கும்!*
*வருங்காலத்தை நலமாக்கும்!*

**உதவிகள் செய்வதன் மூலம் பல பதவிகளைப் பெறும் கடக ராசி நேயர்களே!**

பொதுநலத்தில் அதிக ஆர்வம் காட்டும் உங்களுக்கு இந்தப் புத்தாண்டு புதிய பொறுப்புக்களையும், பதவிகளையும் வழங்கப் போகிறது.

வருடத் தெடக்கத்திலேயே உங்கள் ராசி நாதன் சந்திரன் தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். அப்புறம் என்ன, வருடம் முழுவதும் வசந்தகாலம் தான்.

பொதுவாக குரு பார்க்க இந்த ஆண்டு பிறக்கிறது. குரு பார்க்க கோடி நன்மை என்பதற்கேற்ப கர வருடம் கண்ணேறு படும் விதத்தில் உங்களுக்கு முன்னேற்றங்களைக் கொடுக்கப்போகிறது. எண்ணங்களை எளிதில் செயலாக்குவது இறைவழிபாடு தான். எனவே கிரகங்கள் வக்ர நிலையில் இருக்கும் பொழுதெல்லாம் அலங்காரம், அபிஷேகம், ஹோமங்கள் செய்து வளங்களையும், நலன்களையும் வரவழைத்துக் கொள்ளலாம். மற்ற காலங்களில் அர்ச்சனைகள் செய்து மகத்தான பலன் காணலாம்.

சந்திரனுக்கு மற்றொரு பெயர் மதி. அந்த மதியின் வழியாகத்தான் உங்கள் விதியும், கதியும் நிர்ணயிக்கப்படுகின்றது. அந்த சந்திரன்தான் உங்கள் ராசி நாதன் என்பதால் நிலவு நிறைந்த நாளில் செய்யும் வழிபாடுகளும், திங்கட்கிழமையன்று செய்யும் சிறப்பு வழிபாடுகளும் உடனடியாக நற்பலன்களைக் கொடுக்கும். கிரகங்கள் வக்ர இயக்கத்தில் இருக்கும் பொழுது மட்டும் எதையும் யோசித்துச் செய்வதே நல்லது. கூட்டு முயற்சிகளில் இருந்தவர்கள் விலகுவர்.

எனவே சுய ஜாதகத்தில் தெசா புத்தியின் பலம் அறிந்து யோகம் தரும் கிரகத்திற்குரிய சிறப்பு வழிபாட்டை மேற்கொண்டால், சிந்திக்காது செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். வருடத்தொடக்கத்தில் 9 ஆம் இடத்தில் குருவும் செவ்வாயும் இணைந்து குரு மங்கல யோகத்தை உருவாக்குகிறார்கள்.

எனவே குடும்பத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான மற்றும் மழலையின் ஓசை கேட்பதற்கான வாய்ப்புகளும் உருவாகலாம். 12 ஆம் இடத்துக் கேது பயணங்களை அதிகரிக்கச் செய்யும்.

**கட்டளையிட்டதும் செய்யக் காத்திருப்பவர்கள் பலர்!**

நவக்கிரகங்களில் மாதாகாரகன் என்று வர்ணிக்கப்படுபவர் சந்திரன் அந்தச் சந்திரன் சொந்த வீட்டின் ஆட்சியில் உச்சத்தில் இருப்பவர்களுக்கு எல்லாம் தாய்ப்பாசம் அதிகமாகவே இருக்கும். அதே நேரத்தில் உங்கள் ராசிக்கு சுக்கிரன் பாவியாக விளங்குவதால் குடும்ப வாழ்க்கை திருப்தியாக இருக்குமா? என்பது சந்தேகம் தான்.

குடும்ப ஸ்தானாதிபதியாக சூரியன் அமைவதால், சூரிய, சந்திர பலத்தைப் பொறுத்தே உங்கள் வாழ்க்கையை எப்படி அமைத்துக் கொண்டால் முன்னேற்றம் வரும் என்பதை நீங்கள் அறிந்துகொள்ள இயலும்.

உங்களிடம் ஒப்படைத்த பொறுப்புகளை எப்பாடுபட்டாவது செய்து முடித்துவிடுவீர்கள். பொல்லாதவர்களையும் பழகிவைத்திருப்பீர்கள். நல்லவர்களையும் பழகிவைத்திருப்பீர்கள். எனவே பொது வாழ்வில் தலைமைப் பொறுப்பிற்கு தகுதியானவர்கள் என்றும் மக்கள் சொல்வர்.

**தோன்றிற் புகழோடு தோன்றுக!**

என்ற வள்ளுவனின் வாக்கு உங்களுக்கு முழுமையாகப் பொருந்தும்.

**பதவியில் மாற்றம் தரும் பத்தாமிடத்துக் குரு!**

குரு பெயர்ச்சி வந்துவிட்டால் குதூகலமான வாழ்க்கை வரும் என்று சொல்வார்கள். ஆனால் அந்தக் குரு பத்தாம் இடத்திற்கு வரும்போது மட்டும் பயப்படுவார்கள். காரணம் பத்தில் குரு வந்தால் பதவியில் மாற்றம் வரும் என்பது பழமொழி. ஆனால் அதற்காக நீங்கள் கவலைப்பட வேண்டாம்.

பதவி இருந்தால் தானே மாற்றம் வரும். பதவி இல்லாதவர்களுக்கும், உத்தியோகம், தொழில் அமையாதவர்களுக்கும் எப்படி இருக்கும் என்று ஒரு சிலர் கேட்பார்கள். அவர்களுக்கு எல்லாம் புதிய பொறுப்புகளும், பதவிகளும் திடீரென ஏற்படும். ஆனால் திருப்திகரமாக இருக்காது எனவே, குருப்பெயர்சிக்கு முன்னதாகவே உங்களுக்கு யோகம் தரும் நாட்களைத் தேர்ந்தெடுத்து சிறப்பு வழிபாடுகளைச் செய்வது நல்லது.

வேலைப்பழு மிக்க உத்தியோகத்தில் இருப்பவர்கள்வேறு வேலைக்கு எற்பாடு செய்த முயற்சி கைகூடும்.

*பத்தினில் குருவும் வந்தால்,*
*பதவிதான் மாறும் என்பார்!*
*அத்தகு நிலையில் கூட,*
*அனுகூலம் கிடைப்பதற்கும்,*
*சொத்துக்கள் சேர்வதற்கும்,*
*சுகம் எல்லாம் கூடுவதற்கும்,*
*தக்கதோர் குருவை நீங்கள்,*
*தரிசித்தால் வளர்ச்சி கிட்டும்!*

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது. அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது குருவின் பார்வை உங்கள் ராசிக்கு 2,4,6 ஆகிய இடங்களால் பதிவதால் குடும்பத்தில் ஒற்றுமை கூடும். கொள்கைப் பிடிப்போடு செயற்பட இயலும் வியாபாரப் போட்டிகளை சமாளிப்பீர்கள். வீடுகட்ட அல்லது வாங்க எண்ணிய எண்ணம் கை கூடுவதற்கான அறிகுறிகள் தோன்றும். உத்தியோகம், தொழிலில் வரும் மாற்றங்கள் சுயயாதகத்தின் பலம் அறிந்து தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

**ராகு-கேது பெயர்ச்சிக் காலம்**

மே மாதம் 16 ஆம் திகதி விருட்சிக ராசியில் ராகுவும் ரிஷப ராசியில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள்.

இதுவரை 12 ஆம் இடத்தில் சஞ்சரித்த கேது இனி 11 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். 6 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த ராகு இனி 5 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். எனவே ராகு - கேதுக்களின் ஆதிக்கம் அதிகம் இருக்கிறது.

புத்திர ஸ்தானத்தில் ராகு சஞ்சரிப்பதால் பிள்ளைகள் வழியில் சுப காரிய பேச்சுக்கள் நல்ல ஒரு முடிவுக்கு வரும். தல யாத்திரைகள் அதிகரிக்கும். பூர்வீக சொத்துக்கள் மூலம் வர வேண்டிய தொகை வந்து சேரும். பழைய சொத்துக்களை விற்று விட்டு புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும்.

அதே நேரத்தில் இலாப ஸ்தானத்தில் கேது சஞ்சரிப்பதால் வரும் இலாபத்தை அசையாத சொத்துக்களாகவோ அல்லது பொருட்களாகவோ மாற்றி வைத்துக்கொண்டால் தான் அது நிலைக்கும். கொடுக்கல்-வாங்கல்களில் இருந்த சிக்கல்கள் தீர மாற்று இனத்தவர்கள் ஒத்துழைப்புச் செய்வர். முட்டுக்கட்டையாக இருந்த மூத்த சகோதரர் இனி உங்கள் குணம் அறிந்து செயற்படுவர். ராகு- கேதுக்களுக்கு ப்ரீத்தி செய்வது நல்லது.

**அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம்!**

இதுவரை மூன்றாம் இடத்தில் சஞ்சரித்து வந்த சனி பகவான் 21.12.2011 அன்று நான்காமிடத்தில் சஞ்சரிக்கப்போகிறார். பெரிய கிரகங்கள் பெயர்ச்சி ஆகுவதற்கு ஆறு மாதங்கள் முன்னதாகவே பலன்கள் கொடுக்கத் தொடங்கிவிடும்.

ஆயினும், தற்சமயம் சனி நான்காம் இடத்தில் அல்லவா சஞ்சரிக்கப் போகிறார்? எனவே எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. களஸ்திர ஸ்தானத்திற்கும், எட்டாமிடத்துக்கும் சனி அதிபதியாக வருவதால் குடும்ப ஒற்றுமை குறையாமல் பார்த்துக் கொள்வதும் அதை சமாளிப்பதும் உங்கள் புத்திசாலித்தனமாகும். வீடுமாற்றம், இடமாற்றம், தொழில் மாற்றம் ஆகியவைகள் தானாகவே வந்து சேரும். வீட்டில் கணபதி ஹோமம், சுதர்ஷன ஹோமம் போன்றவற்றை வைப்பது நல்லது.

பொதுவாகவே இதுபோன்ற சனியின் ஆதிக்கம் ஏற்படும் நேரங்களில் முறையாக சனீஸ்வர வழிபாட்டை மேற்கொள்வதோடு ஆதியந்த பிரபுவை வழிபடுவது நல்லது.

**அக்கறை செலுத்த வேண்டிய வக்ர காலங்கள்!**

வருடத் தொடக்கத்திலேயே சனி வக்ரமடைகிறார். மீண்டும் தை மாதம் வக்ரம் பெறுகிறார். அதன் பிறகு வருடக் கடைசியில் பங்குனி 13 ஆம் திகதி முதல் கன்னி ராசிக்கு வக்ரமாகிச் செல்கிறார். இதுபோன்ற வக்ர காலங்களில் நீங்கள் எந்த ஒரு புது முயற்சிகளைச் செய்தாலும் அதில் கூடுதல் விழிப்புணர்ச்சி காட்ட வேண்டும். 7,8 க்கு அதிபதியாக சனி விளங்குவதால் வாழ்க்கைத் துணை வழியே பிரச்சினைகள் உருவாகலாம். விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது வேலை வாய்ப்பிலும் வி.ஆர்.எஸ். கொடுக்கும் எண்ணம் மேலோங்கும்.

சந்தோசம் தரும் சனி கவசத்தை நாள் ஒன்றுக்கு எட்டு முறை காக

**சிவல்புரி சிங்காரம்**

வாகனத்தான் சன்நிதியில் பாடுங்கள் கவலை தீரும்.

குருவின் வக்ர காலம் 31.08.2011 முதல் 15.12.2011 வரை இக்காலத்தில் வீண் விரயங்கள் கூடும். விலை உயர்ந்த பொருட்களைக் கையாளுவதில் கவனம் தேவை. நண்பர்களை நம்பிச் செய்த காரியம் மீண்டும் உங்களிடமே திரும்பி வரலாம். முறையான குரு வழிபாடு முன்னேற்றம் வழங்கும்.

**பலன் தரும் பரிகாரம்!**

திங்கட்கிழமை தோறும் சந்திரன் மற்றும் அம்பிகை வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

(தொடரும்)

## திருமுறைப் பண்ணிசை வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ சிவகுருநாத குருபீடம் வேதாந்த மடத்தில் சனி,ஞாயிறு நாட்களில் காலை 9.30 மணிக்கு திருமுறைப் பண்ணிசை வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

இவ் வகுப்புக்களை துறைசை ஆதீனத்திருமுறைத் தோன்றல் கலாபூஷணம் கே.எஸ்.ஆர். திருஞானசம்பந்தன் நடத்துகின்றார்.

பண்ணிசைப் பரீட்சைப் பாட விதானத்திற்கு அமைவாக மாணவ, மாணவிகளுக்கும், சைவ ஆலயங்களில் பஞ்சபுராணம்,பன்னிருதிருமுறை ஓதுவதற்கான பயிற்சி (சகலரும்) என்பன இடம்பெறுகின்றன.

இவ் வகுப்புக்களில் கலந்து கொள்வோருக்கு தகைமைசால் பரீட்சைகளினால் பரீட்சிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ)

# யுத்தம் நிறைவுற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை

## சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டு

**இலங்கையில் குற்றச் செயல்களுக்கு தண்டனை வழங்கப்படாத நிலைமை தொடர்வதாக சர்வதேச மன்னிப்புச் சபை குற்றம் சுமத்தியுள்ளது.**

**யுத்தம் நிறைவடைந்துள்ள போதிலும் கடந்த காலத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் விவகாரங்கள் தொடர்பில் இன்னமும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

சித்திரவதை மற்றும் பலவந்தமாக காணாமல் போதல் சம்பவங்கள் நாட்டில் தொடர்வதாக சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆண்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. கப்பம் கோரல் மற்றும் சட்டவிரோத காணாமல் போதல் சம்பவங்களுடன் பாதுகாப்புப் படையினருக்கு தொடர்பு இருப்பதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

முன்னாள் தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்களை அரசாங்கம் நடாத்தும் விதம் குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை கடும் விமர்சனத்தை வெளியிட்டுள்ளது.

கைதிகள் விவகாரத்தில் அரசாங்கத்தின் அணுகுமுறை ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் அமையப் பெறவில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குற்றச் செயல்களுக்கு தண்டனை வழங்குதல் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை நடத்துதல் ஆகியன தொடர்பில் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பங்களிப்பு போதுமானதல்ல என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடம்பெயர் மக்களுக்கு இன்னமும் அரசாங்கம் உரிய நிவாரணங்கள் வழங்கவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-2)

# இலங்கை மீனவர்கள் இருபது பேர் விடுதலை

கடல் எல்லையை மீறியதன் காரணமாக இந்திய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டிருந்த இலங்கை மீனவர்கள் 20 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மீனவர்களுடன் அவர்களின் நான்கு மீன்பிடிப்படகுகளும் விடுவிக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் லால் டி சில்வா தெரிவித்துள்ளார்.

விடுதலையான இலங்கை மீனவர்களும் அவர்களின் படகுகளும் நாளை காங்கேசன் துறையில் வைத்து இந்திய கரையோரப் பாதுகாப்புப் பிரிவினரால் இலங்கை கடற்படையினரிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த மீனவர்கள் கடந்த ஏப்ரல் மாதம் அளவிலேயே இந்திய கரையோரப் பாதுகாப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டதாக பிரதிப் பணிப்பாளர் தெரிவித்தார்.(ஸ்ரீ-2)

# அரச சேவை மறுசீரமைப்பு செய்யப்படல் வேண்டும்

## அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவிப்பு

நாட்டின் எதிர்காலத்திற்காக அரச சேவையை மறுசீரமைப்புச் செய்ய வேண்டும் என அரச ஒழுங்கமைப்பு மற்றும் மறுசீரமைப்பு அமைச்சர் நவீன் திஸாநாயக்கா தெரிவித் துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ,6/2006 அரச நிர்வாக சுற்றறிக்கை தொடர்பில் நிர்வாக அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தும் கருத்தரங்கில் பங்கு கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார். 6/2006 அரச நிர்வாக சுற்றறிக்கையின் கீழ் அரச சேவையில் மேற்கொள்ள எதிர்பார்த்துள்ள விடயங்கள் தொடர்பில் அரச ஒழுங்கமைப்பு மற்றும் மறுசீரமைப்பு அமைச்சின் நிர்வாக பணிப்பாளர் எம்.எச்.தர்மதாஸ இதன் போது தெளிவுபடுத்தினார்.

(ஸ்ரீ-2)


## "எடிசெலாட்" விற்பனை மேம்பாட்டு அதிகாரி வெற்றிடம்

**பின்வரும் இடங்களில் இருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.**

- வல்வெட்டித்துறை
- முல்லைத்தீவு
- பருத்தித்துறை
- கொடிகாமம்
- ஊர்காவற்றுறை
- மல்லாவி
- பூநகரி
- சாவகச்சேரி
- காரைநகர்
- கோப்பாய்
- திருநெல்வேலி
- மானிப்பாய்
- கிளிநொச்சி
- முழங்காவில்
- பளை



- நீங்கள் 18 வயதுக்கு மேற்பட்டவரா?
- நுகர்வோருடன் பேசி விற்பனையை மேம்படுத்த விருப்பமுள்ளவரா?
- தொழிற்பயிற்சிகள், சலுகைகள் பெற ஆர்வமுள்ளவரா?
- இலங்கையின் முதற்தரமான தொலைபேசி நிறுவனத்தில் பணியாற்றி, வாழ்வில் முன்னேற விருப்பமுள்ளவரா?

அப்படியாயின் நாங்கள் தேடுபவர் நீங்கள் தான்!

- விண்ணப்பதாரிகளுக்கு 16.05.2011-23.05.2011 வரை நேர்முகப்பரீட்சை நடாத்தப்படும்.
- சம்பளத்திட்டம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
- சுயமாகத் தயாரித்த சுயவிபரக் கோவையுடன் (BIO-DATA) கீழ்வரும் முகவரிக்கு சமுகமளிக்கவும்.

விபரங்களுக்கு அழையுங்கள்
விரைந்து வாருங்கள்
R&R TELECOM JAFFNA (PVT) LTD,
127, MPCS BUILDING,
K.K.S. ROAD, JAFFNA. T.P.: 021-222 1644

(சி-3202)



## VACANCY

Data upduting operator (only Female) Indoor Vacancy at etisalat jaffna. only one day for the interview 16th of may 2011 9.00 am to 5.00 pm.

Dealer of Manager
R&R TELECOM JAFFNA (PVT) LTD,
127, MPCS BUILDING,
K.K.S. ROAD, JAFFNA. T.P.: 021-222 1644

(சி-3203)


# முஸ்லிம் மக்கள் தமது உரிமைகளை வென்றெடுக்க அணி திரள வேண்டும்

## பிரதியமைச்சர் பசீர் சேகுதாவூத் தெரிவிப்பு

முஸ்லிம் மக்கள் தமது உரிமைகளை வென்றெடுப்பதற்கு அணி திரள வேண்டுமென பிரதி அமைச்சர் பசீர் சேகுதாவூத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திற்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையிலான சந்திப்புக்களில் முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்தப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளும் உரிமை முஸ்லிம் மக்களுக்கு காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எம்.ஏ.பக்கீர் மாக்கார் நினைவுப் பேருரையில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழு அறிக்கையின் காரணமாக தமிழ் மக்கள் தங்களது உரிமைகள் குறித்து அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய அரசாங்கமும் தமிழர் பிரச்சினைகளுக்கு ஒத்துழைப்பை வழங்கி வருவதாக குறிப்பிட்டுள்ளார். முஸ்லிம்களின் உரிமைகள் பற்றி குரல் கொடுப்பதற்கு முஸ்லிம்கள் அணி திரள வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறெனினும் ஐக்கிய நாடுகள் நிபுணர் குழு அறிக்கை வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியது என அவர் தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2)


## 1 ஆம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு 1936.07.18 இறப்பு 2010.05.15

**அமரர் கந்தையா நேசமணி**

*அம்மா! நீங்கள் எம்மை விட்டு மறைந்து ஓர் ஆண்டு ஆனாலும் மாறவில்லை எம் துயர் உங்கள் ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

துன்னாலை கிழக்கு,
கரவெட்டி.

(4935)

# தமிழர்கள் தன்மானமும் இனமானமும் உள்ளவர்கள் என்பதை மீண்டுமொருமுறை நிரூபித்துள்ளனர்

## சீமான் தெரிவிப்பு



தமிழ் நாட்டில் நடந்து முடிந்த 2011 சட்டப் பேரவைத் தேர்தலில் மக்கள் விரோத தி.மு.க.- காங்கிரஸ் கூட்டணியை படுதோல்வியடைந்துள்ளது. பணபலம், அதிகாரபலம், இவற்றிற்கு பணியமாட்டோம் வாக்கு என்ற ஆயுதத்தால் அவற்றை வீழ்த்துவோம் என்று மெய்ப்பித்த எம் தமிழ்ச் சொந்தங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என்று நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், வரலாறு காணாத வகையில் ஊழல், வன்முறை, குடும்ப ஆதிக்கம், அராஜகம், மணற்கொள்ளை, திரைத்துறையில் ஏக போகம், நிர்வாகச் சீர்கேடு, இனத் துரோகம் ஆகியவற்றில் மலைக்கத்தகும் மலையாய் எழுந்து நின்றது காங்கிரஸ் தி.மு.க. கூட்டணி ஆட்சி. அந்த மலையை சுக்கு நூறாக உடைத்து தரை மட்டமாக்கியிருக்கிறார்கள் தமிழர்கள்.

மக்களின் எதிர்ப்புக்கு சிறிதளவும் மதிப்பளிக்காமல் தான் பெற்ற மக்களின் அதிகாரத்திற்காகவே ஆட்சி நடத்தினார் கருணாநிதி. மக்கள் எதிர்ப்பையும் அரசியல் கட்சித் தலைவர்களின் எதிர்ப்பையும் அடக்குமுறைச் சட்டங்கள் மூலமும் பொலிஸாரின் ஒடுக்குமுறைகள் மூலமும் பொது அரங்கிற்குக் கொண்டு வராமல் செய்தார். இதன் பின்னும் ஓயாத தி.மு.க. காங்கிரஸ் அரசுகள் ஈழத்தில் எம் மக்களை பல்லாயிரக்கணக்கில் சிங்கள பேரினவாதம் கொன்றொழிக்க பல வகையில் பேருதவி புரிந்தன. இனப்படுகொலைக்கு எதிரான எம் மக்களின் ஒப்பாரியைக் கூட யாருக்கும் கேட்காமல் அச்சுறுத்தி தடை செய்தன.

இந்த மக்கள் விரோத, இனவிரோத ஆட்சி தொடர்ந்து நீடித்தால் என்றும் மீட்க முடியாத அபாயச் சூழலில் தமிழ்நாடு சிக்கிக் கொள்ளும் நிலைமை இருந்தது. ஆனாலும் தேர்தலில் பணபலத்துடன் மக்களை விலைக்கு வாங்கி மீண்டும் ஆட்சியில் அமர்ந்து விடலாம் என்ற பாசிச ஆட்சியாளர்களின் ஆசையில் மண் அள்ளிப் போட்டியிருக்கின்றார்கள் எம் மக்கள். தி.மு.க.காங்கிரஸ் கூட்டணியைப் படுதோல்வி அடையச் செய்திருக்கின்றனர்.

ஈழத்தில் நமது இரத்த உறவுகளை சிங்களன் கொன்று குவிக்க பேருதவி புரிந்த சோனியாவின் காங்கிரஸை இந்தத் தேர்தலில் முழுவதுமாக வீழ்த்த வேண்டும் என்னும் நிலைப்பாட்டை நாம் தமிழர் கட்சி எடுத்தது. காங்கிரஸ் கட்சிதான் நமக்கு முதல் எதிரி. இனத்தை அழித்த காங்கிரஸ் கட்சி வேரோடும் வேரடி மண்ணோடும் ஒழிக்கப்பட வேண்டும் என முடிவெடுத்து களத்தில் இறங்கினோம். அதற்காக அனைத்து தொகுதியிலும் பொதுக்கூட்டங்கள் நடத்தியும் வீடு வீடாகச் சென்றும் காங்கிரஸை வீழ்த்த வேண்டும் என்று தீவிரப் பரப்புரை செய்தோம். இனத்திற்காக நாம் செய்த கடமையை மக்கள் அங்கீகரித்து இன எதிரிக்கு சரியான பாடம் புகட்டியுள்ளனர்.

தி.மு.க.விடம் மிரட்டிப் பெற்ற 63 தொகுதிகளில் 6 தொகுதியில் கூட வெல்ல முடியாதபடி காங்கிரசை வீழ்த்தியிருக்கிறார்கள். தமிழர்கள் வீரமும் விவேகமும் மட்டுமல்ல தன்மானமும் இனமானமும் உள்ளவர்கள் என்பதை தற்பொழுது மற்றுமொரு முறை நிரூபித்துள்ளனர். ஈழத்தில் இரத்தம் சிந்திய யுத்தத்தில் எம் இனத்தை நயவஞ்சகத்தோடு வீழ்த்திய காங்கிரசை இங்குள்ள தமிழர்கள் இரத்தம் சிந்தாத தேர்தல் யுத்தத்தில் நேர்மையுடன் வீழ்த்தியிருக்கிறார்கள். இது நம் இனத்திற்குக் கிட்டிய வெற்றி. காங்கிரசின் வீழ்ச்சி தமிழினத்தின் விடியலுக்கான அறிகுறி. இனத்தின் வெற்றிக்காக அல்லும் பகலும் அயராது உழைத்த நாம் தமிழர் உறவுகளுக்கும் இணைந்து பாடுபட்ட அனைத்து உணர்வாளர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இனி வரும் காலங்களில் தமிழினத்திற்கு எதிரான எண்ணமோ, செயலோ எந்த அரசியல் கட்சியிடம் இருந்து வெளிப்பட்டாலும் அவர்களுக்கும் இதே கதிதான் ஏற்படும். புதிதாகப் பொறுப்பேற்கும் அரசு மக்கள் நலன் சார்ந்த பிரச்சினைகளில் திறம்பட செயற்பட வாழ்த்துகிறேன் என்றார். (ஸ்ரீ-2)

# பாரதச் செய்திகள்

## வீழ்ந்தது பணநாயகம்; மலர்ந்தது ஜனநாயகம்

### வைகோ தெரிவிப்பு


(சென்னை)

தமிழக வாக்காளர்கள் ஊழல் பணநாயகத்தை வீழ்த்தி ஜனநாயகத்திற்கு பொன் மகுடம் சூட்டியுள்ளனர் என ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டசபை தேர்தல் முடிவுகள் குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கடந்த ஐந்து ஆண்டுகளில் தலைவிரித்து ஆடிய ஆளுங்கட்சியின் ஊழல், சினிமாத்துறை, தொழில்த்துறை உள்ளிட்ட அனைத்து துறைகளையும் கபளீகரம் செய்ய முயன்ற ஒரு குடும்ப ஆதிக்கம், கடுமையான மின் வெட்டு, இலங்கையில் நிகழ்ந்த இனப்படுகொலைக்கு மத்திய அரசுக்கு துணைநின்ற துரோகம், சட்டம் ஒழுங்கு சீர்குலைவு, விலைவாசி உயர்வு போன்றவற்றுக்கு எதிராக மக்கள் தீர்ப்பளித்துள்ளனர்.

எதிர்காலத்தில், அதிகார துஷ்பிரயோகத்தையும், ஊழல் பணத்தையும் கொண்டு எவரும் தேர்தலில் வெல்ல முடியாது எனும் சரியான பாடத்தை வாக்காளர்கள் கற்பித்துள்ளனர்.

தமிழக சட்டசபைத்தேர்தலில் ம.தி.மு.க. பங்கேற்கவில்லை என்றாலும், கடந்த ஐந்து ஆண்டுகளாக, தி.மு.க. அரசின் மக்கள் விரோதப் போக்கை எதிர்த்து, தொடர்ந்து பிரசாரத்திலும், அறப்போரிலும் ஈடுபட்டது. இவ்வாறு வைகோ தெரிவித்துள்ளார். (ஸ்ரீ)



நடைபெற்று முடிந்த தமிழக சட்டமன்ற தேர்தலில் பெற்ற வெற்றியை தொடர்ந்து தே.மு.தி.க. கட்சி அலுவலகத்தில் வெற்றி கொண்டாட்டமாக அக்கட்சியின் தலைவர் விஜயகாந்திற்கு தொண்டர்கள் மாலை அணிவித்து வாழ்த்து தெரிவிப்பதை படத்தில் காணலாம்.

## பணம் கொடுத்து ஜெயிக்கும் கலாசாரத்திற்கு முடிவு

### விஜயகாந்த் பேட்டி



(சென்னை)

பணம் கொடுத்து தேர்தலில் வெற்றி பெற்று விடலாம் என்ற தி.மு.க.வின் திட்டம் மக்களால் முறியடிக்கப்பட்டு விட்டது என தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

சென்னை கோயம்பேடு தே.மு.தி.க தலைமை அலுவலகத்திற்கு அக்கட்சித் தலைவர் விஜயகாந்த் நேற்று முன்தினம் பகல் 12.30 மணிக்கு வந்தார். அவருக்கு அங்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

கட்சி அலுவலகத்தில் உள்ள எம்.ஜி.ஆர் சிலைக்கு மாலை அணிவித்த விஜயகாந்த் நிருபர்களிடம் கூறியதாவது, இது எனக்கு கிடைத்த வெற்றியல்ல. மக்களுக்கும் என் கட்சித் தொண்டர்களுக்கும் கிடைத்த வெற்றி. எங்கள் கட்சியின் வளர்ச்சி சிறப்பாகவே உள்ளது.

குறிப்பாக கடந்த 2006 ஆம் ஆண்டு சட்டசபைத் தேர்தலில் 8.33 சதவீத வாக்குகள் பெற்றோம். 2009 ஆண்டு லோக்சபா தேர்தலில் 10.31 சதவீத வாக்குகள் பெற்றோம். விலைவாசி உயர்வு, ஸ்பெக்ட்ரம் ஊழல், மின்வெட்டு, குடும்ப அராஜகம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட மக்கள் தி.மு.க. ஆட்சிக்கு முடிவு கட்டியுள்ளனர். தி.மு.க.விற்கு ஏற்பட்டுள்ள இந்த தோல்வியில் தி.மு.க. மற்றும் கருணாநிதி குடும்பத்திற்கு பங்கு உண்டு.

அண்ணாத்துரை கட்சியை தனது குடும்பமாக பார்த்தார். ஆனால் கருணாநிதி குடும்பத்தை கட்சியாக மாற்றியுள்ளார்.

குறிப்பாக பணம் கொடுத்து தேர்தலில் வெற்றிபெற்று விடலாம் என்ற தி.மு.க.வின் திட்டம் மக்களால் முறியடிக்கப்பட்டு விட்டது. தி.மு.க.வின் அமைச்சர்கள் பலர் தோல்வியடைந்ததற்கு கட்சியின் அராஜக நிலையே காரணம். ஸ்பெக்ட்ரம் வழக்கில் இனி பல திருப்பங்கள் நடக்கும். வழக்கு நீதிமன்றில் உள்ளதால் அதைப் பற்றி அதிகம் பேச முடியாது என இவ்வாறு விஜயகாந்த் கூறினார். (ஸ்ரீ)

## முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு பிரதமர் மன்மோகன் வாழ்த்து

(சென்னை)

தமிழக சட்டசபைத் தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணி மிகப்பெரிய வெற்றி பெற்றுள்ளதையடுத்து இன்று முதல்வராகப் பதவியேற்கவுள்ள அ.தி.மு.க .பொதுச்செயலாளர் ஜெயலலிதாவுக்கு பிரதமர் மன்மோகன் சிங் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானின் காபூலிலிருந்து நேற்று முன்தினம் நாடு திரும்பிய மன்மோகன் சிங் அ.தி.மு.க.பொதுச்செயலர் ஜெயலலிதாவை தொலைபேசியில் தொடர்பு கொண்டு தேர்தலில் வெற்றி பெற்றதற்காக வாழ்த்துத் தெரிவித்துள்ளதாக பிரதமர் அலுவலகச் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

> தேவையில்லாதபோது வாயை மூடிக் கொள்ளுங்கள்.
> சரியான சந்தர்ப்பம் வந்தால் சொல்லுங்கள்.
> சொல்வதைத் தீப்பொறி எழச் சொல்லுங்கள்.
> – பெஞ்சமின் பிராங்ளின்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வாழ்த்து

(யாழ்ப்பாணம்)

தமிழக முதலமைச்சராக தெரிவு செய்யப்பட்டுள்ள செல்வி ஜெயலலிதாவுக்கு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு வாழ்த்துத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அக்கட்சி மேலும் தெரிவித்துள்ளதாவது,

தாங்கள் மூன்றாவது முறையாகத் தமிழகத்தின் முதலமைச்சராகத் தெரிவு செய்யப்பட்டதையிட்டு ஈழத் தமிழ் மக்களின் சார்பாக எமது உள்ளங் கனிந்த பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் மகிழ்ச்சியையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துக் கொள்கிறது.

ஈழத் தமிழ் மக்கள் பாரிய யுத்தம் ஒன்றிற்கு முகங்கொடுத்து இலட்சக் கணக்கான உயிர்களை இழந்தும் பல ஆயிரம் கோடி சொத்துக்களை இழந்தும் அவர்களது அடிப்படைப் பிரச்சினைகளுக்கு எந்தத் தீர்வும் காணமுடியாமல் இன்றும் அநாதரவான நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

80 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ்ப் பெண்கள் விதவைகளாகியுள்ளனர்.

பல ஆயிரக்காணக்கான தமிழ் மக்கள் அங்கவீனமுற்றவர்களாக உள்ளனர். பலநூறு சிறுவர்கள் தாய் தந்தையற்ற அநாதைகளாகி இருக்கின்றனர்.

இவற்றிற்கெல்லாம் மேலாக ஆயிரமாயிரமானோர் தமது கணவன்மாரை, குழந்தைகளை, பெற்றோர்களைத் தேடியலைகின்றனர். இவ்வாறான ஒரு சூழ்நிலையில் எமது தாய்த் தமிழகத்து உறவுகள் உங்களுக்கு அமோக ஆதரவளித்து முதல்வராக்கியுள்ளார்கள்.

நீங்கள் வெற்றி பெற்றவுடன் ஈழத்து நிலை தொடர்பாக பத்திரிகைகளுக்கு கொடுத்த செய்திகள் எமக்கு நம்பிக்கையையும் உற்சாகத்தையும் தருகின்றது.

ஈழத் தமிழ் மக்கள் தமது முழுமையான சுயாட்சியைப் பெற்று சுயமரியாதை, சுய கௌரவம் உடையவர்களாகத் தமது சொந்த மண்ணில் வாழ்வதற்கு உங்களது பேராதரவை நாடி நிற்கின்றோம்.

மீண்டும் ஒருமுறை ஈழத்தமிழர்கள் சார்பாக எமது உளங்கனிந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம். (ஸ்ரீ)

## தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு ஓர் அன்பு மடல்

தமிழகத்தின் முதல்வராகப் பதவியேற்கும் தங்களுக்கு ஈழத்தமிழர்களின் வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்.

நீங்கள் தமிழகத்தின் முதல்வராகப் பதவியேற்பதையிட்டு ஈழத்தமிழர்கள் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றனர்.

அதேநேரம் தமிழகத்தின் முதல்வராக இருந்த கலைஞர் கருணாநிதி அந்தப் பதவியிலிருந்து வெளியேறும் மகிழ்ச்சியும் சேர்ந்து இரட்டிப்பாகின்றது.

கலைஞர் கருணாநிதி அவர்கள் முதல்வராக இருந்தபோது அவருக்கு அன்பு மடல் எழுதி கை வாங்கிவிட்டது. வன்னியில் தமிழினம் மாண்டு போனது. என்ன செய்வது நீங்கள் அப்போது குரல் கொடுத்தீர்கள். ஆனாலும் தமிழகத்தின் ஆட்சி அதிகாரட் இல்லாமையால் உங்களால் எதுவும் செய்ய முடியவில்லை.

ஆனால் தேர்தலில் நான் வெற்றி பெற்றால் ஈழத்தமிழர்களுக்காக என்னவெல்லாம் செய்வேன் என்று நீங்கள் சொன்னீர்களோ அந்த வார்த்தைகள் மறப்பதற்குரியவை அல்ல.

செல் சத்தத்திலும் கிபிர் விமானங்களின் இரைச்சலிலும் கேட்கும் திறத்தை இழக்க வேண்டிய எம் செவிகள் உங்களின் உறுதிமொழிகளின் நம்பிக்கையில் கேட்கும் சக்தியை இன்னமும் தக்க வைத்துக்கொண்டிருக்கின்றன.

தமிழக முதல்வர் ஜெயலலிதா அவர்களே! ஈழத்தமிழர்கள் அபயக் குரல் எழுப்பிய போதெல்லாம் கலைஞர் கருணாநிதியின் செவிகள் வன் செவிகளாயின. ஆனால் நீங்கள் அப்படியல்ல. உங்களிடம் நாம் கேட்பதெல்லாம் நாங்கள் அடி வேண்டினோம், உதை வேண்டினோம், சொத்திழுந்தோம், சொந்தம் இழந்தோம், உறவுகளின் பிணம் கடந்து மனித வாழ்வில் சந்திக்கக் கூடாத துன்பமெல்லாம் கண்டு முட்கம்பி முகாமிற்குள்ளும் அடைபட்டு, மிதிபட்டு மீண்டோம். மீளாமல் இருப்போரையும் கண்டோம்.

எமக்கு இனி இந்த உலகத்தைத் தந்தாலும் எங்கள் மனவடுக்கள் ஆறப்போவதில்லை, மாறப்போவதில்லை.

நாம் கேட்பதெல்லாம் எங்கள் இளம் சந்ததிகள் நாம் பட்ட வேதனையைப் படக்கூடாது. இதற்கு ஒருவழி வேண்டும். எங்களைப் போல் வீடிழந்து, நாடிழந்து, சந்திக்குச் சந்தி இறங்கி அடையாள அட்டை காட்டி, குடும்பப் பதிவு செய்து, குறூப் போட்டோ எடுத்து விசேட அடையாள அட்டைக்கு வரிசையில் நின்று – இந்தத் துன்பம் எங்கள் எதிர்காலச் சந்ததியின் வரலாற்றுக்கே இருக்கக்கூடாது. இதற்கு நீங்கள் உதவ வேண்டும்.

உங்களின் ஆட்சியில் ஈழத்தமிழினம் மீட்சி பெறட்டும். உதவுக.

## ஜெயலலிதாவுக்கு சோனியா வாழ்த்து

(சென்னை)

தமிழக சட்டசபை தேர்தலில் அமோக வெற்றி பெற்ற அ.தி.மு.க பொதுச் செயலாளர் ஜெயலலிதாவுக்கு வாழ்த்துக்கள் குவிந்த வண்ணம் உள்ளன.

பிரதமர் மன்மோகன் சிங் நேற்று முன்தினம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஜெயலலிதாவுக்கு வாழ்த்து தெரிவித்தார்.

பாரதிய ஜனதா தலைவர் எல்.கே. அத்வானி, தெலுங்கு தேச தலைவர் சந்திரபாபு நாயுடு, மத்திய மந்திரி ப.சிதம்பரம், குஜராத் முதல்மந்திரி நரேந்திரமோடி, டில்லி முதல்மந்திரி ஷீலா தீட்சித் ஆகியோரும் வாழ்த்து தெரிவித்தனர். காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி நேற்று காலை ஜெயலலிதாவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தேர்தல் வெற்றிக்காக வாழ்த்துக்களை தெரிவித்தார். (ஸ்ரீ)

## தங்கபாலு இராஜினாமா

தமிழக காங்கிரஸ் கட்சியின் தலைவர் தங்கபாலு, பேரவைத்தேர்தலில் தோல்வியடைந்ததையொட்டியும், காங்கிரஸ் அடைந்த தோல்விக்கு பொறுப்பேற்றும் தான் இராஜினாமா செய்யப்போவதாகக் கூறியுள்ளார்.

தி.மு.க கூட்டணியில் மிகவும் இழுபறிக்குப் பின் 63 தொகுதிகளைப் பெற்று களத்தில் இறங்கிய காங்கிரஸ் கட்சி, இந்தத்தேர்தலில் 5 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றது. இதனை அடுத்து இந்தத் தோல்விக்கு தார்மீகப் பொறுப்பேற்று, தமிழ்நாடு காங்கிரஸ் குழுத்தலைவர் பொறுப்பில் இருந்து தான் இராஜினாமா செய்யப்போவதாகவும், இராஜினாமாக் கடிதத்தை காங்கிரஸ் தலைவர் சோனியாவுக்கு அனுப்பவுள்ளதாகவும் தங்கபாலு தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# நல்லாயனாகிய இயேசுவின் பட்டியில் நாம் நல் மந்தைகளாக வாழ்வோம் (யோ:10:1-11)

யூதேயாவின் மலைப் பகுதியில் அன்று ஆடுகள் மேய்ச்சலுக்குச் சென்று மாலையில் வீடுகளுக்குத் திரும்பாத நிலை வழக்கமாயிற்று. இதனால் இந்த மந்தைகளை ஒன்றுசேர்த்து கதவற்ற சுவர் சூழ்ந்த ஓர் இடத்தில் அடைத்து வைத்துக் காப்பது வழக்கமாயிற்று. இந்த இடத்தில் கதவு இல்லாமையால் ஆடுகளின் ஆயனே அதன் வாயிலின் குறுக்கே படுத்துக்கொள்வான். அவரைத்தாண்டி எந்த ஆடும் வெளியே வராது.

இன்று திருச்சபை எமக்குத் தரும் நற்செய்தியில் இயேசு தன்னையே, மந்தையின் கதவாக, ஆயனாக, மதிலாக பாதுகாப்பிடமாக ஒப்பிட்டு நின்றான். "நல்ல ஆயன் நானே. நல்ல ஆயர் ஆடுகளுக்காகத் தம் உயிரைக் கொடுப்பார்". "அது போல நானும் என் ஆடுகளை அறிந்திருக்கின்றேன் என் ஆடுகளும் என்னை அறிந்திருக்கின்றன. அவைகளுக்காக எனது உயிரைக் கொடுக்கிறேன்" (யோ: 10:11:15) எனத் தன்னை நல்ல ஆயனாக வெளிப்படுத்திய இயேசு தம் ஆடுகளை தாம் அறிந்து வைத்திருக்கிறேன். "நானே வாயில், என் வழியாக நுழைவோருக்கு ஆபத்து இல்லை" என கூறுகிறார் இயேசுவை இறையாட்சியின் நுழைவாயில், வாழ்விற்குச் செல்லும் வாயில் மிகவும் ஒடுக்கமானது. வழியும் மிகக் குறுகலானது இதைக் கண்டுபிடிப்போர் சிலரே. (மத் 7:13-14) என்கிறார்.

இயேசுவை நல்ல ஆயனாக வாழ்விற்கு வழிகாட்டும் மெசியாவாக ஏற்று அவரைப் பின்பற்றுவோர் இவ்வழியை கண்டுகொள்வர், நிலைவாழ்வைப் பெறுவர். ஆண்டவரைச்சார்ந்தவர்கள் அவரை நன்கு அறிந்திருக்கின்றார்கள். அவரது குரலை கேட்கின்றார்கள், அவர்வழி நடந்து அவரைப் பின்பற்றுகின்றார்கள். இயேசு தாமே இறைமகன் என்றும் தம் மக்கள் யாரும் அழிந்து போகக் கூடாது என்பதற்காக ஆடுகளுக்கு ஆயன் போல் மனுக்குல மந்தைகளுக்கு நல்ல ஆயன் தாமே என அறிவித்து வந்தார். இயேசு நம் நல்ல ஆயர் என்றால் நாம் அவருடைய மந்தை. கடவுள் அன்போடும் பாசத்தோடும் பராமரிக்கின்ற மக்களே இங்கு "மந்தை" என்னும் உருவமாக குறிக்கப்படுகின்றனர்.

**1. நாம் நல்லாயர்களாக, நல் தலைவர்களாக திகழ வேண்டும்:**

அடுத்திருப்பவர்களை பராமரிக்கும் பொறுப்பிலிருக்கும் அனைவரும் ஆயர்களே, அவ்வாறாயின் இன்று பங்குத்தந்தையர்கள், பெற்றோர், ஆசிரியர்கள், வைத்தியர்கள், தாதியர்கள், அரச ஊழியர்கள் போன்ற அனைவரும் ஆயன்களே. எம்மிடம் ஒப்படைக்கப்பட்டவர்களை அன்பு செய்யும் போது, அவர்களுக்காக செபிக்கும் போது எமது நேரத்தை, திறமைகளை அவர்களுக்காக செலவழிக்கும் போது, நல்வாழ்விற்காக வாழ்த்தும் போது, சரீர ஆன்மீக ஆபத்திலிருந்து அவர்களுக்காக பாதுகாப்பு வழங்கும் போது நாம் நல்லாயர்களாகிறோம். இங்கு பெற்றோர், தமது பிள்ளைகளின் கடமைகளை குறித்து மிகவும் கவனமாக செயற்பட்டு முன்மாதிரியான வாழ்வு நடத்தும் போது. இயேசு போதித்த வாழ்வின் விழுமியங்களை அவர்களுக்கு கூறி அவர்கள் அவற்றை பின்பற்ற வழிகாட்டும் போது நல்லாயர்களாகின்றனர்.

**2. நல்லாயனாகிய இயேசுவின் பட்டியில் நாம் நல்மந்தைகளாக வேண்டும்.:**

எமது பங்குகள் மந்தைகளின் பட்டிகளாகும். எமது பங்குத்தந்தைகள் எமது நல்லாயர்களே. இயேசுவே எமது தலைமைக் குரு. எமது மறைமாவட்ட ஆயர்களே அப்போஸ்தலர் வழிவந்தவர்கள். பங்குத்தந்தையர்கள் எமது ஆயர்களின் துணையாளர்கள்.



பங்குமக்களாகிய நாம் அவருடைய மந்தைகள் ஆவோம். ஆகவே பங்குகளின் நல்மந்தைகளாகிய நாம் எமது ஆயர்களாகிய பங்குத் தந்தையர்கள் குரலை மறையுரையூடாக, விவிலிய வகுப்புக்களினூடாக, உள ஆற்றுப்படுத்தல் மற்றும் அறிவுரைகளூடாக கேட்டு தலைமைக் குரு இயேசுவின் வழியில் வாழ்வாக்க வேண்டும்.


'நானே வாயில்' என இயேசு கூறினார். இங்கு நாம் வாயில் சற்று சிந்தித்தால் வாயிலின் பரிமாணம் நீண்டு கொண்டே போவதால் நாட்டில் திருட்டும் தீமையும் பயமும் பாதுகாப்பின்மையும் பெருகிவருகின்றன என்று அர்த்தம் கொள்ளலாம். இயேசுவே எம் வீட்டுக்கு வாயிலானால், இதயத்திற்கு கதவானால் என்ன நடக்கும்? அனைத்தும் வடி கட்டப்படும். தீயவர்கள் அனைவரும் வாசலிலே நிறுத்தப்படுவர். தீய எண்ணங்கள், தீய செயல்வடிவங்கள் இதயத்துள் நுழையாமல் வடிகட்டப்படும். வெளியிலிருந்து தீயவன், திருடன் உள்ளே நுழையமுடியாது. இயேசு எங்கள் வீட்டின், இதயத்தின் தலை வாயிலாக இருக்க இயேசுவின் பட்டியில் நாம் நல்ல மந்தைகளாக வாழ்வோம்.

## பரமபிதா காட்டிய பாதை

ம. பிரான்சிஸ்,
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்.

# பாகிஸ்தான் இராணுவப் பயிற்சி மையம் முன் தலிபான்கள் தற்கொலைக் குண்டுத்தாக்குதல்

## 80 பேர் பலி, 115 பேர் காயம்



பாக்-ஆப்கான் எல்லைப் பகுதியில் உள்ள கைபர் பக்குன்வா மாகாணத்தில் சரஸ்ஸடா மாவட்டத்தில் உள்ள ஷப்கதார்என்றஇடத்தில்துணை நிலை இராணுவப் படையின் பயிற்சி வளாகம் அமைந்துள்ளது.கைபர் பக்குன்வா மாகாணத் தலைவர் பெஷாவரில்இருந்து35கி.மீதொலைவில் ஷப்கதார் உள்ளது.

எல்லை ஊர்க்காவல் படையில் பயிற்சி பெற்ற துணை

ஒசாமா பின்லேடன் கொலைக்கு பழி வாங்கும் விதத்தில் பாகிஸ்தானில் கைபர் பக்தூன் மாகாணத்தில் துணை நிலை இராணுவப் படை வளாகத்தில் நேற்று முன்தினம் தலிபான்கள் முதன்முதலாக நடத்திய தற்கொலைத் தாக்குதலில் 80 பேர் பலியாகினர்.

ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்ட உடன் அதற்குப் பழிக்குப் பழி வாங்குவோம் என்று தலிபான்கள் எச்சரிக்கை விடுத்திருந்தனர். நேற்று முன்தினம் அந்த எச்சரிக்கையை முதன் முறையாகப் பாகிஸ்தானில் செயற்படுத்தினர்.

நிலை இராணுவப் படை வீரர்கள் பலர் நேற்று முன்தினம் தங்கள் பயிற்சியை முடித்து விட்டு விடுமுறையைக் கழிக்க தங்கள் ஊருக்குப் புறப்படுவதற்காக ஒரு பேருந்தில் ஏறிக் கொண்டிருந்தனர்.

அப்போது வளாகத்தின் வாசற் பகுதியில் மோட்டார் சைக்கிளில் வந்த தற்கொலைக் குண்டுதாரி ஒருவர் தன் உடலில் கட்டப்பட்டிருந்த குண்டுகளை வெடிக்க செய்தார்.எட்டு நிமிடங்கள் கழித்து மற்றொரு தற்கொலை குண்டுதாரி மோட்டார் சைக்கிளில் வந்து குண்டுகளை வெடிக்கச் செய்தார்.இச் சம்பவத்தில் பேருந்தில் இருந்த 65 துணை நிலை இராணுவப் படை வீரர்கள் உள்ளிட்ட 80 பேர் பலியாகினர்.115 பேர் காயமடைந்தனர்.

தாரில் இ தலிபான் பாகிஸ்தான் என்ற பயங்கரவாத அமைப்பின் செய்தித் தொடர்பாளர் அஹ்சனுல்லா அஹ்சான் பழி வாங்கும் நடவடிக்கையில் இது முதல் தாக்குதல். தொடர்ந்து இதை விடப் பெரிய அளவில் தாக்குதல் நடக்கும் என்று எச்சரித்துள்ளார். (ஸ்ரீ- 2)

## பாகிஸ்தானில் அணுஉலைக்கூடம் பிரதமரால் திறந்து வைப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் பஞ்சாப் மாநிலத்தில் சாஸ்மா என்ற இடத்தில் சீன உதவியுடன் கட்டப்பட்ட 2 ஆவது அணு உலைக்கூடத்தை பிரதமர் கிலானி ஆரம்பித்து வைத்தார்.

இது அந்த நாட்டின் 3 அவது அணு உலைக்கூடம் ஆகும். இந்த அணு உலைக் கூடம் மூலம் 330 மெகாவேட் மின்சக்தியை உற் பத்தி செய்யமுடியும்.

திட்டமிட்ட காலத்துக்கு 3 மாதத்துக்கு முன்பு இந்த திட்டம் தொடங்கி வைக்கப்பட்டு உள்ளது. (ஸ்ரீ-2)






நைஜீரியாவில் இராணுவ நடவடிக்கையால் 14 மாதங்கள் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்த அந்நாட்டு முன்னாள் ஜனாதிபதியின் மெமாடுடான்ஜா (நடுவில்) விடுதலை செய்யப்பட்டார். நியாமி நகரில் உள்ள தமது வீட்டிலிருந்து பொதுமக்களை சந்திப்பதற்காக வருகை தந்தார்.

## அல்கொய்தாவின் அடுத்த தலைவர் யார்? குழப்பமும் இழுபறியும் நீடிக்கிறது

(வோஷிங்டன்)

பின்லேடன் கொல்லப்பட்டு விட்டதால் அல்கொய்தா இயக்கத்தை எதிர்வரும் காலத்தில் வழிநடத்திச் செல்வது யார் என்பதில் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. பின்லேடனுக்கு அடுத்த இடத்தில் பொறுப்பு வகித்த அல்-ஜவாஹிரி புதிய தலைவராக பொறுப்பு ஏற்பார் என்று தகவல்கள் வெளியானது.

அல்-ஜவாஹிரிக்கு,அல் கொய்தா அமைப்பிலும், உலகம் முழுவதும் உள்ள அதன் துணை அமைப்புகளிலும் போதுமான ஆதரவு கிடைக்கவில்லை. அல்-ஜவாஹிரிக்கு எதிரான நிலை அதிகம் உள்ளது. இதனால் அல் கொய்தாவின் தலைமை பொறுப்புக்கு வருவதற்கு ஜவாஹிரிக்கு சாதகமான சூழ்நிலை இல்லை. இலியாஸ் காஷ்மீரி என்பவர் தேர்வு செய்யப்பட கூடும் என்று அமெரிக்கா கருதுகிறது.

இவர் தற்கொலை தீவிரவாதிகளுக்கு பயிற்சி அளிப்பவர் என்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. உலகின் பல இடங்களிலும் நடந்த தாக்குதல்களில் இவருக்கு நேரடி தொடர்பு இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. காஷ்மீரில் உள்ள ஏராளமானவர்களுக்கு இவர் ஆயுதப்பயிற்சி கொடுத்து இருப்பதாகவும் கூறப்படுகிறது. ஹர்கத் - உல்- ஜிகாத் - இ-இஸ்லாமி என்ற இயக்கத்தையும் இவர் வழி நடத்தி வந்தார். இலியாஸ் காஷ்மீரி தலைவராக தேர்வு செய்யப்படாத பட்சத்தில் பின்லேடனின் இடத்துக்கு யாரும் தேர்வு செய்யப்படமாட்டார்கள் என்று ஒரு தகவல் வெளியாகியுள்ளது. இதனால் அல்- கொய்தாவின் அடுத்த தலைவர் யார்? என்பதில் குழப்பமும் இழுபறியும் நீடிக்கிறது. (ஸ்ரீ-2)

## கென்யாவில் வசிக்கும் ஒபாமாவின் பாட்டிக்கு அல்கொய்தா மிரட்டல்

(நியூயோர்க்)



அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் பூர்வீகம் ஆபிரிக்காவில் உள்ள கென்யா ஆகும். ஒபாமாவின் பெற்றோர் அமெரிக்காவுக்கு சென்று குடியேறினார்கள். கென்யாவின் மேற்கு பகுதியில் உள்ள கிஸ்மு நகரில் ஒபாமாவின் 88 வயது பாட்டி சாரா ஒபாமா வசித்து வருகிறார்.

பாகிஸ்தானில் அமெரிக்கா தாக்குதல் நடத்தி பின்லேடனை சுட்டுக் கொன்றது. இதனையடுத்து கென்யாவில் தங்கியிருக்கும் ஒபாமாவின் பாட்டிக்கு அல் கொய்தா இயக்கம் மிரட்டல் விடுத்துள்ளது.

அல்கொய்தா இயக்கத்தின் சோமாலியா பிரிவு இந்த மிரட்டலை விடுத்துள்ளது. மிரட்டல் விடுத்து இருப்பதை கென்யா பொலிஸார் உறுதி செய்துள்ளனர்.

இதையடுத்து கென்யாவில் வசிக்கும் ஒபாமாவின் மூதாதையரின் குடும்பத்துக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. இது குறித்து கென்யா பொலிஸார் கூறுகையில், சாரா ஒபாமாவின் வீட்டில் தாக்குதல் நடத்தப் போதாக மிரட்டல் விடுத்துள்ளதையடுத்து பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது என்றனர். சாரா ஒபாமா கூறுகையில்,

இந்த மிரட்டல்களால் எனது வாழ்க்கை பாதிக்கப்படாது. வழக்கம்போல் நடமாடுவோம். அரசாங்கம் எங்களுக்கு பாதுகாப்பு அளிக்க முடிவு செய்தால் அதை ஏற்றுக் கொள்வோம் என்றார். (ஸ்ரீ-2)



ஸ்லோவாகியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ரஷ்ய பிரதமர் விளாடிமிர் புடின் (இடது பிராடி ஸ்லாவா நகரில் அந்நாட்டின் பிரதமர் இ வெட்டா ரேடிகோவாவை சந்தித்ததைப் படத்தில் காணலாம்.

## பாகிஸ்தானுக்கு பொருளாதார உதவிகளை நிறுத்த வேண்டும்

### அமெரிக்காவுக்கு உலக நாடுகள் கோரிக்கை

சர்வதேச பயங்கரவாதி பின்லேடன் அமெரிக்க அதிரடிப்படையினரால்சுட்டுக்கொல்லப்பட்டார். பின்லேடன் பாகிஸ்தானில் தங்கியிருந்தது அந்த நாட்டு உளவுப்படைக்குத் தெரியுமா என்ற சந்தேகம் உலகமக்களிடையே உள்ளது.

பாகிஸ்தான் ஒரு தீவிரவாத ஆதரவு நாடு. எனவே பாகிஸ்தானுக்கு அமெரிக்கா அளித்து வரும் இராணுவம் மற்றும் பொருளாதார உதவிகளை நிறுத்திக்கொள்ள வேண்டும். இதுவே தீவிரவாதத்துக்குத் துணைபோகும் பாகிஸ்தானுக்கு அமெரிக்காஅளிக்கும் பதிலடியாக இருக்கும் என்று சர்வதேச அரசியல் வல்லுநர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

DLF IPL ஐ.பி.எல் கொண்டாட்டம்

ஏப்பிரல் 8 முதல் மே 28 வரை

# மும்பை அணிக்கு அடுத்த அடி; டெக்கான் சார்ஜர்ஸிடம் தோல்வி



(மும்பை)

டாவான், ஆனந்ராஜனின் அபார ஆட்டத்தின் மூலம் டெக்கான் சார்ஜர்ஸ் அணி 10 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மும்பை இந்தியன்ஸ் அணியை வீழ்த்தியது.

ஐ.பி.எல். தொடரில் நேற்று மும்பையில் நடைபெற்ற 58ஆவது போட்டியில் டெண்டுல்கர் தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணியும் சங்கக்கார தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணியும் மோதின.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய டெக்கான் சார்ஜர்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளையிழந்து 135 ஓட்டங்களை எடுத்தது.

இதில் டாவான் ஆட்டமிழக்காமல் 18 பந்துகளில் (2 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 27 ஓட்டங்களையும் அணித்தலைவர் குமார் சங்கக்கார 28 பந்துகளில் (ஒரு பவுண்டரி, ஒரு சிக்ஸர் உட்பட) 27 ஓட்டங்களையும் அமித் மிர்ஷா ஆட்டமிழக்காமல் 6 பந்துகளில் (4 பவுண்டரிகள் உட்பட) 18 ஓட்டங்களையும் கிறிஸ்ரியன் 18, சொகால் 20 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் குல்கர்னி 3 விக்கெட்டுகளையும் மலிங்க, ஹர்பஜன் சிங், பொல்லார்ட் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 136 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்கை விரட்டிய மும்பை இந்தியன்ஸ் அணி ஆனந்ராஜன் - இஷாந்த் வேகத்தில் சிக்கி 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளையிழந்து 125 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 10 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இதில் அணித்தலைவர் சச்சின் டெண்டுல்கர் 42 பந்துகளில் (3 பவுண்டரிகள் உட்பட) 37 ஓட்டங்களையும் பொல்லார்ட் 13 பந்துகளில் (3 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 24 ஓட்டங்களையும் ஹர்பஜன் சிங் ஆட்டமிழக்காமல் 12 பந்துகளில் (ஒரு பவுண்டரி, ஒரு சிக்ஸர் உட்பட) 17 ஓட்டங்களையும் சைமண்ட்ஸ் 14 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஆனந்ராஜன் 3 விக்கெட்டுகளையும் இஷாந்த் சர்மா 2 விக்கெட்டுகளையும் டுமினி, அமித் மிர்ஷா தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ்வெற்றியின் மூலம் டெக்கான் சார்ஜர்ஸ் அணி தான் விளையாடிய 12 ஆவது போட்டியில் 4ஆவது வெற்றியைப் பதிவு செய்தது.

இதேவேளை மும்பை இந்தியன்ஸ் அணி கடந்த போட்டியில் கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியிடம் தோல்வியடைந்த நிலையில் நேற்றைய போட்டியிலும் தோல்வி கண்டது.

# 'பிளே ஓப்' சுற்றில் பெங்களூர் அணி கொல்கத்தாவுக்கு மழையால் வந்த சோகம்

(பெங்களூர்)

ஹயிலின் அதிரடியில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி டக்-வேர்த் லூயிஸ் முறையில் 4விக்கெட்டுக்களால் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியை வீழ்த்தியது.

இதன் மூலம் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி பிளே ஓப் சுற்றுக்கு முன்னேறியது.

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) அமைப்பில் 10 அணிகள் மோதும் 4 ஆவது இருபது-20 கிரிக்கெட் தொடரில் நேற்று பெங்களூரில் நடைபெற்ற 58-வது போட்டியில் விக்டோரி தலைமையிலான பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணியும் காம்பீர் தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் மோதின.



இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணித்தலைவர் டானியல் விக்டோரி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 11ஓவர்களில் 3விக்கெட்டுக்களையிழந்து 63 ஓட்டங்களை எடுத்த போது மழையின் குறுக்கீட்டால் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.

இந்நிலையில் இரு மணி நேரத்தின் பின் மழை விட மீண்டும் ஆட்டம் ஆரம்பமான போது டக்-வேத் லூயிஸ் முறையில் இரு அணிகளுக்கும் 13ஓவர்களாக போட்டி மாற்றம் செய்யப்பட்டது.

இதனடிப்படையில் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 13ஓவர்களில் 4விக்கெட்டுக்ளையிழந்து 89ஓட்டங்களை எடுத்தது.

இதில் யூசுப் பதான் 24 பந்துகளில் (2 பவுண்டரிகள், 3சிக்ஸர்கள் உட்பட) 36 ஓட்டங்களையும், மனோஜ் தீவாரி 19,ஜக்கலிஸ் 17ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் லாங்வெல்ட்ற 2விக்கெட்டுக்களையும் சகீர்கான், சுரவிந்த் ஆகியோர் தலா ஒரு விக் கெட்டையும் வீழ்த்தினர்.

டக்-வேல்த் லூயிஸ் முறையில் பதிலுக்கு 13ஓவர்களில் 102ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ்அணிக்கு கிறிஸ் ஹயில் அதிரடி ஆரம்பம் வழங்கி னார்.

இதில் கிறிஸ் ஹயில் 12பந்துகளில் (6 பவுண்டரிகள், 2சிக்ஸ்சர்கள் உட்பட) 38ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து போமேர் ஸ்பாச் 16, விராட் ஹோலி 15,கைப் 15 ஓட்டங்களுடனும், அருண் கார்த்திக் சௌரவ் திவாரி தலா ஒரு ஓட்டத்துடனும் ஆட்டமிழந்தனர்.

எனினும் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி 12.3 ஓவர்களில் 6விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 105ஓட்டங்களைக் குவித்து டக்-வோர்த் லூயிஸ் முறையில் 4விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.இதில் ஏ.பி.டி வில்லியர்ஸ் ஆட்டமிழக்காமல் 13 ஓட்டங்களை எடுத்தார்.

பந்துவீச்சில் ஜக்கலிஸ் 2விக்கெட்டுக்களையும் பிரேட்லீ, யுனாட்கட், அப்துல்லா தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர். இவ்வெற்றியின் மூலம் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணிதான் விளையாடிய 12 ஆவது போட்டியில் 8ஆவது வெற்றியைப் (ஒரு சமனிலை உட்பட) பெற்று 17புள்ளிகளு டன் பிளே ஓப் சுற்றுக்கு முன்னேறியது. இப் போட்டியில் ஆட்டநாயகனாக பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணியின் கிறிஸ் ஹயில் தெரிவானார்.

## இன்றைய ஆட்டங்கள்




## புள்ளிப் பட்டியல்

| அணிகள் | போட்டி | வெற்றி | தோல்வி | சமனிலை | முடிபில்லை | புள்ளிகள் | நிகர ஓட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| றோயல் சலஞ்ஜர்ஸ் | 12 | 8 | 3 | 0 | 1 | 17 | +0.849 |
| சென்னை | 12 | 8 | 4 | 0 | 0 | 16 | +0.544 |
| மும்பை இந்தியன்ஸ் | 12 | 8 | 4 | 0 | 0 | 16 | +0.245 |
| கொல்கத்தா | 12 | 7 | 5 | 0 | 0 | 14 | +0.403 |
| ராஜஸ்தான் றோயல்ஸ் | 12 | 5 | 6 | 0 | 1 | 11 | -0.587 |
| கிங்ஸ் லெவின் பஞ்சாப் | 11 | 5 | 6 | 0 | 0 | 10 | -0.338 |
| கொச்சி | 12 | 5 | 7 | 0 | 0 | 10 | -0.628 |
| புனே வாரியர்ஸ் | 11 | 4 | 7 | 0 | 0 | 8 | -0.003 |
| டெக்கான் சார்ஜர்ஸ் | 12 | 4 | 8 | 0 | 0 | 8 | -0.117 |
| டில்லி | 12 | 4 | 8 | 0 | 0 | 8 | -0.363 |

DHL உத்தரவு பெற்ற முகவர்

உள்நாடு,வெளிநாடுகளில் உள்ள உறவுகளுக்கான
துரித கடிதங்கள் பொதிகள் சேவை

10Kg மேற்பட்ட பொதிகளுக்கு
விசேட விலைக்கழிவு

DHL உடன்
5 வருட பூர்த்தியை முன்னிட்டு
விசேட சலுகைகள்

உள்நாடு,வெளிநாடுகளில் உள்ள உங்கள் உறவுகளுக்கு
கடிதங்கள்,அன்பளிப்புபொருட்கள்,DVD,CD போன்ற
பொருட்களை மிகவிரைவாகவும் பாதுகாப்பாகவும்அனுப்பிட



# திருமுருகன் கொம்நெற்

TCN Expres.
2B,Nelsan place,COlombo-06.
Customer service No.021 222 7538

இல.259,கே.கே.எஸ் வீதி,யாழ்பாணம். இல.18.பிரதானவீதி.நெல்லியடி. இல.05.திருநகர் பிரதான வீதி.கிளிநொச்சி. இல.46.ஆடியபாதம் வீதி.திருநெல்வேலி.



# இறைச்சிக் கோழி விற்பனை

CSI

சுத்தம் செய்த நிறை Kg - 420/=
முழுநிறை Kg - 270 /=

**வரணி மிஷன் பாம், வரணி**

தொடர்புகளுக்கு: 0777715367

(4895)



# தேவை

I ) GRAPHICS DESIGNER & PAGE PLANER
II ) வாகன சாரதி

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

**கொனிக்கா கலர் லாப்**

14, ஸ்ரீ வெங்கடேசன் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.:0772349933 E-mail:konicactp@gmail.com

(#-3205)



# STUDY IN UK
# SPOT ADMISSION

STUDY.S U-K

யாழ் மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

எதிர்வரும் சில தினங்களில் UK இல் இருந்து வருகை தரும் கல்லூரிப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி உடனடி அனுமதிகளைப் பெற்றுக் கொள்ள ஓர் அரிய சந்தர்ப்பம்.

மொத்தச் செலவு 8 லட்சம் மட்டுமே

- O/L தகைமை போதுமானது.
- இரு வாரத்தினுள் VFS இல் ஆவணங்கள் கையளிக்கப்படும்.
- பகுதி நேர வேலைவாய்ப்பிற்கான உத்தரவாதம்.
- ஆங்கிலத் திறமை குறைந்தவர்களுக்கு இலவச தங்குமிடத்துடன் கூடிய இலவச ஆங்கில வகுப்புக்கள் தலைநகரில்...
- நாம் குறிப்பிடும் காலப் பகுதியினுள் UK செல்லா விட்டால் நீங்கள் செலுத்திய சகல பணத்தினையும் மீளப்பெறலாம்.
- பதிவுக் கட்டணம் 20,000/= மட்டுமே
- தொலைபேசியில் தொடர்பு கொண்ட பின்னர் நேரில் வரவும்.

முயற்சி திருவினையாக்கும்

கடந்த வாரங்களில் எம் மூலமாக UK சென்ற மாணவர்களில் சிலர்



அஸ்ரன் தங்கராஜா | தங்கராசா சுமதாஸ் | சூரியகுமார் ராஜகுமார் | விஜயரட்ணம் விஜிதா | ராஜகுமார் அனுஷா

தொடர்புகளுக்கு :-
Sana : 0776277767

GLOBAL VISION (PVT) Ltd
247, Palaly Road,
Kantharmadam

- எமக்கு இலங்கையில் வேறு எப்பகுதியிலும் கிளைகள் இல்லை



# NOTICE
## CITY COLLEGE OF ENGLISH

இது வரை காலமும் British College of English என்ற பெயருடன் கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்த எமது நிறுவனம் City of London College உடன் இணைந்து பல்வேறு கல்வி நடவடிக்கைகளையும் மேற்கொள்ள இருப்பதால் மே மாதம் 16ம் திகதியிலிருந்து City College of English என்ற பெயரில் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என மாணவர்களிற்கும், பெற்றோர்களுக்கும் அன்புடன் அறியத்தருகின்றோம்.

## CITY COLLEGE OF ENGLISH

Affiliated With

UNIVERSITY of CAMBRIDGE ESOL Examinations — English for Speakers of Other Languages | City & Guilds | BRITISH COUNCIL

DIRECTORS

Mr.K.NAGARAJAN. B.A (cey)
- M.A (Kelaniya)
- TKT (Cambridge. UK)

Rev. Fr. A. SAHAYATHASAN
- Bachelor of Arts (English), University of Jaffna.
- Master of Arts (English Literature), University of Sydney, Australia.
- Master of Arts (50% research, English Literature), Griffith University, Australia.

கடந்த 08 வருடங்களாக நூற்றுக்கணக்கான மாணவர்கள் எமது கல்லூரியில் படித்து சர்வதேச சான்றிதழ்களை பெற்றிருக்கிறார்கள். வருங்காலங்களிலும் தொடர்ந்தும் எமது பணியை செய்வோம் என உறுதிகின்றோம்.

City College LONDON



CITY COLLEGE OF ENGLISH
143, Adiyapatham Road,
Thirunelvely.
0213216027, 0778803887

(C-3179)



# ESOL Diploma in English

City & Guilds Approved Centre

City & Guilds a Royal Chartered Institution is one of the world's leading vacational qualification awarding bodies. எமது கல்லூரி City & Guilds Rayal Charter இனதும் Cambridge பல்கலைக் கழகத்தினதும் பதிவு செய்த நிலையமாகும்.



Our Lecturers

1. Mr.K.NAGARAJAN. B.A (cey)
   M.A (Kelaniya) TKT (Cambridge. UK)
   a. 15 வருடங்கள் கிழக்குப் பல்கலைக்கழக ELTU வில் போதனாசிரியராக இருந்தவர்.
   b. 20 வருடங்களுக்கு மேலாகத் திறந்த பல்கலைக்கழக வருகை தரு ENGLISH Tutor ஆக இருப்பவர்.
   c. Served as a tutor for the promotion of the Quality Improvement of Teachers by Secretary for Education chaired by the State Secretary for Education.
2. Rev.Fr.A.Sahayathasan
   M.A (English Language) University of Sydney
   M.A (English Litterature) University of Sydney

Why City & Guilds English Qualifications?

Recogized by UK Universities and UK Border Agency
Directly Linked to the Common European Framework
Certificate for Lifetime

We are pleased to announce that City & Guilds IESOL*at B2 (Communicator) and C1 (Expert) levels has been recognised as meeting the requirements of the Home Office Border and Immigration Agency's Points Based System

B2,C1 மட்டங்களில் பல மாணவர்கள் எமது கல்லூரியில் படித்து பரீட்சையில் சித்தியடைந்து City & Guilds ன் சான்றிதழ்களையும் பெற்று வெளிநாடுகளிற்கு சென்றுள்ளனர். பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

குறுகியகாலத்தில் பூரண ஆங்கில அறிவினைப் பெற சரளமாக எந்தச் சூழ்நிலையிலும் ஆங்கிலத்தில் பேச, இலக்கணப்பிழைகள் இல்லாமல் எழுத, எந்த ஆங்கிலப் பத்திரிகையையும் இலகுவாகப் படிக்க ஏற்ற ஓர் பாடநெறி. அடிப்படையில் இருந்து ஆங்கிலம் போதிக்கப்படும்.

திருமணம் செய்த இல்லத்தரசிகள் அல்லது British பிரஜைகளை திருமணம் செய்ய இருக்கும் அனைவரும் கட்டாயமாக ஆங்கிலத்தில் தேர்ச்சியடைய வேண்டும். UK Border Agency அங்கீகரிக்கும் பாடநெறி City & Guilds இன் Diploma in English (A1, A2) மட்டுமே
எல்லா மட்டங்களிலும் பூரண கல்வியை பெற்று எமது கல்லூரியில் பரீட்சையை எழுத முடியும்.

| Course Schedule | Mon -Tue-Wed-Thu-Fri | Sat & Sun |
|---|---|---|
| Duration | 2 Months (100 hours) | 3 Months (100 hours) |
| Time | 8.30.10.30 a.m 10.30.12.30 p.m | 8.30.11.30 a.m |
| Commencement | 18.05.2011 | 21.05.2011 |

**Registration : Rs 500/= Course Fee :100 /= per hour**

**வகுப்புகள் 18.05.2011 ஆரம்பம்**

# CITY COLLEGE OF ENGLISH

(திருநெல்வேலிச் சந்திக்கும் கல்வியங்காட்டுச் சந்திக்கும் இடையில்)

143, Adiyapatham Road, Thirunelvely. T.P: 0213216027 - 0778803887

(C-3180)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.05.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.